




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:281 | 26-04-2026 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி







## இன்றைய பஞ்சாங்கம்

26.04.2026 சித்திரை 13
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 5.59

திதி:
இன்று இரவு 9.33 வரை தசமி பின்பு ஏகாதசி.

நட்சத்திரம்:
இன்று இரவு 11.37 வரை மகம் பின்பு பூரம்.

யோகம் :
இன்று அதிகாலை 3.03 வரை கண்டம் பின்பு விருத்தி

கரணம்
இன்று காலை 10.06 வரை தைதுலம் பின்பு இரவு 9.33 வரை கரசை பின்பு வணிசை

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.00 வரை அமிர்த யோகம் பின்பு இரவு 11.37 வரை யோகம் சரியில்லை பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று இரவு 11.30 வரை உத்திராடம் பின்பு திருவோணம்.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 3.30 – 4.30.

இராகு காலம்
மாலை 4.30 – 6.00.

எமகண்டம்
பிற்பகல் 12.00 – 1.30.

குளிகை
பிற்பகல் 3.00 – 4.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# வாக்கு எண்ணும் மையங்களில் தினமும் 2 முறை சென்று ஆய்வு நடத்த வேண்டும்: தேர்தல் ஆணையம் உத்தரவு

## வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பு பணிக்காக சுமார் 18 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு




**சென்னை, ஏப்.26**

தமிழக சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஒரே கட்டமாக நடந்தது. மொத்தமுள்ள 5.73 கோடி வாக்காளர்களில், 4.88 கோடி பேர் வாக்களித்தனர். அதாவது, 85.15 சதவீதம் வாக்குகள் பதிவாகியது.

இது 75 ஆண்டுகால தமிழக அரசியலில் இதுவரை நடக்காத அதிசயம். தமிழகத்தில் கடந்த 1952-ம் ஆண்டு நடந்த தேர்தலில் 56.41 சதவீத வாக்குகள் பதிவாகியது.

2011-ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் 78.12 சதவீத வாக்குகள் பதிவாகியது. இதுவே தமிழகத்தின் உச்சபட்ச வாக்குப்பதிவாக இருந்தது. 2021-ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் 72.81 சதவீத வாக்குகள் பதிவாகியது. ஆனால் இதுவரை இல்லாத அளவுக்கு இந்த தேர்தலில் 85.15 சதவீத வாக்குகள் பதிவாகி இருப்பது பெரும் பேசு பொருளாக மாறியுள்ளது.

முதல்முறை வாக்காளர்கள், இளைஞர்கள், பெண்கள் காலையிலே திரண்டு வந்து வாக்களித் தனர். வெளிநாட்டில் வேலை பார்ப்பவர்கள், வெளி மாநிலங்கள், வெளி மாவட்டங்களில் வேலைபார்ப்பவர்கள் என பல்வேறு தரப்பினரும் திரண்டு வந்து வாக்களித்ததால் நேற்று முன்தினம் வாக்குச்சாவடிகள் அனைத்தும் திருவிழாகோலமாக காட்சியளித்தன.

தி.மு.க., அ.தி.மு.க.. நாம் தமிழர் ஆகிய கட்சிகளுடன் அரசியலில் புதிய வரவான த.வெ.க.வும் தேர்தல் களத்தில் பயணித்ததால் எப்போதும் இல்லாத அளவுக்கு வாக்குப்பதிவு உயர்ந்துள்ளதாக கருதப்படுகிறது. மேலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தமும் இதற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது.

பல்வேறு கணக்குகள் கூறப்பட்டாலும், வாக்காளர்களின் எழுச்சி வாக்கு சதவீதம் உயர்வுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. குறிப்பாக, 21.67 லட்சம் பேர் கூடுதலாக இந்த முறை வாக்களித்து இருக்கிறார்கள்.

இதற்கிடையே, இந்த உச்சப்பட்ச, வரலாறு காணாத வாக்கு சதவீதம் யாருக்கு சாதகம்? என்ற கேள்வி அரசியல் அரங்கில் பலமாக ஒலிக்க தொடங்கியுள்ளது.

வாக்கு எண்ணிக்கைக்கு இன்னும் 9 நாட்கள் இருக்கும் நிலையில், யாருக்கு வெற்றி என்பது தொடர்பாக வலைத்தளங்களிலும், டீக்கடைகளிலும், ரெயில் நிலையங்களிலும், முடி திருத்தம் கடைகளிலும் பரபரப்பாக விவாதிக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், சட்டசபை தேர்தலில் பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் 62 மையங்களில் வைக்கப்பட்டுள்ளன. அங்கு நவீன கேமராக்கள் மூலம் இரவு, பகலாக தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள மையங்களில் இடங்களுக்கு தகுந்தபடி 3, 4,5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மையத்திலும் 24 மணிநேரமும் சுழற்சி முறையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகிறார்கள். பாதுகாப்பு அரணின் முதல் அடுக்கில் எந்திர துப்பாக்கி ஏந்திய துணை ராணுவப்படை வீரர்கள் உள்ளனர்.

தமிழகம் முழுவதும் வாக்கு எண்ணுமை மைய பாதுகாப்பு பணிக்காக சுமார் 18 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வாக்கு எண்ணும் மையங்களிலும் நவீன கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு இரவு, பகலாக கண்காணிக்கப்படுகிறது. வாக்கு எண்ணிக்கை தினமான வருகிற மே 4-ந்தேதி வரை 62 மையங்களும் தீவிர கண்காணிப்பின் கீழ் இருக்கும். வாக்கு எண்ணும் மையங்களுக்குள். செல்போன்கள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. வாக்கு எண்ணும் தினத்தில் அந்த மையங்களின் வளாகத்திற்குள் பட்டாசு வெடிக்கவும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தமிழகத்தில் 62 மையங்களில் வைக்கப்பட்டுள்ள வாக்குப்பதிவு இயந்திரங்கள் தினமும் 2 முறை ஆய்வு செய்யப்படும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

*வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்தவும், வாக்குச்சாவடிகளில் ஏதேனும் முறைகேடுகள் நடந்திருந்தால் அதைக் கண்டறிந்து, தேவைப்பட்டால் மறுவாக்குப்பதிவுக்குப் பரிந்துரைக்கவும், படிவம் 17A (வாக்காளர் வருகைப் பதிவேடு) மற்றும் வாக்குப்பதிவு நாளன்று பயன்படுத்தப்பட்ட பிற தேர்தல் ஆவணங்களை வாக்குப்பதிவிற்குப் பிந்தைய சரிபார்ப்பு குறித்த ஒருங்கிணைந்த அறிவுறுத்தல்களை இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) வெளியிட்டுள்ளது.

* அதன்படி, ஏப்ரல் 24, 2026 அன்று, மேற்கு வங்கத்தில் (முதற்கட்டம்) வாக்குப்பதிவு நடைபெற்ற அனைத்து 152 சட்டப்பேரவைத்தொகுதிகளிலும் (ACs), பொதுப் பார்வையாளர்கள் (GO) மற்றும் 600-க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் தேர்தல் நடத்தும் அலுவலர்களால் (RO) ஆவணங்கள் சரிபார்ப்பு சுமுகமாக நடத்தப்பட்டது.

*. மேற்கு வங்கப் பொதுத்தேர்தலின் முதற்கட்டத்தில், மொத்தம் உள்ள 1,478 வேட்பாளர்களுக்கும் சரிபார்ப்பு செயல்முறையில் பங்கேற்பதற்கான தேதி, நேரம் மற்றும் இடம் குறித்து முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டது. ஏப்ரல் 23, 2023 அன்று வாக்குப்பதிவு நடைபெற்ற 44,376 வாக்குச்சாவடிகளில், சரிபார்ப்பிற்குப் பிறகு எந்த ஒரு மறுவாக்குப்பதிவும் பரிந்துரைக்கப்படவில்லை.

*இதேபோல், தமிழ்நாட்டில் வாக்குப்பதிவு நடைபெற்ற அனைத்து 234 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும், ஏப்ரல் 24, 2026 அன்று பொதுப்பார்வையாளர்கள் மற்றும் 1,825 வேட்பாளர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் தேர்தல் நடத்தும் அலுவலர்களால் ஆவணங்கள் சரிபார்ப்பு சுமுகமாக நடத்தப்பட்டது.

*தமிழகப் பொதுத்தேர்தலில், மொத்தம் உள்ள 4,023 வேட்பாளர்களுக்கும் சரிபார்ப்பு செயல்முறையில் பங்கேற்பதற்கான விவரங்கள் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டன. ஏப்ரல் 23 அன்று வாக்குப்பதிவு நடைபெற்ற 75,064 வாக்குச்சாவடிகளில், சரிபார்ப்பிற்குப் பிறகு எந்த ஒரு மறுவாக்குப்பதிவும் பரிந்துரைக்கப்படவில்லை.

*இரு மாநிலங்களிலும் இந்த முழு செயல்முறையும் காணொளி பதிவு (videographed) செய்யப்பட்டது. சரிபார்ப்பிற்குப் பிறகு, படிவம் 17A மற்றும் தொடர்புடைய பொருட்கள் அனைத்தும் தேர்தல் நடத்தும் அலுவலரின் (RO) முத்திரையிடப்பட்டு மீண்டும் சீல் வைக்கப்பட்டன.

* ஏப்ரல் 23, 2026 அன்று வாக்குப்பதிவு முடிந்ததும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் (EVM-VVPATs) பொதுப்பார்வையாளர்கள் மற்றும் வேட்பாளர்கள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டு, பாதுகாப்பு அறைகளில் (Strong Rooms) பத்திரமாக வைக்கப்பட்டுள்ளன.

*வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகளுக்கு இரட்டைப் பூட்டு முறை, 24 மணி நேரமும் சுழற்சி முறையில் இரண்டு அடுக்கு பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு அறையின் கதவுகள்/தாழ்வாரங்களில் சிசிடிவி (CCTV) கண்காணிப்பு உள்ளிட்ட விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

* தேர்தல் நடத்தும் அலுவலர்கள் (ROs) பாதுகாப்பு அறைகளுக்கு ஒரு நாளில் இருமுறை நேரில் சென்று ஏற்பாடுகளைச் சரிபார்க்க உத்தரவிடப்பட்டுள்ளது. மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் (DEOs) தலைமையகத்தில் உள்ள பாதுகாப்பு அறைகளுக்குத் தினமும் ஒருமுறையும், தலைமையகத்திற்கு வெளியே உள்ள அறைகளுக்கு 3-4 நாட்களுக்கு ஒருமுறையும் நேரில் சென்று ஆய்வு செய்வார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கம்பம் பட்டாசு ஆலையில் விபத்து: 2 தொழிலாளர்கள் உயிரிழப்பு



**கம்பம், ஏப்.26:**

கம்பம் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி இருவர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

கம்பம் பாரதியார் நகரைச் சேர்ந்த திருப்பதி. இவர் கம்பம் மேற்கு பகுதியான காட்டுப்பள்ளி வாசல் சாலையில் பட்டாசு ஆலை நடத்தி வருகிறார். சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு அரசு உத்தரவின்படி கடந்த 21-ஆம் தேதி முதல் 24-ஆம் தேதி பட்டாசு ஆலை மூடப்பட்டது. மீண்டும் இன்று (சனி) காலை தொழிற்சாலை செயல்படத் தொடங்கியது.

இங்கு கம்பம் பாரதியார் நகரைச் சேர்ந்த அய்யப்பன் (27), நாகார்ஜுன் (22), சாலிமரம் தெருவைச் சேர்ந்த சூர்யா (22) மற்றும் நெல்லு குத்தி புளியமரம் தெருவை சேர்ந்த தினேஷ் (20), ஆகியோர் வேலை செய்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில் சூர்யா, தினேஷ் ஆகியோர் வெடி மருந்து எடுப்பதற்காக கிடங்கைத் திறந்தனர். அப்போது எதிர்பாராத விதமாக பலத்த சத்தத்துடன் வெடிமருந்து வெடித்தது. இதில் சூர்யா, தினேஷ் தூக்கி எறியப்பட்டு உடல் சிதறி உயிரிழந்தனர். அருகில் இருந்தவர்கள் கம்பம் வடக்கு காவல் நிலையம் மற்றும் தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த போலீஸார் மற்றும் தீயணைப்புத்துறையினர் சிதறிக் கிடந்த சூர்யா, தினேஷின் உடலை கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பினர். கம்பம் வடக்கு போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

## தமிழ்நாடு, மேற்கு வங்கத்தில் எங்கும் மறு வாக்குப்பதிவு இல்லை: தேர்தல் அதிகாரிகள் தகவல்



**புதுடெல்லி, ஏப்.26:**

கடந்த 23-ம் தேதி நடந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் மேற்கு வங்க சட்டப்பேரவை முதற்கட்டத் தேர்தல் ஆகியவற்றில் எந்த வாக்குச் சாவடியிலும் மறு வாக்குப்பதிவுக்கு உத்தரவிடப்படவில்லை என்று இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தின் 234 சட்டப்பேரவைத்தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக கடந்த 23-ம் தேதி தேர்தல் நடைபெற்றது. மொத்தம் 75,064 வாக்குச்சாவடிகளில் வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதில், வரலாறு காணாத அளவாக 85.15% வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

அதே நாளில் மேற்கு வங்க சட்டப்பேரவைக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற்றது. மொத்தமுள்ள 294 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 152 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்றது. 44,376 வாக்குச் சாவடிகளில் வாக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த தேர்தலில் 92% வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர். இந்நிலையில், இவ்விரு மாநில தேர்தல்களில் எங்கும் மறு வாக்குப்பதிவுக்கு உத்தரவிடப்படவில்லை என்று இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த முடிவை எடுப்பதற்கு முன், தேர்தல் பார்வையாளர்களின் கருத்துகள், கள அறிக்கைகள் உள்ளிட்ட வழக்கமான ஆய்வு முறைகள் அனைத்தும் கவனமாக பரிசீலிக்கப்பட்டதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மறு வாக்குப்பதிவை அவசியமாக்கும் வகையிலான பெரிய அளவிலான இடையூறுகள் ஏதும் இன்றி வாக்குப் பதிவு நிறைவடைந்துள்ளதே இதற்குக் காரணம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.






## 100 சதவீத வாக்குப்பதிவு அசர வைத்த மலை கிராமம்



**சேலம், ஏப்.26:**

தமிழக சட்டசபை தேர்தல் வியாழக்கிழமை விறுவிறுப்பாக நடைபெற்றது. காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை நடைபெற்றது. வரலாறு படைத்த 2026 தேர்தல் தமிழகத்தில் மாலை 6 மணி நிலவரப்படி 84.69% வாக்குப்பதிவு. தமிழகம் முழுவதும் 4.85 கோடி பேர் வாக்களித்துள்ளனர். 2021 தேர்தலை விட 25 லட்சம் வாக்குகள் கூடுதலாக பதிவாகி உள்ளது.

சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஏற்காடு சட்டமன்ற தொகுதி தேர்தலில் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக இங்கு ரேவதி மாதேஸ்வரன் (திமுக), உஷாராணி (அஇஅதிமுக), ஜே.லட்சுமி (த.வெ.க), மற்றும் பழனிசாமி (நாதக). ஆகியோர் களத்தில் உள்ளனர்.

சேலம் மாவட்டத்தின் தனி தொகுதியான ஏற்காடு சட்டமன்ற தொகுதி தாலுகாவில் உள்ள 49 வாக்கு சாவடிகளில் நேற்று காலை 7 மணி முதல் வாக்கு பதிவு தொடங்கி மாலை 6 மணி வரை வாக்கு பதிவு நடைபெற்றது. இதில் ஏற்காடு தாலுகா முழுவதும் 13,980 ஆண் வாக்காளர்களும், 14,497 பெண் வாக்காளர்களும் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் ஒருவர் என மொத்தம் 28478 வாக்காளர்கள் வாக்களித்தனர்.

இதில் ஏற்காடு சட்டமன்ற தொகுதியில் வரும் கொம்பு தூக்கி மலை கிராமத்தில் 301 வாக்குகள் உள்ளது. இந்த 301 வாக்குகளும் பதிவாகி 100 சதவிகிதம் வாக்கு பதிவுகளை பெற்று அசர வைத்த மலை கிராம மக்கள்.

இதனால் மொத்தமாக ஏற்காடு சட்டமன்ற தாலுக்காவில் 94 சதவிகிதம் வாக்குகள் பதிவாகியுள்ளது.




## திருக்குறள் குறள்-601

குடியென்னுங் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும்



ஒருவனுக்கு தன் குடியாகிய மங்காத விளக்கு, அவனுடைய சோம்பலாகிய மாசு படிய படிய ஒளி மங்கிக் கெட்டுவிடும்.

## சிந்திக்க ஒரு நொடி



புத்தகம் போன்றது நட்பு அதை சில நொடிகளில் அழித்து விடலாம் ஆனால் அதை உருவாக்க பல ஆண்டுகள் ஆகும்


**ராஜகோபாலன்.J**
சென்னை

## அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் வசந்த உற்சவம் 3-ஆம் நாள் பொம்மை பூ கொட்டும் விழா



**திருவண்ணாமலை ஏப்.26:** அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் சித்திரை மாதம் 3-ஆம் நாள் வசந்த உற்சவத்தை முன்னிட்டு உற்சவருக்கு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரத்துடன் தீபாராதனை முடிந்து 10 முறை வேத மந்திரங்கள் ஒலிக்க ஆலயம் சுற்றி வந்தன. பொம்மைக்கு அலங்காரம் செய்யப்பட்டு பன்னீர் மண்டபத்தில் ஒவ்வொரு முறையும் பொம்மை சுவாமி மேல் பூ கொட்டும் பின்னர் தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பொம்மை பூ கொட்டும் விழாவில் கலந்து கொண்டு அண்ணாமலையாரை வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## நவநீத சேவை



**தஞ்சாவூர், ஏப்.26:** தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவிஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் சித்திரை திருவிழாவில் இரண்டாம் திருவிவான (22.04.2026) புதன்கிழமை காலை சுவாமி நவநீத சேவையில் எழுந்தருளி நம் ஸௌராட்ஷ்ட்ர சமூக வீதிகளில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். திருவிழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், வெண்ணை தாழி உற்சவ சபை மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

## பணி நிறைவு பாராட்டு விழா



**தங்கச்சிமடம், ஏப்.26:** தங்கச்சிமடம் புனித யாகப்பா துவக்கப்பள்ளி தலைமையாசிரியைஇன்பெண்டா எழில் பணி நிறைவு பாராட்டு விழா, பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

34 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியரை, பள்ளி நிர்வாகத்தினர், அனைத்து பள்ளி தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், உறவினர்கள் பொன்னாடை அணிவித்து, நினைவு பரிசு வழங்கி சிறப்பித்தனர்.

நிகழ்வில், சின்னப்பாலம் நடுநிலைப்பள்ளி ஆசிரியர் ஜெ.ஜே.லியோன், ஓலைக்குடா புனிதமரியன்னைதுவக்கப்பள்ளி தலைமையாசிரியர் சூரியா நிர்மலா மேரி, வேர்க்கோடு புனித ஜோசப் துவக்கப்பள்ளி தலைமையாசிரியர் ரெஜினா ஜோசப் முதலானோர் வாழ்த்தி, பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கி சிறப்பித்தனர்.

நிகழ்விற்கான ஏற்பாடுகளை பள்ளி நிர்வாகத்தினர் ஆசிரியர்கள் மற்றும் குடும்பத்தினர் செய்திருந்தனர்

## செய்யாறு வட்ட முத்தமிழ் சங்கம் சார்பில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பாவேந்தர் பாரதிதாசன் நினைவு கருத்தரங்கம்



செய்யாறு செய்யாறு வட்ட முத்தமிழ் சங்கம் சார்பில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற பாவேந்தர் பாரதிதாசன் நினைவு கருத்தரங்கில் புலவர் மெய். பூங்கோதை பேசினார்.


**செய்யாறு ஏப். 26:** செய்யாறு வட்ட முத்தமிழ் சங்கம் சார்பில் பாவேந்தர் பாரதிதாசன் நினைவு கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு வட்டம் முத்தமிழ் சங்கம் சார்பில் பாவேந்தர் பாரதிதாசன் நினைவு கருத்தரங்கம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சங்கத் தலைவர் கவிஞர் எறும்பூர் கை. செல்வகுமார் தலைமை தாங்கினார். சங்கத்தின் கருத்தாளர் புலவர் ந. கனக சபை முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட சங்கத்தின் நெறியாளர் புலவர் மெய் .பூங்கோதை பாவேந்தர் பாரதிதாசன் குறித்து சிறப்புரை நிகழ்த்தினார். தலைமை ஆசிரியர் ஜி. ஜெயகாந்தன், அறிவொளி வெங்கடேசன், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் ..திருக்குறள் பயிற்சி மாணவர்கள், பெரியவர்கள் உள்ளிட்ட நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## திருவத்திமலை கோவில் திருக்கல்யாண வைபோகம்





**விழுப்புரம், ஏப்.26:** விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த திருவத்திமலை வெங்கடாஜலபதி கோவிலில் இன்றுஞாயிற்றுக்கிழமை 26.04.2026 பதினோறாம் ஆண்டு திருக்கல்யாண வைபோகம் நிகழ்ச்சி மாலை600மணிக்கு மேல் 7.30 க்குள் சிவஸ்ரீவெ. ராம்குமாரசோமயாஜி பசுமலை ஸ்ரீசுப்பரமணியசுவாமி தேவஸ்தானம் மேல்ஒலக்கூர் அவர்களால் நிகழ்ச்சி துவக்கிவைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து திருக்கல்யாண வைபோக நிகழ்ச்சி வெகுவிமர்சையாக நடைபெறயுள்ளது வருகைதரும் அனைவருக்கும் அறுசுவை அன்னதானம் வழங்கப்படும் என்றும் வெங்கடாஜலபதி திருக்கோவில் அறக்கட்டளை சார்பில் தெறிவிக்கப்பட்டு உள்ளது.

**அகரம் ராமதாஸ்.செய்தியாளர்**

## கால பைரவர் அஷ்டமி சிறப்பு வழிபாடு



**கடலூர், ஏப்.26:** கடலூர் மாவட்டம் மேல் புவனகிரி அருள்மிகு மீனாட்சி உடனுறை வேதபுரீஸ்வரர் திருக்கோவிலில் வளர்பிறை அஷ்டமியை முன்னிட்டு அருள்மிகு கால பைரவருக்கு சிறப்பு அபிஷேகம், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாரதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் காலபைரவரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங் களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை


## சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி அம்மன்



கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தில் வாசவி ஜெயந்தியை முன்னிட்டு முதல் நாள் அலங்காரம் கோலாப்பூர் மகாலட்சுமி சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி அம்மன் அருள் பாலிக்கும் காட்சி .

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் வசந்த உற்சவம் 4-ஆம் நாள் பொம்மை பூ கொட்டும் விழா





**திருவண்ணாமலை ஏப்.26:** அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் சித்திரை மாதம் 4-ஆம் நாள் வசந்த உற்சவத்தை முன்னிட்டு உற்சவருக்கு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், தங்க ஆபரணங்களுடன், அலங்காரத்துடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

சுவாமி ஆலயம் 10 முறை சுற்றி வரும் 10 வது முறை சுற்றி வரும்பொழுது சுவாமியை கண்ணாடியில் காண்பித்து பின்னர் தீபாராதனையும் நடைபெற்றது.

பொம்மைக்கு அலங்காரம் செய்யப்பட்டு பன்னீர் மண்டபத்தில் ஒவ்வொரு முறையும் பொம்மை சுவாமி மேல் பூ கொட்டும் தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பொம்மை பூ கொட்டும் விழாவில் கலந்து கொண்டு அண்ணாமலையாரை வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சித்திரை பிரம்மோற்சவம் 5-ஆம் நாள் உற்சவம்



**திருவண்ணாமலை, ஏப்.26:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் சித்திரை பிரம்மோற்சவத்தை முன்னிட்டு பஞ்ச மூர்த்திகள் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

மாலை செஞ்சி ஜனனி நாட்டியாலயா குழுவின் பரதநாட்டியம் ஏராளமான பக்தர்கள் பூஜையில் கலந்து கொண்டு வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது

இரவு சுவாமிஅம்மன் மாட வீதி உலாவுடன் மங்கள வாத்தியங்களுடன், செஞ்சி விசாலாட்சி கோலாட்டம் குழுவின் கோலாட்டம் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் பிரம்மோற்சவத்தில் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்து வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## உலக புத்தக தினத்தை முன்னிட்டு நூல் வெளியீட்டு விழா



**மதுரை , ஏப்.26:** தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் ஓய்வூதியர் கிளை மதுரை மாநகர் மாவட்டம் சார்பில் உலக புத்தக தினத்தை முன்னிட்டு நூல் வெளியீட்டு விழா 25.4.26 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சங்க அலுவலகம் பொபது வளாகம் தல்லாகுளத்தில் கிளைத் தலைவர் வெ.சங்கரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. முனைவர் சு கிருஷ்ணன் கிளைச் செயலாளர் வரவேற்புரையாற்றினார்.

ஜீவமணி தலைமையாசிரியை ஓய்வு பாடல்கள் பாடினார். கவிஞர்கள் மனோந்திரா, அடைக்கன்,மணிவண்ணன், ரெஜினாபானு,மருத்துவர் பிரியாகிருஷ் ஆகியோர் கவிதை வாசித்தனர்.

தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநில தலைவர் என் ஜெயச்சந்திரன் நூலை வெளியிட்டு நாவலின் அருமைகள் மற்றும் கதைக் களம் குறித்து பேசினார்.

தமுஎகச மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் பூ.பாண்டியன் முத்துக்குமரன் நூலைப் பெற்றுக்கொண்டு இதுபோன்ற நூல் வெளியீட்டு விழாகளின் தேவை குறித்து பேசினார்.

தமுஎகச மாவட்ட செயற்குழு உறுப்பினர் தோழர் அ.கோவிந்தராஜன் இன்றைய சூழலில் இந்த நாவலின் தாக்கம் மற்றும் சமூக மாற்றத்திற்கு வாசிப்பின் அவசியம் குறித்தும் கிளையின் முன்னெடுப்பு குறித்தும் வாழ்த்தி பேசினார்.

தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் மதுரை மாவட்டத் தலைவர் மு.பரமேஸ்வரன் வாழ்த்துரை வழங்கினர்.

நாவலாசிரியர் லெட்சுமி பாலன் ஏற்புரை வழங்கினார்.

இறுதியாக கவிஞர் மனோந்திரா நன்றி கூறினார். நிகழ்வில் 33 ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

## மே 1 - புதுச்சேரியிலிருந்து கூடுதல் விமான சேவைகள்!

**புதுச்சேரி, ஏப்.26:**

புதுச்சேரி விமான நிலையத்திலிருந்து பெங்களூரு, ஹைதராபாத் மற்றும் கொச்சி போன்ற முக்கிய நகரங்களுக்கு நேரடி விமான சேவைகள் வரும் மே 1 முதல் தொடங்கப்பட உள்ளதாக விமான நிலைய அதிகாரி கள் அறிவித்துள்ளனர்.

சென்னை போன்ற அருகிலுள்ள நகரங்களுக்கும் சிறிய ரக விமானங்களை இயக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது. கோடை விடுமுறைக் காலத்தில் சுற்றுலாப் பயணி களின் வரவை ஊக்குவிக்கும் நோக்கில், இந்தச் சேவை கள் தொடங்கப்படுகின்றன. இதற்கான பயணச் சீட்டு முன்பதிவுகள் வரும் வாரத்தில் தனியார் விமான நிறுவனங்களின் இணையதளங்களில் கிடைக்கும். ஒன்றிய அரசின் ‘உதான்’ திட்டத்தின் கீழ் கட்டணச் சலுகைகள் கிடைக்க வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப் பட்டு உள்ளது. இந்த விமானச் சேவை விரிவாக்கம், புதுச்சேரியின் வர்த்தகம் மற்றும் சுற்றுலா சார்ந்த தொழில்களில் குறிப் பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## தேர்தலுக்கு பின் வேட்பாளர்களின் சொத்து விவரம் சரிபார்ப்பு!

**சென்னை, ஏப். 26:**

சட்டமன்றத் தேர்தலில் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிட்ட உதயநிதி ஸ்டாலின் தாக்கல் செய்த வேட்பு மனுவில் குறிப் பிட்டுள்ள சொத்து விவரங்களுக்கும், 2021 சட்டமன்றத் தேர்தலின்போது அவர் தாக்கல் செய்த சொத்து விவ ரங்களுக்கும் முரண்பாடுகள் உள்ள தாக கூறி, அதே தொகுதி வாக்காள ரான குமாரவேல் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். உதயநிதி ஸ்டாலின் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தின்படி, அவரிடம் அசையும் சொத்துக்களாக ரூ.12.92 கோடியும், மனைவியிடம் ரூ.13.25 கோடியும், மகளிடம் ரூ.2.56 லட்சமும் உள்ளன. இதுதவிர ரூ.7.72 கோடி மதிப்பிலான அசையா சொத்து களும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி. அருள்முருகன் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, வருமான வரித்துறை தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக் கையில், தேர்தல் முடிவுக்குப் பின் வேட்பாளர்களின் சொத்து விவரங்களை சரிபார்க்கும் நடைமுறை தொ டங்கும் என்றும், சரிபார்ப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டு உள்ளதாகவும், 150 நாட்களுக்குள் சரிபார்ப்புப் பணி களை நிறைவு செய்ய காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, வழக்கை ஜூன் மாதத்திற்கு உயர்நீதி மன்றம் ஒத்திவைத்தது.

## கரூர் மாவட்டத்தில் 92.63 சதவிகிதம் உச்சம் தொட்ட வாக்குப்பதிவு!

**சென்னை, ஏப். 26:**

234 தொகுதிகளைக் கொண்ட தமிழக சட்டமன்றத் தேர்தலில் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களமிறங்கினர். தேர்தலுக்காக மாநிலம் முழு வதும் 75,064 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன. தேர்தலில் 85.15 சத விகித வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்து உள்ளது. மாவட்ட வாரியாக நோக்கும் போது, தமிழ்நாட்டிலேயே அதிக மாக கரூர் மாவட்டத்தில் 92.63 சத விகித வாக்குகள் பதிவாகியுள்ளன. தொடர்ந்து சேலத்தில் 90.76 சத விகிதம், நாமக்கல்லில் 90.21 சதவிகி தம், ஈரோட்டில் 90.10 சதவிகிதம் என 90 சதவிகிதத்திற்கும் மேல் பதிவான அனைத்து மாவட்டங்களும் மேற்கு மண்டலத்தில் அமைந்திருப் பது குறிப்பிடத்தக்கது. மாறாக, தமிழ்நாட்டிலேயே குறைந்த வாக்குப்பதிவு கன்னியா குமரி மாவட்டத்தில் 75.61 சதவிகித மாக பதிவாகியுள்ளது. இராமநாத புரத்தில் 77.01 சதவிகிதம், நெல்லை யில் 77.94 சதவிகிதம், தூத்துக்குடி யில் 80.53 சதவிகிதம், தென்காசியில் 82.41 சதவிகிதம் என தென் மாவட் டங்களில் வாக்குப்பதிவு குறை வாக உள்ளது. சிவகங்கையில் 76.66 சதவிகி தம், மதுரையில் 80.52 சதவிகிதம், தேனியில் 81.55 சதவிகிதம், விருது நகரில் 84.82 சதவிகிதம் என தென் மாவட்டங்களில் எங்குமே வாக்குப் பதிவு 85 சதவிகிதத்தை எட்ட வில்லை.

## கோடை விடுமுறையை முன்னிட்டு நெல்லை பொருநை அருங்காட்சியகத்தில் குவியும் சுற்றுலாப் பயணிகள்

**நெல்லை, ஏப்.26:**



தமிழ்நாட்டில் பொருநை ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, துலுக்கர்பட்டி ஆகிய தொல்லியல் தலங்களில் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை அகழாய்வில்கண்டெடுக்கப்பட்ட அரிய தொல்பொருட்களை உலகத்தமிழர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் அறிந்துகொள்ளும் வகையில் நெல்லைபாளையங்கோட்டையில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் சில மாதங்களுக்கு முன் திறந்து வைத்தார்.

தமிழர்களின் வீரத்தையும், அறிவையும், எதிர்கால தலைமுறையினர்களுக்கு கொண்டு சேர்க்கும் வகையில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தொல்பொருட்கள், தமிழர்கள் பயன்படுத்திய பானைகள், ஓடுகள், உள்ளிட்டவற்றை பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் ஆர்வத்துடன் பார்த்து செல்கின்றனர். விடுமுறை நாட்களில் அருங்காட்சியகத்தை பார்வையிட மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

பொருநை அருங்காட்சியகத்திற்கு பொதுமக்கள் எளிதாக சென்று வரும் வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் சார்பில் நெல்லை சந்திப்பு பஸ் நிலையத்தில் இருந்து பஸ்கள் இயக்கப்படுகின்றன. இது தவிர கார்களிலும் பலர் குடும்பத்துடன் பொருநை அருங்காட்சியகத்தை பார்வையிட வருகின்றனர். இதனால் அந்த பகுதி முழுவதுமே தற்போது சுற்றுலா தலம் போன்று மாறியுள்ளது.

இந்நிலையில் பள்ளி மாணவர்களுக்கு கோடை விடுமுறை தொடங்கிவிட்டதால் பொருநை அருங்காட்சியகத்தில் சுற்றுலாப் பயணிகள் குவிந்த வண்ணம் இருக்கின்றனர். காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை தினந்தோறும் பார்வையிட அனுமதிக்கப்படுவர். நுழைவுச்சீட்டு காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## வாக்களிக்க சொந்த ஊர்களுக்கு சென்றவர்கள் சென்னை திரும்ப 14,508 சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!

**சென்னை, ஏப்.26:**



தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வேலை, தொழில், கல்வி உள்ளிட்ட பல்வேறு நிமித்தமாக சென்னை மற்றும் சுற்றுப் பகுதிகளில் பல லட்சம் போ் வசித்து வருகின்றனா். இவா்கள் திருவிழா மற்றும் தொடா் விடுமுறை காலங்களில் சொந்த ஊா்களுக்குச் செல்வது வழக்கம். இதற்கு அடுத்தபடியாக தோ்தல் காலங்களில் தங்களது ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற செல்வா்.

இந்த நிலையில், தமிழக சட்டப்பேரவைத் தோ்தல் வாக்குப்பதிவு வியாழக்கிழமை (ஏப்.23) நடைபெற்றதால், சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்கு செல்பவா்களின் எண்ணிக்கை கணிசமாக உயா்ந்தது. பேருந்துகளில் ஏற்படும் கூட்ட நெரிசலைக் கருத்தில்கொண்டு மாநகரின் சென்னை கிளாம்பாக்கம், கோயம்பேடு, மாதவரம் உள்ளிட்ட பேருந்து முனையங்களில் இருந்து செவ்வாய்க்கிழமை இரவு முதல் வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன், சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன.

ஏப்.21, 22, 23 ஆகிய தேதிகளில் இயக்கப்பட்ட 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேருந்துகளில் சுமாா் 6.27 லட்சம் பேரும், சென்னையிலிருந்துஇயக்கப்பட்ட 6 ஆயிரம் ஆம்னி பேருந்துகளில் 9 ஆயிரம் பயணங்கள் மூலம் சுமாா் 3.50 லட்சம் பேரும் சொந்த ஊா்களுக்கு பயணம் செய்துள்ளனா். இதுதவிர ரயில்களில் சுமாா் 9 லட்சத்துக்கும் அதிகமானோரும், சொந்த, வாடகை காா்கள் உள்ளிட்ட பிற வாகனங்கள் மூலமாக 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோா் வாக்களிப்பதற்காக சொந்த ஊா்களுக்கு சென்றுள்ளதாக போக்குவரத்துத் துறை தகவல் தெரிவிக்கின்றன. தோ்தலுக்காக சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து ஏப்.21 முதல் 23 பிற்பகல் வரை சுமாா் 19.37 லட்சத்துக்கும் அதிகமானோா் சொந்த ஊா்களுக்கு போ் பயணம் மேற்கொண்டுள்ளனா். இந்த நிலையில், தேர்தலுக்காக சொந்த ஊர்களுக்கு சென்றவர்கள் சென்னை உள்ளிட்ட இடங்களுக்கு திரும்புவதற்கு வசதியாக சனிக்கிழமை (ஏப்.25) முதல் 14,508 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர் அறிவித்துள்ளார். பயணிகளின் போக்குவரத்து சீராக நடைபெறுவதை உறுதிசெய்யும் வகையில், சென்னை உள்ளிட்ட பிற நகரங்களுக்கு எவ்வித சிரமமுமின்றி திரும்புவதற்காக சனி, ஞாயிற்றுக்கிழமை(ஏப்.25, 26) இரண்டு நாள்களுக்கு வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன், 14,508 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட்ட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை வழக்கமாக இயக்கப்படும் 2,092 பேருந்துகளுடன் 1,295 சிறப்பு பேருந்துகளும், முக்கிய நகரங்களிலிருந்து 2,500 சிறப்புப் பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன. ஞாயிற்றுக்கிழமை வழக்கமாக இயக்கப்படும் 2,092 பேருந்துகளுடன் சென்னைக்கு 3,184 சிறப்புப் பேருந்துகளும், பிற இடங்களுக்கு 3,345 சிறப்புப் பேருந்துகள் என மொத்தம் 14,508 பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

இதுபோன்று சொந்த ஊாகளுக்குப் பயணித்தவா்கள் ஊா் திரும்ப திருப்பூரில் இருந்து 15,270 பேருந்துகள் இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில், சென்னைக்கு மட்டும் 3,393 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

## சென்னை - நெல்லை இடையே சிறப்பு மெமு ரயில் இயக்கம் தெற்கு ரயில்வே அறிவிப்பு



**திருநெல்வேலி, ஏப்.26:**

கோடை காலத்தை முன்னிட்டு பயணிகளின் கூட்ட நெரி சலைத் தவிர்ப்பதற்காக, சென்னை மற்றும் நெல்லை இடையே முன்பதிவில்லாத சிறப்பு மெமு (MEMU) எக்ஸ்பி ரஸ் ரயில் இயக்கப்படுவதாகத் தெற்கு ரயில்வே அறி வித்துள்ளது. இந்தச் சிறப்பு ரயில், சென்னை எழும்பூரில் இருந்து சனிக்கிழமை (ஏப்ரல் 25) இரவு 11.50 மணிக்கு புறப் பட்டு, மறுநாள் காலை 10.45 மணிக்கு நெல்லையை சென்ற டையும். அதேபோல், மறுமார்க்கத்தில் நெல்லையில் இருந்து ஏப்ரல் 26-ம் தேதி மதியம் 1.20 மணிக்கு புறப் பட்டு, அன்று இரவு 11.45 மணிக்கு தாம்பரத்தை சென்றடையும். இந்த ரயில் தாம்பரம், செங்கல்பட்டு, விழுப்புரம், விருத்தாசலம், அரியலூர், ஸ்ரீரங்கம், திருச்சி, திண்டுக்கல், கொடைக்கானல் ரோடு, மதுரை, விருதுநகர், சாத்தூர் மற்றும் கோவில்பட்டி ஆகிய ரயில் நிலையங்களில் நின்று செல்லும் எனத் தெற்கு ரயில்வேயின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 4 அடுக்கு பாதுகாப்புடன் விருதுநகர் பாலிடெக்னிக் கல்லூரியில் வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டன



**விருதுநகர், ஏப்.26:**

விருதுநகர் மாவட்டத் தில் 7 சட்டமன்றத் தொகு திகளில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங் கள், கட்டுப்பாட்டு இயந்தி ரங்கள் மற்றும் விவிபேட் இயந்திரங்கள் பலத்த போ லீஸ் பாதுகாப்புடன் விருது நகர் பாலிடெக்னிக் கல்லூரி யில் வைக்கப்பட்டன. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா அனை த்துக் கட்சி பிரதிநிதிகள் முன் னிலையில் கூறியதாவது : இராஜபாளையம் சட்டமன்ற தொகுதியில் 269 வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்பட்ட 538 வாக்குப்பதிவு இயந்தி ரங்கள், 269 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 269 விவி பேட் இயந்திரங்களும், திரு வில்லிபுத்தூர் தொகுதியில் 308 வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்பட்ட 309 வாக்குப்பதிவு இயந்திரங்க ளும், 309 கட்டுப்பாட்டு இய ந்திரங்கள், 315 விவிபேட் இயந்திரங்களும், சாத்தூர் தொகுதியில் 291 வாக்குச் சாவடிகளில் பயன்படுத் தப்பட்ட 584 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 292 கட்டுப்பாட்டு இயந்திரங் கள், 294 விவிபேட் இயந்தி ரங்களும், சிவகாசி தொகு தியில் 290 வாக்குச்சாவ டிகளில் பயன்படுத்தப்பட்ட 292 வாக்குப்பதிவு இயந்தி ரங்களும், 292 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 296 விவிபேட் இயந்திரங்களும், விருதுநகர் தொகுதியில் 281 வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்பட்ட 281 வாக்குப்பதிவு இயந்திரங்க ளும், 281 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 281 விவி பேட் இயந்திரங்களும், அருப்புக்கோட்டை தொகு தியில் 270 வாக்குச்சாவ டிகளில் பயன்படுத்தப்பட்ட 542 வாக்குப்பதிவு இயந்தி ரங்களும், 271 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 272 விவிபேட் இயந்திரங்களும், திருச்சுழி தொகுதியில் 292 வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்பட்ட 586 வாக்குப்பதிவு இயந்திரங்க ளும், 293 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 297 விவி பேட் இயந்திரங்கள் என மொத்தம் 2,001 வாக்குச்சா வடிகளில், 3,132 வாக்குப் பதிவு இயந்திரங்கள், 2,007 கட்டுப்பாட்டு இயந்தி ரங்கள், 2,024 விவிபேட் இயந்திரங்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் பாது காப்பு வைப்பறையின் உள்ளே வைக்கப் பட்டுள்ளது. அந்த அறை சீல் செய்யப்பட்டுள்ளது. வாக்குப்பதிவு இயந்தி ரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகளுக்கு மத்திய பாதுகாப்பு படை, தமிழ்நாடு அரசின் சிறப்பு காவல் படை, ஆயுதப்படை மற்றும் சட்டம் ஒழுங்கு காவலர்கள் என 4 அடுக்குப் பாதுகாப்பு வசதிகள் செய்யப் பட்டுள்ளன. வேட்பாளர்கள், வேட்பா ளர்களின் முகவர்கள் வாக்குப்பதிவு இயந்தி ரங்கள் வைப்பறையை சிசிடிவி உடன் இணைக்கப் பட்டுள்ள தொலைக்காட்சி பெட்டி வாயிலாக அவர்க ளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள அறையில் 24 மணிநேரமும் கண்காணிக்கலாம். இவ்வாறு அவர் தெரி வித்தார்.

## திருப்பதி ஏழுமலையானை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு 24 மணிநேர மருத்துவ சேவை

**திருப்பதி, ஏப்.26:**



திருப்பதி தேவஸ்தானம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

திருப்பதி ஏழுமலையானை தரிசிக்க தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் திருமலைக்கு வருகின்றனர். பக்தர்களின் உடல்நலப் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, தேவையான சமயங்களில் உடனடி சிகிச்சை கிடைக்கும் வகையில் திருப்பதி தேவஸ்தானம் விரிவான மருத்துவச் சேவைகளை வழங்கி வருகிறது.

திருமலையில் பக்தர்களுக்காக மொத்தம் 16 மருத்துவ மையங்கள் செயல்படுகின்றன. அஸ்வினி மருத்துவமனை பிரதான மருத்துவமனையாக இருந்து, அதற்கு ஆதரவாக அப்பல்லோ கார்டியாக் மையமும் செயல்படுகிறது.

வைகுண்டம் கியூ காம்ப்ளக்ஸ் கம்பார்ட்மெண்ட்-6 எதிரில், வைகுண்டம் கியூ காம்ப்ளக்ஸ்1-ல் உள்ள ஒருங்கிணைந்த ஏ.ஐ. கட்டுப்பாட்டு மையம் அருகில், கல்யாணகட்டா, அரசு போக்குவரத்துக்கழக சர்க்கிள், அமைனிட்டி காம்ப்ளக்ஸ்-5, ஸ்ரீவாரி கோவில், அலிபிரி நடைபாதையில் 1500-வது படி, காலிகோபுரம் மற்றும் நாராயணகிரி ஷெட்களில் 24 மணி நேர மருத்துவச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

மாத்ருஸ்ரீ தாரிகொண்டா வெங்கமாம்பா அன்னப்பிரசாத வளாகம், அமை னிட்டி காம்ப்ளக்ஸ்-2, அலிபிரி பாத மண்டபம், ஏழாவது மைல், பாஷ்ய காரர் சன்னிதி ஆகிய இடங்களில் காலை 8 மணியில் இருந்து இரவு 8 மணி வரை மருத்துவச் சேவைகள் வழங்கப்படுகின்றன. ஸ்ரீவாரிமெட்டு நடைபாதையில் 1,200-வது படியில் காலை 6 மணியில் இருந்து மாலை 6 மணி வரை மருத்துவ வசதி உள்ளது. பிரம்மோற்சவ விழா காலங்களில் ராம் பகீச்சா-1 மற்றும் பாபவிநாசனம் பகுதிகளில் கூடுதல் மருத்துவ மையங்கள் அமைக்கப்படுகின்றன. நடமாடும் முதலுதவி மையங்களும் பக்தர்களுக்கு உடனடி உதவி வழங்குகின்றன.

திருமலையில் அவசர மருத்துவச் சேவைக்காக மொத்தம் 9 ஆம்புலன்சுகள் உள்ளன. அவசர சிகிச்சை தேவைப்படும் பக்தர்கள் முதலில் அஸ்வினி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுவர். மேம்பட்ட சிகிச்சை தேவைப்பட்டால், திருப்பதி ருயா, பெர்டு, சுவிம்ஸ் மற்றும் அரசு மகப்பேறு மருத்துவமனை ஆகியவற்றுக்கு இலவசமாக மாற்றப்படுகின்றனர்.

பிரம்மோற்சவ விழா மற்றும் ரதசப்தமி நாட்களில் கூடுதல் ஆம்புலன்சுகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

128 மருத்துவப் பணியாளர்களுடன் இடையறாத சேவை, 8 மருத்துவர்கள் மற்றும் 120 துணை மருத்துவப் பணியாளர்கள் 24 மணி நேரமும் சேவையில் உள்ளனர். திருமலையில் உள்ள அனைத்து மருத்துவ மையங்களிலும் தினமும் சராசரியாக 2,400 பக்தர்கள் மருத்துவச் சேவைகளை பயன்படுத்துகின்றனர்.

அஸ்வினி மருத்துவமனையில் இ.சி.ஜி. எக்ஸ்-ரே, ஆய்வக பரிசோதனை. நெபுலைசேஷன், ஆக்ஸிஜன் உதவி மற்றும் காய சிகிச்சை உள்ளிட்ட முழுமையான மருத்துவச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

சிறப்பு சிகிச்சை தேவைப்படும் பக்தர்கள் திருப்பதியில் உள்ள பெரிய மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

பக்தர்களின் உடல்நலப் பாதுகாப்பை முதன்மையாகக் கொண்டு, திருப்பதி தேவஸ்தானம் 24 மணி நேர மருத்துவச் சேவைகளை விரிவாக வழங்கி வருகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பொள்ளாச்சி கரிவரதராஜ பெருமாள் கோவிலில் பிரம்மோற்சவ விழா

**பொள்ளாச்சி, ஏப்.26:**

பொள்ளாச்சி கரிவரதராஜ பெருமாள் கோவிலில் 50-வது ஆண்டு பிரம்மோற்சவ விழா தொடங்கியது. விழாவையொட்டி கடந்த 22-ந்தேதி மாலை 6 மணிக்கு அனுக்ஞை, விசவக்ஷேனாராதனம், புண்யாகவாஜனம், வாஸ்து சாந்தி உள்ளிட்ட பூஜைகள் நடைபெற்றன. நேற்று காலை 7.35 மணிக்கு மேல் 9 மணிக்குள் கொடியேற்றம் நிகழ்ச்சி நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

மாலை 3 மணிக்கு புண்யாகவாஜனம், யாகசாலை பூஜை தொடக்கம், மாலை 6 மணிக்கு ராஜ அலங்காரத்தில் சாமி திருவீதி உலா நடைபெற்றது. விழா நாட்களில் தினமும் காலையிலும் மாலையிலும் வாகன சேவை நடைபெறுகிறது.

வருகிற 29-ந்தேதி காலை 9 மணிக்கு திருப்பல்லக்கில் மோகினி அலங்காரத்தில் பெருமாள் திருவீதி உலா செல்லும் நிகழ்ச்சி நடக்கிறது. மாலை 6 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் நடக்கிறது. வருகிற 30-ந்தேதி தவழ்ந்த கிருஷ்ணன், வெண்ணெய் தாழி திருப்பல்லக்கிலும், மாலையில் பெருமாள் ராஜ அலங்காரத்துடன் குதிரை வாகனத்திலும் திருவீதி உலா சென்று பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். விழாவின் முக்கிய நிகழ்வாக மே 1-ந்தேதி தேரோட்டம் நடைபெறுகிறது. அன்றைய தினம் காலை 9 மணிக்கு மேல் 10.15 மணிக்குள் உற்சவர் திருத்தேருக்கு எழுந்தருள்கிறார். அதன்பின்னர் தேர் வடம் பிடிக்கப்படுகிறது. ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு தேர் இழுத்து வழிபடுவார்கள். வருகிற 2-ந்தேதி தீர்த்தவாரி, வருகிற 3-ந்தேதி விடையாற்றி நிகழ்ச்சியும் நடக்கிறது.

## திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோயிலில் சித்திரை பிரம்மோற்சவம் மே 1-ல் தொடங்குகிறது

**சென்னை, ஏப்.26:**

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி கோயில் சித்திரை பிரம்மோற்சவ விழா மே 1-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. கருட சேவை 3-ம் தேதியும், தேரோட்டம் 7-ம் தேதியும் நடைபெறுகின்றன.

108 வைணவ திவ்யதேசங்களில் ஒன்றாக விளங்குவது சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோயில். இத் தலத்தில் யோக நரசிம்மர் மேற்கு நோக்கி அருள்பாலிக்க, உற்சவரான தெள்ளிய சிங்கர், ஸ்ரீதேவி, பூதேவி நாச்சியாருடன் பக்தர்களுக்கு சேவை சாதிக்கிறார். இங்கு ஆண்டுதோறும் பார்த்தசாரதி சுவாமிக்கு சித்திரை மாதத்திலும், நரசிம்மருக்கு ஆனி மாதத்திலும் பிரம்மோற்சவம் நடைபெறுவது வழக்கம். அந்த வகையில், பார்த்தசாரதி பெருமாள் சித்திரை பிரம்மோற்சவம் மே மாதம் நடைபெற உள்ளது. இதையொட்டி, ஏப்.30-ம் தேதி அங்குரார்ப்பணம் எனும் முளையிடுதல் விழா நடக்கிறது. மே 1-ம் தேதி கொடியேற்றத்துடன் பிரம்மோற்சவம் தொடங்குகிறது. அன்று இரவு 7.45 மணி அளவில் புன்னை வாகனத்தில் சுவாமி வீதி உலா நடைபெறும். மே 2-ம் தேதி காலை 6.15 மணிக்கு சேஷ வாகனம், இரவு 7.45 மணிக்கு சிம்ம வாகனத்தில் உற்சவர் தெள்ளிய சிங்கர் எழுந்தருள்கிறார். பிரம்மோற்சவத்தின் முக்கிய நிகழ்வான கருட சேவை மே 3-ம் தேதி நடைபெறும்.

## மதுரை சித்திரை திருவிழாவிற்கான பணிகள் மும்முரம்

**மதுரை, ஏப்.26:**



உலகபிரசித்திபெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழா கடந்த 19-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவில் நாள்தோறும் அம்மனும்-சுவாமியும் மாசி வீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகின்றனர்.

திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் வருகிற 1-ந்தேதி நடைபெறுகிறது. ஒவ்வொரு ஆண்டும் கள்ளழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சிக்காக தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே உள்ள வைகை அணையில் இருந்து ஆற்றுப்படுகையில் தண்ணீர் திறந்துவிடுவது வழக்கம். ஆனால் 71 அடி உயரம் கொண்ட வைகை அணையின் நீர்மட்டம் தற்போது 33 அடியாக சரிந்து காணப்படுகிறது. போதுமான நீர் இருப்பு இல்லாததால் மதுரை சித்திரை திருவிழாவுக்கு வைகை ஆற்றில் தண்ணீர் திறக்கப்படுமா? என்ற சந்தேகம் எழுந்தது.

இந்த சூழலில் வைகை அணையில் இருந்து முல்லைப்பெரியாறு பாசன கால்வாய் வழியாக மதுரைக்கு தண்ணீர் கொண்டு செல்ல அதிகாரிகள் முடிவு செய்தனர்.

அதன்படி, வைகை அணையில் இருந்து கால்வாய் வழியாக மதுரை கொண்டு செல்லப்படும் தண்ணீர், முதற்கட்டமாக மதுரை செல்லூர் கண்மாயில் தேக்கி வைக்கப்படும். பின்னர் அங்கிருந்து கள்ளழகர் ஆற்றில் இறங்கும் பகுதிக்கு கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒருவேளை அந்த திட்டத்தில் தண்ணீர் கொண்டுசெல்ல முடியவில்லை என்றால், மாற்று ஏற்பாடாக மதுரை கொண்டமாரி ஓடை வழியாக கள்ளழகர் ஆற்றில் இறங்கும் பகுதிக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து வைகை அணையின் சிறிய மதகுகள் வழியாக நேற்று தண்ணீர் திறந்துவிடப்பட்டது. வினாடிக்கு 500 கன அடி வீதம், வருகிற 29-ந்தேதி வரை 6 நாட்கள் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதன்மூலம் மொத்தம் 170 மில்லியன் கன அடி தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மதுரை சித்திரை திருவிழாவிற்கான பணிகள் மும்முரமாக நடைபெற்று வரும் நிலையில், பக்தர்களுக்கு தேவையான வசதிகள் குறித்தும், பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் அம்மாவட்ட கலெக்டர் நேரில் சென்று ஆய்வு நடத்தி வருகிறார்.


## மாமல்லபுரம் தலசயன பெருமாள் கோவிலில் சித்திரை பிரம்மோற்சவ கொடியேற்றம்

**மாமல்லபுரம், ஏப்.26:**

மாமல்லபுரத்தில் உள்ள தலசயன பெருமாள் கோவில் 108 திவ்விய தேசங்களில், 63வது திவ்ய தேசம் ஆகும். இங்கு தலசயன பெருமாள், நிலமங்கை தாயார், ஆண்டாள், பன்னிரு ஆழ்வார்கள் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றனர்.

இந்த கோவிலில் ஆண்டுதோறும் சித்திரை பிரம்மோற்சவ விழா விமரிசையாக நடைபெறும்.

அவ்வகையில் இந்த ஆண்டுக்கான பிரம்மோற்சவ விழாவையொட்டி கடந்த 16-ம் தேதி பந்தக்கால் நிகழ்ச்சி நடைபெற்றது.





அதிகாலை விஸ்வரூப பூஜை, நித்ய பூஜைகளுடன், நாதஸ்வரம் முழங்க, கொடிமரத்தில் பிரம்மோற்சவ கொடியேற்றப்பட்டது.

தொடர்ந்து பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவியுடன் மாடவீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இரவு மங்களகிரி உற்சவங்கள் நடக்கின்றன.

அடுத்தடுத்த நாட்களில் தொடர்ந்து வாகன சேவைகள் நடக்கினறன.

முக்கிய நிகழ்ச்சியான கருட சேவை 28-ம் தேதியும், தேரோட்டம் 30-ம் தேதியும் விமரிசையாக நடைபெற உள்ளது.

## திருவள்ளூர் வீரராகவர் கோவில் சித்திரை பிரம்மோற்சவ விழா- கருட சேவை

**திருவள்ளூர், ஏப்.26:**



திருவள்ளூரில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றான ஸ்ரீ வைத்திய வீரராகவ பெருமாள் கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் சித்திரை பிரம்மோற்சவ விழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் தொடங்கியது. இந்த விழா வரும் மே மாதம் 1ம் தேதி வரை நடைபெறுகிறது.

விழா நாட்களில் தினமும் காலை, மாலை இரு வேளையும் வெவ்வேறு வாகனத்தில் உற்சவர் வீரராகவ பெருமாள், ஸ்ரீதேவி பூதேவி சமேதராய் சிறப்பு அலங்காரத்தில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

அவ்வகையில் விழாவின் 3-ம் நாளான இன்று கருட சேவை நடைபெற்றது. அதிகாலை 4 மணிக்கு பல்வேறு மலர்களால் அலங்கரிக்கப்பட்ட உற்சவர் வீரராகவ பெருமாள் கருட வாகனத்தில் எழுந்தருளி கோபுர தரிசனமும், 6 மணிக்கு திருவீதி உலாவும் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

பிரம்மோற்சவத்தின் 7-ம் நாளான வருகிற 28ம் தேதி காலை தேரோட்டம் நடக்கிறது. 30ம் தேதி தீர்த்தவாரி நடைபெறுகிறது. மே 1ம் தேதி இரவு 9 மணிக்கு கண்ணாடி பல்லக்கில் உற்சவர் பெருமாள் சிறப்பு அலங்காரத்தில் காட்சி அளிக்கிறார்.






## நலம் தரும் மருத்துவம்

### கோடையில் கட்டாயம் பருக வேண்டிய 15 பானங்கள்!

இந்தியாவின் சுட்டெரிக்கும் கோடையிலிருந்து தப்பிக்க, நம் உடலுக்கு தேவையான நீர்ச்சத்து, எலக்ட்ரோலைட்டுகள் (ELECTROLYTES) கொண்ட சில ஆரோக்கிய பானங்கள் என்னவென்று பார்ப்போம்.

1. தர்பூசணி (WATERMELON JUICE) - 90%க்கும் அதிகமான நீர் தொகுப்பைக் கொண்ட தர்பூசணி கோடைக் காலத்தின் சிறந்த பழமாகும். இது உடலை குளிர்விக்கிறது, நீரிழப்பைத் தடுக்கிறது மற்றும் லைகோபீன் (LYCOPENE) போன்ற ANTIOXIDANTS-ஐ வழங்குகிறது.

2. இளநீர் - இயற்கையாகவே எலக்ட்ரோலைட்டுகள் (ELECTROLYTES) நிறைந்தது, பேக் செய்யப்பட்ட பானங்களுக்கு ஒரு சரியான மாற்றாகும். நீரேற்றத்தை நமக்கு மீட்டெடுத்துத் தருகிறது; வெப்பத்தால் உண்டாகும் பக்கவாதத்தையும் தடுக்கிறது.

3. வெள்ளரி (CUCUMBER) சாறு - குளிர்ச்சி, ALKALINE கொண்ட வெள்ளரி சாறு, வயிற்றில் உண்டாகும் அமிலத்தன்மையைக் குறைத்து சருமத்தைப் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கிறது.

4. AAM PANNA (பச்சை மாம்பழ பானம்) - ஒரு பாரம்பரிய இந்திய பானம், AAM PANNA வெப்ப சோர்வைத் தடுக்கிறது; உடலுக்குத் தேவையான வைட்டமின் 'சி'யைப் பூர்த்தி செய்கிறது.

5. எலுமிச்சைச் சாறு - எளிமையாகக் கிடைக்கக்கூடியது. அதேநேரம் சக்தி வாய்ந்த எலுமிச்சைச் சாறு, இந்தக் காலத்தில் தேவையான நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

6. ஆரஞ்சு சாறு - புத்துணர்ச்சியைத் தரும், வைட்டமின் சி நிறைந்த இது சோர்வை எதிர்த்துப் போராட உதவுகிறது; நோய் எதிர்ப்புச் சக்தியையும் நாம் பெறலாம்.

7. அன்னாசி சாறு (PINEAPPLE) - செரிமானத்தை ஊக்குவிக்கும், உடலில் உண்டாகும் அலர்ஜிகளைச் சீக்கிரம் குணமாகிறது.

8. மோர் - வயிற்றைக் குளிர்விக்கும், குடல் ஆரோக்கியத்தை ஆதரிக்கும் ஒரு புரோபயாடிக் நிறைந்த பானம்.

9. ஜல்ஜீரா (JALJEERA) - சீரகம், புதினா மற்றும் புளி ஆகியவற்றால் தயாரிக்கப்படும் இது, செரிமானத்தை ஊக்குவிக்கும், அஜீரணத்தைத் தடுக்கும்.

10. சோல் கதி (SOL KADHI) - ஒரு கடற்கரையோர விருப்பமான பானம். இது கோகம் மற்றும் தேங்காய்பாலுடன் கலந்து புளிப்பு காரமான இளஞ்சிவப்பு பானமான இது உடலை குளிர்விக்கும் மற்றும் செரிமானத்தை ஆதரிக்கும்.

11. கரும்புச் சாறு - உடல் ஆற்றலை அதிகரிக்ககூடியது, தாதுக்கள் (MINERALS) நிறைந்தது.

12. பப்பாளி சாறு - செரிமானத்தை ஆதரிக்கும், மலச்சிக்கலைத் தடுக்கும்.

## புதனை விட பெரிய நிலவா? கனிமீடு குறித்த சுவாரசிய தகவல்கள்!

அண்டவெளியின் அதிசயம் நிறைந்த சூரிய மண்டலத்தில், கோள்களுக்கு இணையாக வியப்பை ஏற்படுத்தும் பல துணைக் கோள்கள் உள்ளன. அவற்றில் தனித்துவமான அடையாளத்துடன் விளங்குவது வியாழன் கோளின் துணைக்கோளான 'கனிமீடு' ஆகும். புதன் கோளை விட அளவில் பெரியதாகவும், ஒரு கோளுக்குரிய பண்புகளைக் கொண்டதாகவும் திகழும் கனிமீடு, வானியல் ஆய்வாளர்களுக்கு ஒரு தீராத தேடலாக இருந்து வருகிறது. 1610-ல் கலிலியோவால் கண்டறியப்பட்ட இந்த பனி உலகம், தனது பிரம்மாண்டத்தாலும் மர்மங்களாலும் விண்வெளி ஆராய்ச்சியில் மிக முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

பூமியைச் சுற்ற ஒரு நிலவு இருப்பதுபோல், மற்ற பெரிய கோள்களைச் சுற்றிப் பல




நிலவுகள் உள்ளன. அளவு அடிப்படையில், சூரிய மண்டலத்தை சுற்றி வரும் கோள்களில் மிகப்பெரிய நிலவு கனிமீடு (GANYMEDE): இது வியாழன் (JUPITER) கோளின் நிலவு. நமது பூமியின் நிலவை விடப்பெரியது மட்டுமல்ல, புதன் (MERCURY) என்ற கோளை விடவும் இது அளவில் பெரியது.

டைட்டன் (TITAN): இது சனி (SATURN) கோளின் நிலவு. கனிமீடுக்கு அடுத்தபடியாக இதுதான் இரண்டாவது பெரிய நிலவு.

காலிஸ்டோ (CALLISTO): இதுவும் வியாழன் (JUPITER) கோளின் நிலவுதான். இது அளவில் மூன்றாவது பெரிய நிலவு.

சூரிய மண்டலத்தின் மாபெரும் துணைக்கோளான கனிமீடு பற்றிய சுவாரசியமான தகவல்கள் இங்கே:

அளவும் அமைப்பும்: கனிமீடு மிகப்பெரியது என்று சொல்வதற்குக் காரணம், இதன் விட்டம் சுமார் 5,268 கிலோமீட்டர்கள். இது புதன் கோளை (MERCURY) விடச் சற்று பெரியது, ஆனால் எடையில் புதனை விடக் குறைவு. நமது நிலவை விட இது சுமார் 1.5 மடங்கு பெரியது.

காந்தப்புலம் (MAGNETIC FIELD): சூரிய மண்டலத்தில் உள்ள மற்ற எந்தத் துணைக்கோளுக்கும் இல்லாத ஒரு சிறப்பு கனிமீடுக்கு உண்டு. அதுதான் அதன் சொந்தக் காந்தப்புலம். இரும்பு திரவ நிலையில் உள்ள அதன் மையப்பகுதி (METALLIC CORE) சுழல்வதால் இந்த காந்தப்புலம் உருவாகிறது. இது கனிமீடைச் சுற்றி ஒரு பாதுகாப்பு கவசமாகச் செயல்படுகிறது.

உட்புறக் கடல் (SUBSURFACE OCEAN): விஞ்ஞானிகளின் ஆய்வின்படி, கனிமீடின் பனிக்கட்டி மேற்பரப்பிற்கு அடியில் சுமார் 200 கி.மீ ஆழத்தில் ஒரு மிகப்பெரிய உப்பு நீர் கடல் இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. பூமியில் உள்ள அனைத்து கடல்களையும் விட இதில் அதிக நீர் இருக்க வாய்ப்புள்ளது.

வளிமண்டலம்: இதற்கு மிகவும் மெல்லிய வளிமண்டலம் உள்ளது.

இதில் பெரும்பாலும் ஆக்சிஜன் காணப்படுகிறது. இருப்பினும், இது மனிதர்கள் சுவாசிக்கும் அளவுக்கு அடர்த்தியானது அல்ல.

மேற்பரப்புத் தோற்றம்: கனிமீடின் மேற்பரப்பில் இரண்டு வகையான பகுதிகள் உள்ளன:

பழைய இருண்ட பகுதிகள்: இவை எரிமலைக் குழிகள் (CRATERS) நிறைந்த பழமையான பகுதிகள்.

புதிய வெளிச்சமான பகுதிகள்: இவை பனிப்பாறைகளால் ஆன பள்ளங்கள் மற்றும் வரிகளைக் கொண்ட பகுதிகள்.

கனிமீடு என்பது வெறும் பாறையும் பனியும் கொண்ட ஒரு நிலவு மட்டுமல்ல; அது உயிரினங்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகளைத் தன்னுள் ஒளித்து வைத்திருக்கும் ஒரு பிரபஞ்சப் பெட்டகம்.

அதன் காந்தப்புலமும், நிலப்பரப்பிற்கு அடியில் மறைந்திருக்கும் ஆழமான உப்புநீர் கடலும் வருங்கால விண்வெளிப் பயணங்களுக்குப் புதிய வாசல்களைத் திறந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனம் (ESA) போன்ற அமைப்புகளின் தொடர் முயற்சிகள் மூலம், வரும் காலங்களில் இந்த 'மர்ம உலகம்' பற்றிய இன்னும் பல வியக்கத்தக்க உண்மைகள் நமக்குத் தெரியவரும்.

# பாடம் கற்ற அம்மா



"மம்மி... தயவு செய்து இங்கிலீஸ்ல பேசுங்க மம்மி" அதைச் சொன்ன போது, ஹரிணியின் முகத்தில் கோபம் இருந்தது.

அவள் அம்மா கோகிலா... ஊரிலிருந்து வந்தவள். தமிழ் தவிர வேறு மொழி தெரியாது. பள்ளியில் பேரண்ட்ஸ் மீட்டிங், மற்ற ஃபங்ஷன்கள் எங்கு சென்றாலும், கோகிலா அமைதியாக நின்று கொள்வாள்.

"என் ஃப்ரெண்ட்ஸ் முன்னாடி வாய் திறந்து பேசிடாதீங்க..." ஹரிணி அடிக்கடி சொல்லுவாள்.

கோகிலா சிரித்துக் கொண்டே தலையசைப்பாள்.

அன்று, பள்ளியில் பேரண்ட்ஸ் மீட்டிங்.

கோகிலாவும் சென்றிருந்தாள். ஆனால் வழக்கம் போல் அமைதியாய் அமர்ந்திருந்தாள்.

டீச்சர் ஆங்கிலத்தில் கேட்டார், "ஹரிணியின் அம்மா... நீங்க ஏதாவது கேட்கணுமா?"

கோகிலா உட்கார்ந்தபடியே இட, வலமாய் தலையாட்டினாள்.

ஹரிணி தலை குனிந்தாள். அவள் மனதில் சலிப்பு. கோபம். அன்று இரவு, அம்மா வழக்கம் போல எதுவும் பேசவில்லை. சமையலறையில் அமைதியாக வேலை பார்த்தாள். நாட்கள் சென்றன.

ஹரிணி சமீபகாலமாய் ஒன்றை கவனித்தாள். அவள் தாய் கோகிலா மாலை நேரங்களில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக எங்கோ செல்கிறாள். திரும்ப வருகிறாள்.

இரவு நேரங்களில் அறைக் கதவைச் சாத்திக் கொண்டு நீண்ட நேரம் தூங்காமல் எதையோ மெதுவாக உச்சரிக்கிறாள்.

பள்ளியில் மீண்டும் ஒரு பேரண்ட்ஸ் மீட்டிங்.

இந்த முறை, டீச்சர் நக்கலாய் ஆங்கிலத்தில் கேட்டார். "உங்க டாட்டர் ஹரிணி படிப்புல நல்ல முன்னேற்றம் ஆகியிருக்கா.. அதைப் பற்றி நீங்க ஏதாவது சொல்லணுமா?"

கோகிலா எழுந்தாள். ஹரிணி அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

"குட் மார்னிங் எவ்ரி படி" அந்த குரல் சற்றும் தடுமாற்றமின்றி தெளிவாக இருந்தது.

"ஐ யாம் ஹரிணீ'ஸ் மதர்... ஐ தேங்க் யூ வெரி மச் ஃபார் டேக்கிங் கேர் ஆஃப் மை டாட்டர்!.. ஷீ இஸ் மை லைஃப்" என்று ஆரம்பித்து ஒவ்வொரு வார்த்தையையும் நிதானமாக, ஆனால் உறுதியாகப் பேச, ஹரிணியின் கண்கள் விரிந்தன. அவளால் நம்பவே முடியவில்லை.

மீட்டிங் முடிந்த பின், அம்மாவைப் பிடித்துக் கேட்டாள், "உங்களுக்கு எப்படி... இங்கிலீஸ்?"

அம்மா சிரித்தாள். "நான் தெனமும் ஈவினிங் ஒரு ஸ்போக்கன் இங்கிலீஸ் கிளாஸுக்குப் போனேன்... நீ தூங்கும் நேரத்துல... என் அறைல அதைப் பிராக்டீஸ் பண்ணினேன்..."

"ஏன்...?...எதுக்கு?" என்று கேட்ட மகளின் முகத்தைத் தொட்ட கோகிலா,"என் பொண்ணு எந்த இடத்திலும் தலை குனியக் கூடாது... தலையை உயர்த்தியே நிற்கணும்... !.. அதுக்காக"

ஹரிணியால் பேச முடியவில்லை.

அவள் மனம் நினைத்தது, "அம்மா கற்றுக் கொண்டது ஆங்கிலம் மட்டும் இல்லை... மகளின் மனசையும்"



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

# தையல் இலை



மாரியம்மன் கோயிலுக்கு எதிரில் இருக்கும் ஆலமரத்தோடு எனக்கு நெருங்கியத் தொடர்பு உண்டு. ஆலமரத்தைப் பற்றிய அழகான நினைவுகள் மனதில் பசுமையாகவே உள்ளது. பங்குனி சித்திரை மாதங்களில் ஆலமரம் அழகான தோற்றத்தை இழந்துவிடும். மரத்தின் கிளைகலிருந்து பழுத்த இலைகள் உறவை முறித்துக்கொண்டு கீழேவிழும் காட்சியைப் பார்ப்பதற்கு ஆயிரம் கண்கள் வேண்டும்.

பழுத்த ஆல இலைகளை நம்பி என் பாட்டியும் பெரியம்மாவும் வாழ்ந்ததால், ஆலமரம் எனக்கு கடவுளாகவே தெரிந்தது.

ஒவ்வொருநாள் காலையில் பாட்டி கூண்விழுந்த நடையோடு கூடையை சுமந்தபடி தெருவில் நடப்பாள். அடுத்த சில விநாடிகளில் பெரியம்மாவும் பெரியக் கூடையோடடு ஆலமரத்தை நோக்கி நடப்பாள்.

அதிகாலையில் ஆலமரத்திலிருந்து கக்கைகளின் இறைச்சல் சத்தம் ஊர்முழுக்க கேட்கும். இலைகள் இல்லாவிட்டாலும் கிளைகளில் உட்கார்ந்து சத்தமிட்ட பறவைகள் சூரியன் உதயமாவதற்கு முன்பாகவே இறைதேடப் பறந்துவிடும்.

அமைதியான ஆலமரத்தின் கீழே. பழுத்த இலைகள் விழுந்துகிடக்கும். கூண்விழுந்த பாட்டி குணிந்தபடி இலைகளை கூடையில் சேகரிக்க, பெரியம்மாவும் மற்றொரு மூளையில் பழுத்த ஆலயிலைகளைப் பொருக்கிக்கொண்டிருப்பாள். பரவலாக விழுந்துகிடக்கும் இலைகளில் நல்ல இலையைத் தேடி பொருக்கி எடுப்பது சவாலானதுதான். ஆலமரத்தின் கீழ் பறவையின் கழிவுகள் மட்டுமல்ல, சில இடங்களில் மனித கழிவின் நாத்தத்தை தாங்கமுடியாமல் மூக்கைப்பொத்திகொண்டு கூடை முழுக்க இலைகளை சேர்த்து வீட்டிற்கு கொண்டுவருவார்கள்.

வெய்யில் ஏறியதும், காரை வாசலில் இலைகளை காயவைத்து, அடிக்கும் காற்றில் இலைகள் பறந்துபோகாமல் தடுப்பு போட்டுவைப்பார்கள்.

காய்ந்துகொண்டிருக்குபோதே இலைகளைச் சீராக அடுக்கி, சிறுசிறு கட்டுகளாக கட்டி தண்ணீரில் போட்டு. சிறிது நேரத்திற்குப் பிறகு , இலைக் கட்டுகளைக் கோணிப் சாக்கால் மூடிவைத்து, அதன்மீது அறவைக் கல்வைத்து படியவைப்பார்கள்.

பெரியம்மா சற்று வித்தியாசமாக, காய்ந்த இலைகளை ஒன்றாக கூட்டி, தண்ணீர் தொளித்து சணல் கோணியால் மூடி ஊறவைத்து, அடுக்கி பிறகு படியவைப்பாள்.

பழுத்த மஞ்சள் நிறத்து இலைகளை படியவைத்து வெளியே எடுத்தால் பார்ப்பதற்கு பளபளப்பாக இருக்கும். பரணையிலிருந்த பூந்தொடப்பம் ஒரு முடிச்சு எடுத்து, ஈருக்கு கிழித்து தயாராக வைத்துக்கொள்வாள்.

இலைகளை தைப்பதற்கு பூந்தொடப்ப ஈருக்கு அவசியம். பாட்டி காலை நீட்டிக்கொண்டு , ஒவ்வொரு இலையை மற்ற இலையோடு சேர்த்து ஈருக்காள் தைக்கின்ற கலையை யாரிடமிருந்து கற்றால் என்பது எனக்குத் தெரியாது, ஆனால், இலை தைக்கும் கலை பாட்டியின் அன்றாட கைசெலவுக்கு கைகொடுத்தது. ஈரமான இலையின் காம்புகளை கிள்ளுவது எளிது. உலர்ந்து போவதற்கு முன்பாகவே இலையை தைத்துவிட்டால் ஏதுவாக இருக்கும். இல்லையென்றால், ஈருக்கு இலையில் நுழைவது கடினமாகும்.

பாட்டியின் இலையை வாங்கும்போது 'பாத்து சாப்பிடனும் இல்லன்னா, ஈருக்குச்சி தொண்டையில சிக்கிக்கும்" என்று பரிகாசம் செய்தவர்களும் இருந்தனர்.

நூறு இலைகள் கொண்டவை ஒரு கட்டு, பாட்டி இலைகளைப் பரணையில் பாதுகாப்பாக வைத்திருப்பாள். பாட்டிக்கு வருமாணம் ஆல இலையால் கிடைத்தது.

அம்மாவசை, கிருத்திகை, மாரியம்மன் கோவில் திருவிழா, கல்யாணம் போன்ற நல்ல நாட்களில் தையல் இலையின் தேவை அதிகம் இருக்கும். பாட்டிக்கு நல்ல நாட்களில் வருமானம் அதிகம் கிடைக்கும். சில்லறையிலும் கொடுப்பாள், கட்டாகவும் கொடுப்பாள். மரபீரோவில் பாட்டிக்கென்று ஒரு இழுவறை இருந்தது. இருட்டில் கவணமாக சில்லறைகளை எண்ணி வைப்பாள்.

நான் கேட்டதில்லை. அவளாகவே நல்ல நாட்களில் சிரித்துக்கொண்டே சில்லறை எனக்கு கொடுத்த ஞாபகம் இருக்கிறது.

தனது வாழ்நாளின் கடைசி காலம் வரை என் அப்பாவிடம் காசுக்காக கையேந்தி நிற்கவில்லை.

ஆலமரத்து இலையும், அவளின் இலை தைக்கும் கலையும், காலம் முழுவதும் கைகொடுத்தது.

எந்த சூழ்நிலையிலும் இலை தைக்கும் நிலையிலிருந்து ஒருநாளும் ஓய்வெடுத்து உட்கார்ந்ததை நான் பார்த்ததில்லை.

இத்தணைக்கு பாட்டி தைக்கும் இலை சமமாக இருக்காது, ஒரு பக்கம் தூக்கிக்கொண்டும், கணத்த பூந்தொடப்பத்தின் ஈருக்குச்சி கையை கிழிக்கும் அளவுக்கும் பார்ப்பதற்கே ஒரு மாதிரியாகத்தான் இருக்கும். இருந்தும் வருடத்தின் அத்தனை நாளும் பாட்டியைத்தேடி இலை வாங்குவதற்கு காத்திருந்தவர்கள் ஏராளம்.

சுத்துக்கட்டு வீட்டில், பாட்டி போலவே இலையை நம்பி வாழ்ந்தவர்கள். பெரியம்மாவுக்கும் சின்னப் பாட்டிக்கும் தொழில் போட்டி இருந்தது. சண்டை நடந்ததில்லை.

'பாத்து சாப்பிடு' என அம்மா எச்சரிப்பாள். ஈருக்குச்சியை இலையிலிருந்து பிய்த்து எடுத்தபடி.

'அய்யய்யோ,'என அண்ணன் மகளுக்கு பதில் சொல்லியதை கேட்ட பாட்டி தைத்த இலையிலேயே ஒன்றாக சாப்பிட்ட காலங்கள் அருமையானவை.

தையல் இலையில் சாப்பிட்டு பலவருடங்கள் கடந்துவிட்டது.



**-கயப்பாக்கம் இரா.இரமேஷ்**

# விக்கிரமாதித்தன் கதைகள் 6

**.A.S.GOVINDA RAJAN**

## முனிவர் கொடுத்த ரத்தினபழக் கதை



கோதாவரி நதிக்கரையிலுள்ள பிரதிஷ்டானபுரம் என்ற ஊரை விக்ரமாதித்தன் ஆண்டு வந்தான். ஒரு நாள் காந்திசீலன் முனிவர் வந்து, அவனுக்கு ஒரு பழத்தை அளித்து விட்டுச் சென்றார். விக்ரமனும் அதை வாங்கி அதிகாரியிடம் கொடுத்து பத்திரப்படுத்தச் சொன்னான். தினமும் அந்த முனிவர், பழம் கொடுத்தார். ஒருநாள் எங்கிருந்தோ வந்த குரங்கு அந்த பழத்தை கடித்தது. அப்போது அதிலிருந்த ரத்தினக் கல் கீழே விழுந்தது.

உடனே விக்ரமன் தன் அதிகாரியிடம் அனைத்து பழங்களையும் சோதித்துப் பார்க்கச் சொன்னான். பழங்களைச் சோதித்த அதிகாரி, மன்னா, பழங்கள் உலர்ந்து விட்டன. ஆனால் அவற்றில் விலை உயர்ந்த ரத்தினக் கற்கள் இருக்கின்றன என்றார். மறுநாள் முனிவர் வந்து விக்ரமனிடம் பழம் கொடுத்தார். அவரிடம், சுவாமி, தினமும் ஒரு பழத்தில் ரத்தினக் கற்களை வைத்து தருகிறீர்களே... ஏன்? என்று கேட்டான். அதற்கு முனிவர், மிகப் பெரிய நன்மையை என் மந்திரத்தால் செய்தாக வேண்டும். இல்லையெனில் பெரும் கேடு ஏற்படும். இதனைச் செய்வதற்கு எனக்கு சுத்தமான வீரன் ஒருவன் வேண்டும். அதற்காகத்தான் உன்னை அணுகினேன், என்றார்.

தன்னால் நன்மை நடக்கப்போவதாகக் மகிழ்ந்த விக்ரமன், இதற்கு ஒப்புக் கொண்டான். வரப்போகும் கிருஷ்ணபட்ச சதுர்த்தியன்று மயானத்துக்கு நீ தனியாக வரவேண்டும். விக்ரமன் சொன்ன நேரத்தில் மயானத்துக்குச் சென்றான். அவனுக்காக காத்திருந்த முனிவர், இங்கிருந்து தென் திசையில் சென்றால், அங்கு ஒற்றை மரத்தில் ஓர் ஆணின் உடல் தொங்கிக் கொண்டிருக்கும். அதை எடுத்துக் கொண்டு வா நடுவில் ஏதும் பேசக் கூடாது என்றார்.

மன்னன் தென்திசையை நோக்கி நடந்தான்.

அங்கு ஒற்றை மாத்தில் ஆணின் உடல் தொங்கிக் கொண்டிருந்தது. மரத்தின் மேல் ஏறி கயிற்றை அறுத்து, அந்த உடலை கீழே தள்ளினான். அந்த உடல் அழுதது. அந்த உடலில் உயிர் இருப்பதாக நினைத்து, அதைத் தூக்க முயற்சித்தான். உடனே சிரிக்க ஆரம்பித்தது. ஏன் இப்படிச் சிரிக்கிறாய் என கேட்டதும் மீண்டும் மரத்தில் தொங்கியது அந்த உடல். அது வேதாளம் என்பதை உணர்ந்து கொண்ட விக்ரமன், அதை முதுகில் சுமந்து சென்றான். அப்போது அந்த வேதாளம் மன்னா, நான் ஒரு கதை சொல்கிறேன். கதையின் முடிவைப் பற்றி புதிர் போட்டது. அதற்கு விடை தெரிந்தும் மன்னன் மவுனமாக இருந்தால், தலை வெடித்து விடும் என்று விக்ரமனை மிரட்டியது.

விக்ரமன் பதில் கூறினான்.

பதில் கூறியதும் வேதாளம் மீண்டும் மரத்தில் சென்று தொங்கியது.

இப்படியே, ஒவ்வொரு கதையாகச் சொல்லி அவனிடம் கேள்விகள் கேட்கும் பதில் சொல்வதற்காக அவன் வாய் திறந்து பேசியதும் மரத்தில் ஏறிக் கொள்ளும்.



# கோவில் கொடிமரத்தின் சிறப்புகள்




கோவில்களில் காணப்படும் கொடிமரம் வைரம் பாய்ந்த மரத்தால் செய்யப்படுகிறது. அதில் புராணங்களில் குறிப்பிட்டுள்ளபடி தாமிரம் மற்றும் தங்கத் தகடுகளால் மறைக்கப்பட்டு மேலே மூன்று அடுக்குகளால் அமைக்கப்படுகிறது. இந்த கொடிமரத்தை சமஸ்கிருதத்தில் “துவஜஸ்தம்பம்” என்று அழைப்பர். கோவில் கோபுரத்திற்கும் சந்நிதானத்திற்கும் இடையே 13 மீட்டர் இடைவெளி விட்டு கொடி மரம் அமைக்கப்படுகிறது. இது ஒவ்வொரு கோவிலுக்கும் மாறுபடும். சிவன் கோவில்களில் உள்ள கொடிமரம், நந்தி மூலவரை நோக்கி இருக்குமாறு அமைக்கப்படுகிறது. கொடி மரத்தின் அடிப்பகுதி அகலமாகவும் சதுரமாகவும் இருக்கும்.

கொடிமரம் பிரம்மா, விஷ்ணு, சிவபெருமான் இவர்களின் தொழில்களை உணர்த்துகின்ற ஒரு அடையாளமாக திகழ்கிறது.கொடி மரம் ராஜகோபுரத்தை விட உயரம் குறைவாக இருக்கும். அதே நேரத்தில் கருவறை விமானத்துக்கு நிகரான உயரத்துடன் இருக்கும்.

கொடிமரத்தில் மேலே உள்ள உலோக தகடுகள் இடி மின்னல் தாக்குதலில் இருந்து ஆலயத்தை பாதுகாக்கும்.

ஒரு ஆலயத்தை முழுமையடையச் செய்வது அந்த ஆலயத்தில் உள்ள கொடிமரம் தான். கடவுளை காண முடியாவிட்டாலும் அங்கு வைக்கப்பட்டிருக்கும் கொடி மரத்தை வணங்குவது அவசியம். கொடிமரத்தின் முன் ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.





அஷ்டாங்க நமஸ்காரம் என்பது இந்து சமய வழிபாட்டிலும், யோகாசனத்திலும் (குறிப்பாக சூரிய நமஸ்காரத்தில்) உடல், மனம் மற்றும் ஆன்மாவைப் பணியச் செய்யும் ஒரு வணக்க முறையாகும். அடி, முழங்கால்கள், மார்பு, கைகள் மற்றும் கன்னம் (அல்லது நெற்றி) என எட்டு உடற்பாகங்கள் தரையில் படும்படி படுத்து, இறைவனையோ, குருவையோ வணங்கும் முறை இதுவாகும். பஞ்சாங்க நமஸ்காரம் என்பது தலை, இரு கைகள், இரு முழங்கால்கள் ஆகிய ஐந்து உடற்பாகங்கள் நிலத்தில் படும்படி, பெண்கள் இறைவனையோ அல்லது பெரியோரையோ வணங்கும் முறையாகும். இது பெண்களுக்குரிய சிறப்பு வணக்க முறையாகக் கருதப்படுகிறது.

கொடிமரத்தை வணங்கினால் இறைவனை வணங்கியதற்கு சமமாகும்.

கோவில் திருவிழாவின் முதல் நாள் கொடியேற்றுவது எதற்காக என்றால், திருவிழாவிற்கு வரும் பக்தர்களை உயர்நிலை அடைய செய்வதற்காக இறைவன் இவ்விழா நாட்களில் சிறப்பாக எழுந்தருளி அருள் புரிய போகிறார் என்பதை குறிப்பதாகும்.

திருவிழா நாட்களில் அந்த ஊர் முழுவதையும் தன் கட்டுக்குள் இறைவன் வைத்திருப்பதை உணர்த்தும் விதமாக கொடி ஏற்றம் நடத்தப்படுகிறது. இறைவனை அடைந்தால் அழிவற்ற,ஆனந்த வெள்ளத்தில் நிலைத்திருக்கலாம் என்று நினைத்து,கொடி மரத்தை வணங்க வேண்டும்.

மேலும் ஒவ்வொரு கடவுளுக்கும்,ஒவ்வொரு வாகனம் இருப்பது வழக்கம். அதன்படி,அந்த வாகனத்தின் உருவத்தையே அந்தந்த கடவுளின் திருவிழாவின் போது கொடியில் வரைந்து ஏற்றுவது நடைமுறையாகும். அவ்வாறு பார்க்கையில்,

- விநாயகருக்கு-- மூஞ்சூறு.
- முருகனுக்கு-- மயில்சேவல்.
- சிவபெருமானுக்கு-- நந்தி.
- அம்மனுக்கு-- சிங்கம் அல்லது சூலம்.
- சாஸ்தாவுக்கு--குதிரை.
- பைரவருக்கு--நாய்
- பெருமாளுக்கு--கருடன்.


நாகர்கோவிலில் உள்ள நாகராஜர் கோவிலில் இருக்கும் பெருமாளுக்கு மட்டும் ஆமை சின்னம் உள்ளது.(பாம்புக்கும், கருடனுக்கும் பகை என்பதால் இங்கு மட்டும் ஆமை உள்ளது) துவஜஸ்தம்பம் எனப்படும் திருவிழாவின் முதல் நாள் கொடியேற்றுவது துவஜாரோகணம் என்றும்,விழா முடிந்து கடைசி நாள் கொடியிறக்குவது துவஜாவரோகணம் என்றும் அழைக்கப்படுகிறது. ஓம் நமசிவாய!



**ப.கோபிபச்சமுத்து,**
பாரதியார் நகர்,
புதுப்பேட்டை
கிருஷ்ணகிரி - 1

# தினம் ஒரு தலைவர்கள் டி.எஸ்.துரைராஜ் வரலாறு

டி. எஸ். துரைராஜ், 31 திசம்பர் 1910 - 2 சூன் 1986) 1940 - 1960 காலகட்டத்தில் நடித்த ஒரு மேடைநாடக, தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகராவார். தமிழ்த் திரைப்படங்களில் இயக்குனராகவும், தயாரிப்பாளராகவும் இருந்திருக்கிறார். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் நகைச்சுவைக் கூட்டாளியாக பல படங்களில் நடித்தார்



வாழ்க்கைச் சுருக்கம்

டி. எஸ். துரைராஜ் தஞ்சாவூரில் ராஜா நாயுடு, நாகலட்சுமி ஆகியோருக்கு மூன்றாவது குழந்தையாகப் பிறந்தவர். மூத்தவர்கள் இருவரும் பெண்கள். தந்தை உள்ளூரில் ஒரு எழுத்தராகப் பணியாற்றியவர். மூத்த சகோதரி மதுரையில் திருமணம் புரிந்ததை அடுத்து இவரும் தனது ஏழாவது வயதில் தாயாருடன் மதுரைக்குக் குடிபெயர்ந்தார். நாடகங்களில் மதுரையில் அப்போது சங்கரதாசு சுவாமிகள் தனது நாடகக் கம்பனியை ஆரம்பித்து நடத்தி வந்தார். பள்ளிப் படிப்பில் நாட்டமில்லாமல் இருந்த துரைராஜ் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகக் கம்பனியில் சேர்ந்தார். இவருக்கு நிறையப் பாடும் சந்தர்ப்பங்கள் கொடுக்கப்பட்டன. கோமாளி, மற்றும் பெண்கள் வேடங்களிலும் நடித்து வந்தார்.

துரைராஜின் இரண்டாவது சகோதரிக்கு இலங்கையில் திருமணம் நடந்தது. சகோதரியுடன் இலங்கை சென்ற துரைராஜ் அங்கு சிங்கள நாடகக் கம்பனி ஒன்றில் சேர்ந்து நாடகங்கள் நடித்தார். இரண்டாண்டுகளுக்குப் பின்னர் மதுரை திரும்பி மீண்டும் சங்கரதாசு சுவாமிகளின் கம்பனியில் இணைந்து நடித்தார். சில ஆண்டுகளில் அவர் அக்கம்பனியில் இருந்து விலகி சொந்தமாக திருப்பூரில் "மதுரை ஒரிஜினல் மணிவாசக பால சபா" என்ற நாடகக் கம்பனியைத் தொடங்கினார். கோவை, திருப்பூர், கேரளம் ஆகிய பகுதிகளில் இக்கம்பனிக்கு நல்ல வரவேற்பிருந்தது. ஆனாலும்





நான்கு ஆண்டுகளில் கம்பனி பெரும் நட்டத்துக்குள்ளாகி மூடப்பட்டது. பின்னர் அவர் வேலுக்குட்டி நாயர் என்பவரின் மலையாள நாடகக் கம்பனியில் சேர்ந்து நல்ல புகழ் பெற்றார். இவர் பிற்காலத்தில் சொந்தமாகப் பட நிறுவனம் தொடங்கி பிழைக்கும் வழி, பானை பிடித்தவள் பாக்கியசாலி (1958), ஆயிரங்காலத்துப் பயிர் (1963) போன்ற படங்களைத் தயாரித்தார். இதில் ஆயிரங்காலத்துப் பயிர், பானை பிடித்தவள் பாக்கியசாலி படங்களை இவரே இயக்கினார். பானை பிடித்தவள் பாக்கியசாலி படத்தில் சாவித்திரியின் அண்ணனாக நடித்தார். இப்படத்தில் இவர் மணமாகப்போகும் தன் தங்கை சாவித்திரிக்கு அறிவுரை கூறுவதுபோல் பாடுவது போல் அமைந்த புருசன் வீட்டில் வாழப் போகும் பெண்ணே தங்கச்சிக் கண்ணே சில புத்திமதிகள் சொல்லுறேன் கேளு முன்னே என்ற பாடல் இன்றும் புகழ் பெற்றதாக உள்ளது.


## நடித்த திரைப்படங்கள்

- திருநீலகண்டர் (1939)
- போலி சாமியார் (1939)
- சகுந்தலை (1940)
- நவீன விக்ரமாதித்தன் (1940)
- சாவித்திரி (1941)
- மதனகாமராஜன் (1941)
- திருவள்ளுவர் (1941)
- சதி சுகன்யா (1942)
- மாயஜோதி (1942)
- கங்காவதார் (1942)
- சிவலிங்க சாட்சி (1942)
- தமிழறியும் பெருமாள் (1942)
- காரைக்கால் அம்மையார் (1943)
- உத்தமி (1943)
- மீரா (1945)
- சகடயோகம் (1946)
- தெய்வ நீதி (1947)
- கடகம் (1947)
- பொன்னருவி (1947)
- துளசி ஜலந்தர் (1947)
- தேவதாசி (1948)
- காமவல்லி (1948)
- பிழைக்கும் வழி (1948)
- மங்கையர்க்கரசி (1949)
- ரத்தினகுமார் (1949)
- ஏழை படும் பாடு (1950)
- கலாவதி (1951)
- மணமகள் (1951)
- காஞ்சனா (1952)
- குமாரி (1952)
- அம்மா (1952)
- ஜெனோவா (1953)
- பணக்காரி (1953)
- திரும்பிப்பார் (1953)
- வள்ளியின் செல்வன் (1955)
- மாமன் மகள் (1955)
- காலம் மாறிப்போச்சு (1956)
- குடும்பவிளக்கு (1956)
- மூன்று பெண்கள் (1956)
- மணாளனே மங்கையின் பாக்கியம் (1957)
- கன்னியின் சபதம் (1958)
- பானை பிடித்தவள் பாக்கியசாலி (1958)
- மரகதம் (1959)
- அருமை மகள் அபிராமி (1959)
- நல்ல தீர்ப்பு (1959)
- நிச்சய தாம்பூலம் (1962)

# 'மண்டாடி' படப்பிடிப்பு நிறைவு- சிறப்பு வீடியோ வெளியிட்ட சூரி



இயக்குநர் பிரசாந்த் பாண்டியராஜன் இயக்கத்தில் நடிகர் சூரி கதாநாயகனாக நடித்து வெளியான படம் 'மாமன்'. லார்க் ஸ்டுடியோ சார்பில் கே.குமார் இப்படத்தை தயாரித்துள்ளார். இப்படத்தின் கதாநாயகியாக ஐஸ்வர்யா லஷ்மி நடித்து இருந்தார். அக்காவின் மகனுக்கும், தாய்மாமனுக்கும் இடையே நடைபெறும் பாசப்போராட்டத்தால் குடும்பத்தில் நிலவும் பிரச்சனைகளை தாண்டி ஒன்று சேரும் குடும்பக் கதை. இப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்ற நிலையில், நடிகர் சூரிக்கு பாராட்டுதல்களையும் பெற்றுத்தந்துள்ளது. 'விடுதலை', 'மாமன்' படங்கள் நடிகர் சூரிக்கு மிகப்பெரிய ரசிகர்கள் பட்டாளத்தை உருவாக்கி உள்ளது.
இதனை தொடர்ந்து, நடிகர் சூரி நடித்து வரும் படம் 'மண்டாடி'. இப்படத்தை மதிமாறன் புகழேந்தி இயக்குகிறார். எல்ரட் குமாரின் ஆர்.எஸ். இன்ஃபோ இப்படத்தை தயாரிக்கிறது. ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார். இப்படம் மீனவர் வாழ்க்கையை மையமாக கொண்டு எடுக்கப்பட்டுள்ளது.



சன் தொலைக்காட்சியில் வெற்றிகரமாக ஒளிபரப்பாகி வரும் சீரியல் எதிர்நீச்சல் 2. இந்த சீரியலில் ஈஸ்வரி என்கிற கதாபாத்திரத்தில் நடித்து வந்தவர் நடிகை கனிகா. ஆனால், கடந்த சில மாதங்களுக்கு முன் இவர் திடீரென எதிர்நீச்சல் சீரியலில் இருந்து விலகினார். இவருக்கு பதிலாக தற்போது ஸ்ரீஜா என்பவர் நடித்து வருகிறார்.
இந்த நிலையில், ரசிகர்களின் கவனத்தை பெற்று சின்னத்திரை நடிகையாக இருக்கும் கனிகாவின் சமீபத்திய புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

# ஜனநாயகன் திரைப்படம் லீக்: படத்தொகுப்பாளர் சஸ்பெண்ட்



ஜனநாயகன் படம் இணையத்தில் வெளியான சம்பவம் படக்குழு மற்றும் திரையுலகினரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. இதுதொடர்பாக பலரும் தங்களது கண்டனங்களைப் பதிவு செய்தனர்.
ஜனநாயகன் படம் இணையத்தில் வெளியானது குறித்து சைபர் கிரைம் போலீசார் விசாரணையை தொடங்கினர்.
ஜனநாயகன் படம் இணையத்தில் வெளியானது தொடர்பாக படத்தயாரிப்பு நிறுவனம் தமிழ்நாடு சைபர் கிரைம் போலீசாரிடம் புகார் அளித்திருந்தது.
புகாரை தொடர்ந்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்திய சைபர் கிரைம் போலீசார் சந்தேகத்தின் பேரில் 5 பேரை பிடித்து விசாரணை நடத்தினர்.
இதையடுத்து, ஜனநாயகன் திரைப்படம் இணையத்தில் கசிந்தது தொடர்பாக முக்கிய குற்றவாளி உள்பட 9 பேரை போலீசார் கைது செய்தனர். விசாரணையில், ப்ரீலேன்சர் அசிஸ்டண்ட் விஷ்வல் எடிட்டர் மூலமாக ஜனநாயகன் சமூக வலைதளங்களில் கசிந்தது தெரிய வந்தது. இந்நிலையில், எடிட்டர் யூனியனில் இருந்து எடிட்டர் பிரதீப் ராகவ் இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். படம் வெளியானதற்கு அவர் காரணம் இல்லை என்றாலும், கவனக்குறைவாக செயல்பட்டுள்ளார். விதிகளை மீறி சங்க உறுப்பினர் அல்லாதோரை உதவியாளராக பயன்படுத்தி உள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

# "பிரேக் பாஸ்ட்" திரை விமர்சனம்




பிரேக் பாஸ்ட்- விமர்சனம்(2.5 / 5)
பெரிய தொழிலதிபரின் மகள் ரோஸ்மின். வேலையில்லாமல் கஷ்டப்பட்டு வந்த ராணவ்-க்கு தனது நிறுவனத்திலேயே வேலை ஏற்பாடு செய்து தருகிறார். இருவரிடையே ஏற்பட்ட நட்பு பின்பு காதலாக மாறுகிறது.

திருமணம் செய்துக்கொள்ள இருவரும் முடிவெடுக்கின்றனர். ஆனால், ரோஸ்மின் தந்தைக்கு இதில் விருப்பமில்லை.

தந்தையின் எதிர்ப்பை மீறி ராணவ்-ஐ திருமணம் செய்துகொள்ளும் ரோஸ்மின், தனது பதவியை கணவருக்கு வழங்கி விடுகிறார்.

இனிமையாக செல்லும் இவர்களின் வாழ்க்கையில் கொஞ்சம் கொஞ்சமாக பிரச்சினை ஏற்படுகிறது. ஒருகட்டத்தில் இருவரும் பிரிய முடிவு எடுக்கிறார்கள்.

இருவரும் கவுன்சிலிங்கிற்கு செல்கிறார்கள் அங்கு மற்றொரு கதாநாயகன்- கதாநாயகியின் கதை கூறப்படுகிறது.

கதைக்குள் கதை என்பது போல் ரியல் மற்றும் ரீல் ஜோடிகள் வாழ்க்கையில் இணைந்தார்களா என்பது படத்தின் மீது கதை.



நடிகை கியாரா அத்வானி ஹிந்தி சினிமாவில் முன்னணி ஹீரோயின்களில் ஒருவராக இருந்து வருகிறார். அவர் ஹிந்தி நடிகர் சித்தார்த் மல்ஹோத்ராவை காதல் திருமணம் செய்து கொண்ட நிலையில் கடந்த வருடம் அவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தது.
இந்நிலையில் தற்போது GQ Most Influential Young Indians Awards 2026 என்ற விருது விழாவுக்கு கியாரா அத்வானி தாராள கிளாமர் ஆக வந்திருக்கிறார்.

# பேட்டில் திரை விமர்சனம்



பேட்டில் விமர்சனம்(2 / 5)
ராப் பாடகராக உயர வேண்டும் என்ற கனவுடன் வாழும் நாயகன் அர்ஜுன் பிரபாகரன், தனியார் பள்ளி ஆசிரியையான நாயகி ஆராத்யாவை காதலிக்கிறார். தனது முயற்சியால் பெரிய ராப் பாடகராக உயர்ந்த அவர், ஒரு கட்டத்தில் வெளிநாட்டு இசை நிகழ்ச்சிக்கும் செல்லும் வாய்ப்பு பெறுகிறார்.
இதற்கிடையில், ஆராத்யா பணிபுரியும் பள்ளியில் நடக்கும் மோசடிகள் வெளிச்சத்துக்கு வருகிறது. அந்த பிரச்சனையால் மாணவர்கள் பாதிக்கப்படுவதோடு, ஒரு மாணவி தற்கொலை செய்வதும் நிலைமைக்கு தீவிரம் சேர்க்கிறது.
இந்த உண்மையை ராப் பாடலின் மூலம் வெளிக்கொணர வேண்டும் என்று முடிவு செய்யும் ஆராத்யாவுக்கு, அர்ஜுன் துணை நிற்கிறார். ஆனால், இதனால் தனது வளர்ச்சி பாதிக்கப்படும் என்று நினைக்கும், இசை நிறுவனம் தடையாக நிற்கிறது. அதே நேரத்தில், பள்ளி நிர்வாகமும் அவர்களை மிரட்டுகிறது. இறுதியில் இந்த பிரச்சனைகளை சமாளித்து, அர்ஜுன், ஆராத்யா நினைத்ததை சாதித்தார்களா? இல்லையா? என்பதே படத்தின் மீதிக்கதை.

**நடிகர்கள்:** நாயகனாக நடித்துள்ள அர்ஜுன் பிரபாகரன், கதாபாத்திரத்திற்கு பொருத்தமாக இருந்தாலும், நடிப்பில் முழுமையாக நம்ப வைக்கவில்லை. குறிப்பாக ராப் பாடல் காட்சிகளில் எனர்ஜி குறைவாக தெரிகிறது. நாயகியாக நடித்து இருக்கும் ஆராத்யா, இயல்பான நடிப்பால் கவனம் ஈர்க்கிறார்.வில்லனாக வரும் சுப்பிரமணிய சிவா தனது அனுபவத்தால் கதாபாத்திரத்தை நன்றாக எடுத்துச் செல்கிறார். சரவண சுப்பையா, முனிஷ்காந்த், சுருளி, காயத்ரி உள்ளிட்ட அனைத்து மற்ற நடிகர்களும் தங்களுக்கான பங்கை செய்துள்ளனர்.

**இயக்கம்:**இயக்குனர் நாராயணன்.பி.ஏ, கல்வி துறையில் நடக்கும் மோசடிகள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை நேரடியாக பேச முயற்சி செய்துள்ளார். கலை மற்றும் இசையின் மூலம் சமூக மாற்றத்தை கொண்டு வர முடியும் என்ற கருத்தையும் பதிவு செய்துள்ளார். ஆனால், இந்த கருத்துகளை சுவாரஸ்யமான திரைக்கதையாக மாற்றுவதில் குறைபாடு தெரிகிறது.


**ஒளிப்பதிவு:** யுவராஜ்.ஆர் ஒளிப்பதிவு இயல்பான லொக்கேஷன்களில் எடுக்கப்பட்டதால் நம்பகத்தன்மை இருக்கிறது.

**இசை:**ஜீவாவின் இசை முக்கியமான கதையாக இருந்தும், பாடல்கள் மற்றும் ராப் பகுதிகள் நினைவில் நிற்கும் அளவிற்கு இல்லை.

# கடலும் அழகும்... ஸ்ரேயா சரண் சூப்பர் க்ளிக்ஸ்!



# 66 வயதிலும் நாகார்ஜீனாவுக்கு முடி கொட்டாத ரகசியம்?



நடிகர் நாகார்ஜுனா 66 வயதிலும் இளம் கதாநாயகர்களுடன் போட்டி போட்டு நடித்து வருகிறார். அவரது ஸ்டைலிஸ் தோற்றம் ரசிகர்களை வியக்க வைக்கிறது. அவரது வாழ்க்கை முறை, உடல் கட்டுப்பாடு, உணவு பழக்க வழக்கங்கள் பலருக்கு முன் மாதிரியாக இருந்து வருகிறது. அவரது உடல் நல ரகசியம் குறித்து அவரது தனிப்பட்ட மேக்கப்மேன் கூறியதாவது:-

நாகார்ஜுனா வாரத்தில் 5 நாட்கள் மிதமான உணவை சாப்பிடுகிறார். காலை உணவாக ஒரே ஒரு இட்லி, வடை மட்டுமே சாப்பிடுகிறார். பெரும்பாலும் பசிக்கும் போது மட்டுமே சாப்பிடுவார். மதிய உணவில் கட்டாயம் வெண்டைக்காய் மற்றும் சூடான சிப்ஸ் இருக்க வேண்டும். சனிக்கிழமை இரவு நாகார்ஜுனாவுக்கு பாம்ப் லெட் மீன் மிகவும் பிடிக்கும். ஒன்று அல்லது 2 மீன்கள் சாப்பிடுவார். அந்த மீன் பூண்டு, இஞ்சி, மிளகு, ஆலிவ் எண்ணெய் சேர்த்து தயாரிக்கப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமை 2 அல்லது 3 மட்டன் துண்டுகள் அல்லது சிக்கன் சாப்பிடுவார். தினமும் உடற்பயிற்சி நிலையத்தில் தவறாமல் பயிற்சி செய்வார். காலையில் படப்பிடிப்பிற்கு வரும் போது எலுமிச்சை, நெல்லிக்காய், கேரட், பீட்ரூட், வெல்லம், தேன் கலந்த சிறப்பு ஜூஸ் குடிப்பதை வழக்கமாக கொண்டுள்ளார் நாகார்ஜுனா. இதுதான் அவருக்கு இன்னும் முடி கொட்டாத ரகசியம். பெரும்பாலும் படப்பிடிப்புக்காக அவர் 'விக்' பயன்படுத்துவதில்லை என்றார்.



தற்போது தமிழ் சினிமாவில் சென்சேஷன் நடிகையாக வலம் வருபவர் கயாடு லோஹர். ட்ராகன் என்ற ஒரே ஒரு படம் மூலம் புகழின் உச்சிக்கே சென்ற அவர் தற்போது ஏராளமான படங்களில் நடித்து வருகிறார். மற்ற மொழிகளிலும் அவருக்கு பட வாய்ப்புகள் குவிகிறது.

தற்போது கயாடு லோஹர் சேலையில் அழகிய போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்களை பாருங்க. இந்த புகைப்படங்கள் ரசிகர்களைக் கவர்ந்து இணையத்தில் வைரல் ஆகி வருகின்றன.

# 26-வது திருமண நாளில் ரீ-ரிலீஸ் ஆன "அமர்க்களம்"




தமிழில் வெளியாகி வெற்றி பெற்ற முன்னணி நடிகர்களின் படங்களை டிஜிட்டலில் புதுப்பித்து மீண்டும் ரிலீஸ் செய்து வருகிறார்கள். ஏற்கனவே ரஜினியின் 'பாட்ஷா', 'பாபா', கமல்ஹாசனின் 'நாயகன்', 'வேட்டையாடு விளையாடு', 'ஆளவந்தான்', விஜயகாந்தின் 'கேப்டன் பிரபாகரன்', விஜய்யின் 'கில்லி', 'சச்சின்', சூர்யாவின் 'வாரணம் ஆயிரம்', தனுசின் 'யாரடி நீ மோகினி', சேரனின் 'ஆட்டோகிராஃப்' உள்ளிட்ட பல படங்கள் மீண்டும் திரையிடப்பட்டன.

இந்த வரிசையில், அஜித்- ஷாலினி இணைந்து நடித்த 'அமர்க்களம்' மீண்டும் வெளியாக உள்ளதாக இயக்குநர் சரண் ஏற்கனவே தெரிவித்து இருந்தார். ஆனால் எந்த தேதியில் வெளியாகும் என அறிவிப்பு வெளியாகவில்லை.


ஆனால், கடந்த சில நாட்களுக்கு முன்பு அஜித்- ஷாலினி திருமணநாளை முன்னிட்டு இருவரும் இணைந்து நடித்த 'அமர்க்களம்' படம் மீண்டும் கடந்த 24-ந்தேதி முதல் திரையரங்குகளில் வெளியாகும் என போஸ்டர் வெளியிட்டு தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, அஜித்குமார்- ஷாலினி நடிப்பில் 1999-ல் வெளியாகி பட்டையைக் கிளப்பிய அமர்க்களம் திரைப்படம் 27 ஆண்டுகளுக்கு பிறகு தமிழ்நாட்டில் ரீ-ரிலீஸ் ஆகியுள்ளது.

பரத்வாஜ் இசையில் வெளியான இப்படத்தின் பாடல்கள் இன்றளவிலும் பலரது பிளேலிஸ்ட்களை ஆக்கிரமிக்கின்றன.

'அமர்க்களம்' அஜித்தின் திரைப்பயணத்தில் 25வது படமாகும். மேலும், இதுவே அவர் தன் மனைவி ஷாலினியுடன் இணைந்து நடித்த ஒரே திரைப்படம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வெளியாகாத 'ரன்'... ரசிகர்கள் ஏமாற்றம்



23 ஆண்டுகளுக்கு பிறகு மாதவன் நடிப்பில் வெளியாகி ரசிகர்களின் வரவேற்பை பெற்ற 'ரன்' திரைப்படம் புத்தம் புது பொலிவுடன் தமிழ்நாடு, கேரளம் மற்றும் கர்நாடகாவில் ஏப்.24-ந்தேதி முதல் வெளியாகும் ன இயக்குனர் லிங்குசாமி தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில், 'ரன்' திரைப்படம் மீண்டும் வெளியாவது தள்ளிவைக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக எக்ஸ் தள பக்கத்தில் இயக்குனர் லிங்குசாமி கூறியிருப்பதாவது:-

'சிவகாசி' திரைப்படமும் கடந்த ஏப்.24-ந்தேதி வெளியாவதாக எங்களின் 'ரன்' திரைப்படத்தை வேறு ஒரு தேதியில் மீண்டும் வெளியிட முடிவு செய்துள்ளோம், அது பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவித்துள்ளார். இதனால் 'ரன்' திரைப்படம் இன்று வெளியாகவில்லை.

கடந்த 2002-ம் ஆண்டில் லிங்குசாமி இயக்கத்தில் மாதவன், மீரா ஜாஸ்மின் இணைந்து நடித்து வெளியான படம் 'ரன்'. காதல், ஆக்ஷனில் உருவான இத்திரைப்படம் மிகப்பெரிய வெற்றியை பெற்றது. இப்படத்தில் வித்யாசாகர் இசையில் உருவான பாடல்களும் ஹிட் ஆனது குறிப்பிடத்தக்கது.



விஜய் டிவியின் முன்னணி சீரியல்களில் ஒன்றாக இருந்து வருவது சிறகடிக்க ஆசை சீரியல். அதில் வில்லி ரோகிணி கதாபாத்திரத்தில் நடித்து வருபவர் நடிகை சல்மா அருண். தற்போது ரோகிணி – மனோஜ் விவாகரத்து பிரச்சனை தான் கதையில் பரபரப்பாக சென்று கொண்டிருக்கிறது.

சல்மா அருண் புது லுக்கில் எடுத்து போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார். அவரா அது என பார்க்கும் எல்லோரும் ஆச்சர்யத்துடன் கேட்டு வருகிறார்கள்.

# வசூலில் 'பாகுபலி 2'வை ஊதித் தள்ளிய 'துரந்தர் 2





அதிக வசூல் ஈட்டிய இந்திய படங்களில் அமீர் கானின் தங்கல் ரூ.2,000 கோடியுடன் முதலிடத்தில் இருந்து வருகிறது. ரூ.1,812 கோடி வசூலுடன் இரண்டாம் இடத்தை துரந்தர் 2 பிடித்த நிலையில் பாகுபலி 2 மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

அல்லு அர்ஜுனின் புஷ்பா 2 ரூ.1,742 கோடி வசூலுடன் நான்காம் இடத்திலும் ராஜமௌலியின் ஆர்ஆர்ஆர் ரூ.1,300 கோடி வசூலுடன் 5 ஆம் இடத்திலும் நீடித்து வருகிறது.

துரந்தர் 2 திரைப்படம் இன்னும் திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருப்பதால், வரும் நாட்களில் அதன் வசூல் இன்னும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது 'தங்கல்' படத்தின் சாதனையை எட்டுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# புதுக் கவிதை பகுதிகள்



## "பிளாட்பாரவாசிகள்"

சாலையோரம் நீண்டு
கிடக்கும் சிமெண்டு
பிளாட்பாரம்
நகரமில்லா எங்களின்
நிரந்தரமில்லா முகவரி!

காலடிச் சத்தம் எங்களுக்குப்
பின்னணி இசை!
வாகன ஹார்ன்
எங்களுக்குத் தாலாட்டிசை!

பாதசாரிகள் ஓடும் வேகத்தில்
எங்கள் நாட்களும்
உருண்டோடுகின்றன!

ஒரு பழைய போர்வை
எங்கள் கனவுகளின் கூரை!
ஒரு பிளாஸ்டிக் பை
எங்கள் சொத்து பட்டியல்!

பகலவனின்
கதிரொளியில்
எங்கள் தேகம்
வாடுகிறது!
இரவின் தெரு
விளக்கில்
எங்கள் வாழ்க்கை
ஒளிர்கிறது!



கல்யாண மண்டபங்கள்
வெளியே கொட்டும் உணவு
எங்களுக்கு விருந்து!

மழை பெய்தால்வானமென்னும்
எங்கள் வீடு கசியும்!

எங்கள் குழந்தை
காலணியில்லாமல் ஓடி
நகரத்தின் கனவுகளைத்
துரத்துகிறது!

அவனுக்குத் தெரியாது
கனவுகள் கூட அவனைத்
தவிர்த்து விட்டுத்தான்
ஓடுகிறது என்பது!

ஆனால்... ஒரு நாள்
இந்தச் சாலையும் கேட்கும்
"நீங்கள் யார்?" என்று.

அன்று சொல்வோம்
"நாங்கள் வீடில்லாதவர்கள்
இல்லை... வீடாகாத உலகில்
வாழ்பவர்கள்! என்று!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## ஹைக்கூகள்

இது மௌனமான நேரம்........
பேசிக் கொண்டே/
வெகு தூரம் வந்துவிட்டோம்./
விடைபெற்றது மௌனம்./

வெளியேறி உள்ளது/
வெற்றுத் தாளில்
மொழிபெயர்த்து/
வைத்திருந்த மௌனம்./

நிசப்தத்தின் நினைவாஞ்சலி./
நிமிட மௌனம்
அனுசரிப்பதற்குள்/
நானா பக்கமும் சப்தங்கள்.

பிரித்தெடுக்கும் பிறை நிலா/
இருளுடன் இரண்டறக்
கலந்த/ மௌனத்தை./

உடலைப் புதைத்து/
மௌனத்தை
விதைத்துச் செல்கிறது/
அமரர் ஊர்தி./

நூல் நிலையத்தை மூடியதும்/
விடப்பட்ட நூல்களின்
வாசிப்பில்..../ மௌனம்./

மௌனத்தை உடைக்கிறேன்/
துண்டு துண்டாய்
சிதறுகின்றன/
அமைதியும் நிசப்தமும்./

தியான அறையில்/
யாருடனோ சுவாரஸ்ய
உரையாடலில்.... /மௌனம்./

வீட்டைப் பூட்டி நடக்கிறேன்/
இருட்டையும் சில
பல்லிகளையும்/
மௌனத்திற்குத்துணையாக்கி..../

ஆலயத் திருவிழா/
கூட்ட நெரிசலில்
உயிரிழப்பு/
'மௌனம்' கலைத்தது
மௌனம்./



**முனைவர் வே.**
**புகழேந்தி**

## ஆய்வக விலங்கைக் காப்போம்!

நேரிசை வெண்பா!

ஆய்வகத்தில் காணும்
அழகு விலங்குகள்

ஆய்வென்ற பேரிலே
அன்றாடம்.. மாய்கின்ற

தன்மையை நல்லோர்
தரணியில் கண்டெதிர்த்த


நன்மையுறு நாளே நலம்!

அறிவியல் ஆய்வுக்காய்
ஆய்வகத்தில் கொல்லும்

முறையை எதிர்த்திட
மேன்மை.. யுறாத

நிலையினை மாற்றிட
நேர்ந்தே அமைந்தார்

கலையாய்
விலங்கினைக்காண்!



## தமிழறிஞர் ஜி.யு.போப்!

அறுசீர் மண்டிலம்.

தமிழுக்குத்தொண்டு
செய்தார்
போப்பே தக்கவாறு
உழைத்திட்டார் போப்பே!
கமழ்ந்திடவே நூல்தந்தார்
போப்பே கனடாவில்
பிறந்திட்டார் போப்பே!
சமயத்தில் தக்கபணி
செய்தார் சந்தனமாய்த்
தமிழுக்கே உழைத்தார்!
தமிழ்ப்பணிகள்
பலவாறாய்ப் புரிந்தார்
தமிழ்மொழியை
ஓங்கவைத்தார் போப்பே!


இறைப்பணியை
இனிதாகச் செய்தார்
இன்றமிழில் பல்தொண்டு
புரிந்தார் நிறைவான
தமிழ்ப்பணியும் செய்தார்
நேர்ந்திட்ட நம்மொழியை
நெய்தார்!
இறையின்முன் எல்லோரும்
சமமே என்றகொள்கை
நாட்டிட்டார் போப்பே!
சிறப்பான தமிழறிஞர்
போப்பே செழிப்புதனைத்
தமிழ்மொழியில் கண்டார்!

## செங்கதிரைப் போற்றுவோம் சேர்ந்து!

நேரிசை வெண்பா!

உலகுக்கு வெப்பம்
ஒளியையும் தந்தே
கலையாகக் காணும்
கதிரே! ..மலையன்ன
மங்காப் புகழுற்ற மாண்பே
எழுபரியே! செங்கதிரைப்
போற்றிடுவோம் சேர்ந்து!

எல்லா உயிரினமும்
ஏற்றமாய் வாழவே
சொல்லும் கதிரே
சுடராகும்!--பல்காலும்
பொங்கிடும் வெப்பம்
பொலிவாக
நல்குகின்ற
செங்கதிரைப்
போற்றுவோம் சேர்ந்து!



**முனைவர்**
**இராம.**
**வேதநாயகம்.**

## கடலிலே மழையானாய்

கடலிலே மழையாகி
கரைந்து வந்தாய்
என் மனப்பதிவாய்...

அலை மீது அலை
பொங்கி அழைத்தது
உன் மறையாத தடங்களை...

மழைத்துளி
ஒவ்வொன்றும்
மறந்ததை மீட்டதே
துளியாக விழுந்ததே
துடிக்கும் உள்ளத்தில்...

மழைக்கால மேகமாக
மனமெங்கும் சூழ்ந்தாய்
மறைந்து போகாமல்
மனத்திரையில் நிறைந்தாய்...


கடலோடும் மழையோடும்
கலந்த பின்னும்
கரையாமல் என்
உயிரில் நிலைத்தாய்...



உருகும் துளியில்
உறைந்த சுவடாய்
மழையாய் வந்த நீ...

**நா.பத்மாவதி**
கொரட்டூர்

---



சிரித்ததுக்கே சிந்திக்க
தொடங்கி விட்டேன்
காதலித்து இருந்தால்
என்னென்ன
செய்து இருப்பேனோ?!

கேட்டது மட்டும் கிடைக்க
என் காதலொன்றும்
மெனு கார்டு அல்ல
எந்த கட்டுப்பாடும் இல்லாமல்
அனு தினமும்-உன்னை
அணு,அணுவாய்
காதலிப்பேன்டி!

வெறுமையாய் நிற்கிறேன்
என்னிடம் எதுவும் கேளாமல்
எல்லாவற்றையும்
எடுத்து கொண்டாய்-ஏனோ
கோபம் மட்டும் வரவில்லை
நீ தேவதை என்பதால்!

உன் வெகுளியான
குழந்தைத்தனத்தில் ஏனோ
ஒவ்வொரு முறையும்
தெரிந்தே
ஏமாந்து போகிறேன்!

காதல் வாழ்க்கையின் ஒரு
பகுதி தான் காயப்பட்ட அந்த
காதலின் ஒரு பகுதியை தான்
கடப்பது கடினம்!

உண்மையான சுதந்திரம்
என்பது அடைத்து வைத்து
சிறைப்படுத்துவது அல்ல
பறக்க விட்டு இரசிப்பது!
சுயநலமில்லாத அன்பெனில்
எந்த உறவாக இருந்தாலும்
அது உன்னையே வந்து
சரணடையும்!

அளவுக்கு மிஞ்சினால்
அமுதம் மட்டுமல்ல
அன்பும் நஞ்சாகும்
எல்லையற்ற அன்பை
எவர் மீதும் வைக்காதே
என்றோ ஒரு நாள்
அந்த அன்போடு நீயும்
அநாதையாக்கப் படுவாய்!

கண்கெட்ட பிறகும்
காணத்துடிக்கும்
அந்த காதலை
என்ன சொல்வது?

நிலவாக மாறடி-உன்னோடு
உலா வருகிறேன் காதலோடு!

கோபமாய் கத்தாதே
வாழும் வாழ்க்கை
ஒருமுறை தான்
யுத்தமில்லாமல்
சமாதானமாய் வாழ
மௌனமாய் ஒரு
முத்தமிடு!



சுயநலக்காரர்கள் வாழும்
உலகமிது என்றோ ஒரு நாள்
நீ எப்படி இருந்தாலும்
தனித்து விட படுவாய்
யாருமில்லையென்று
ஒரு போதும் கவலைப்படாதே
முகம் பார்க்கும் கண்ணாடியில்
உன் பிரதியாவது
உனக்கு துணையாய் நிற்கும்!

பழங்களின் பல்பியே-எனை
குல்பியாக்கி இரவுகளில்
திண்ணாதே சொட்டும்
சிரிப்புகளுக்கே சிதைந்து
போனேனே தேன் கண்களால்
கொட்டியிருந்தால்
செத்து போயிருப்பேனோ?!

நைஸாக தானே பார்த்தாய்?
ஏனடி ஐஸ்ஸாக உருகி
போனேன்!

**லி.நௌஷாத் கான்**

தூக்க முடியாமல்
ப்ரிய மூட்டைகளைச் சுமந்து
பேருந்தில் ஏறிய என்னிடம்
லக்கேஜ் டிக்கட் வாங்கச்
சொன்னார் நடத்துனர்.

**ரிஷபன்**

## எதிர்பார்ப்பு !

அவரவர் நாட்டில் நடக்கும்
தேர்தலை விட உலக
நாடுகளே எதிர்பார்த்துக்
கொண்டிருப்பது...
அடுத்து... அமெரிக்காவில்
எப்போது தேர்தல்
வருமென்று...
' டிரம்பு மவராசனால
எல்லாருக்கும்
தலைவலியா
இருக்கு... !"



**எம்.பி.**
**தினேஷ்**
கோவை



பாவம் நீ.. கோபமோ
மகிழ்ச்சியோ கவலையோ
அத்தனையும் உன்னிடமே
கொட்டித் தீர்த்து விடுகிறேன்
விடாமல் பெய்து
கொண்டிருக்கும்
அந்தமழையைப் போல...

நீ எனக்காக இருக்கிறாய்
என்பதை நினைத்தாலே என்
உயிர் கூட்டில் கூடும் ஆயுள்
ரேகை...

இத்தனைக்குப் பிறகும்
இந்த வாழ்க்கையைத் தொடர
ஒரு காலை அல்லது மாலை
நேர ஒரு கோப்பை தேநீரின்
கதகதப்பு உயிர்ப்புடன் வைத்து
இதமாக்கிக் கொள்கிறது
மனதை..


நீ என்னுடன் இரு.
அது மட்டும் போதும்...
உன் இருத்தலில் மட்டுமே
என் வாழ்வியலைப்
பொருத்திக் கொள்கிறேன்..


**NISHAA**
**malaysia**

---

# நூல் விமர்சனம்

கவிஞர் கண்ணதாசனின்
"அர்த்தமுள்ள இந்துமதம்."
தொகுப்பிலிருந்து..
"முதல் பாகம்."
"ஸ்ரீ காஞ்சி காமகோடி
பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீசங்கராசார்ய சுவாமிகள்
ஸ்ரீ மடம்."முகாம் – சாரங்கபூர்
(உத்திரப் பிரதேசம்)
தேதி: 04–07–1973.
"ஸ்ரீமுகம்."




உலகில் உள்ள ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு காலத்தில் ஒரு மஹா புருஷரால் அந்தந்தக் கால தேசத்துக்கு ஏற்றவாறு தோற்றுவிக்கப்பட்டது. நமது இந்து மதம், ஒருவரால், காலத்திற்கேற்றவாறு தோற்றுவிக்கப்படாமல், உலகம் தோன்றின முதல், ஆண்டவராலேயே தோற்றுவிக்கப்பட்டு, எல்லாக் காலத்திற்கும், எல்லா மக்களுக்கும் ஏற்றவகையில், அனாதியாய் இருந்து கொண்டிருக்கிறது.

தற்போது இந்து மதம் தவிர, உலகில் உள்ள மதங்கள் எல்லாம் மூவாயிரம், நாலாயிரம் வருஷங்களுக்கு முன்பு தோன்றியுள்ளவை; அதற்கு முன்னால் இருந்த மதங்கள் எல்லாம் இப்போது இல்லை; ஆகவே, ஒருவரால், ஒருநாள் தோற்றுவிக்கப்பட்ட எந்த மதமாக இருந்தாலும், ஒருநாள் அதற்கு முடிவும் ஏற்பட்டு விடுகிறது.

நமது இந்து மதத்திற்கு அதுபோல ஒருநாளும் முடிவு ஏற்படாது. ஆனால் குறைவு ஏற்படலாம். குறைவு அவ்வப்போது தோன்றும். இறைவனின் அவதாரத்தினாலும் மஹா புருஷர்களாலும் ஞானிகளாலும் நிறைவு பெற்றுவிடும். இந்து மதத்தில் நடத்தக்கூடிய ஒவ்வொரு காரியத்திற்கும் சடங்கிற்கும் அர்த்தமுண்டு என்ற கருத்துக்களை எல்லாம் பாமர மக்கள் படித்து அறிந்து கொள்ளும் வகையில் கவிஞர் திரு.கண்ணதாசன் அவர்கள் 'தினமணி கதிர்' மூலம் எழுதி வந்ததை, நல்ல கருத்துள்ள நூல்களாக வெளியிட்டு வரும் 'வானதி பதிப்பகம்' திருநாவுக்கரசு அவர்கள் வெளியிடுவதையறிந்து சந்தோஷிக்கிறோம்.

இதுபோன்ற நல்ல ஆஸ்திகக் கருத்துக்கள், எல்லா மக்களுடைய மனத்தில் ஊறி, இந்து தர்மத்தைக் கடைப்பிடித்து எல்லோரும் சுகமாக வாழ வேண்டும்.
-நாராயண ஸ்மிருதி.

### "திருப்பணி."

நம் வாழ்க்கையில் நடைபெறுகிற ஒவ்வொரு நிகழ்ச்சியும், இறைவனுடைய ஏட்டினிலே உடனுக்குடன் பதியப்படுகிறது. நாம் ஒருவருக்கு நன்மை செய்தால், நிச்சயமாக நற்பலன் ஏற்படுகிறது. ஒருவருக்கு தீமை செய்தால் கண்டிப்பாக அதற்குரிய தண்டனை கிடைக்கிறது. இவை இறைவனின் தீர்ப்புகள் என்பதைக் கவிஞர் கண்ணதாசன் தன் வாழ்க்கை அனுபவங்களைக் கொண்டு ஒப்பிட்டுப் பார்த்து, ஆராய்ந்து எழுதிய கட்டுரைகளே "கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்து மதம்."

இந்து மதம் என்றால், ஆழமான தத்துவங்கள் உள்ளடங்கியது; மிக உயர்ந்த வாழ்க்கை நெறிகள் நிறைந்தது; அதை அணுகுவது கடினம்; அதன் அருமை பெருமைகளை - அதன் அர்த்தத்தை, வேதம் பயின்ற பண்டிதர்களும் அருள்பழுத்த ஞானிகளுமே புரிந்துகொள்ள முடியும். சாதாரண மக்கள் அதை அணுகவோ புரிந்து கொள்ளவோ முடியாது என்ற பயம் மேலிட்டிருந்தது. அந்த பயத்தினை எல்லாம் போக்கி, சாதாரண மக்களும், இந்து மதத்தின் தத்துவங்களை உணர்ந்துகொள்ள முடியும். அதன் சாரத்தைப் புரிந்து கொள்ள முடியும் என்று, மிக எளிமையாகவும், இனிமையாகவும் காட்டி விட்டார் கவிஞர் கண்ணதாசன். இந்துமதம் எவ்வளவு சுதந்திரம் உள்ளது. எவ்வளவு அர்த்தங்கள் பொதிந்துள்ளது என்பதனைக் கவிஞரின் கட்டுரைகளைப் படிப்பதன் மூலம் நாம் உணர்கிறோம்.

எத்தனையோ அறநிலையங்கள் ஒன்றுகூடிச் செய்ய வேண்டிய காரியங்களை, போதிக்க வேண்டிய நற்கருத்துக்களை, தனி ஒரு மனிதர், தம் எழுத்துச் சுடரால் மக்களை நல்வழிப்படுத்துகிற பெரும் பணியினைச் செய்துள்ளார். இது அவருக்கு இறைவன் அளித்த பேறு.

இந்து சமயத்தின் வளர்ச்சியிலும் மனித சமுதாயத்தின் நலத்திலும் கருத்து மிகச் செலுத்தி, தம் வாழ்க்கையில் பெற்ற அனுபவக் கீற்றுகளுக்கு உருக்கொடுத்து தத்துவத்தையும் ஞானத்தையும் சேர்த்து, கனியமுதம் போன்ற கட்டுரைகள் வடிவில், "அர்த்தமுள்ள இந்து மத"மாகத் தந்துள்ள கவிஞர் கண்ணதாசன் அவர்களுடைய திருப்பணி மகத்தானது; பாராட்டுதற்குரியது.

இந்நூலுக்கு அருள் முத்திரையாக ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராசாரியார் அவர்களின் ஸ்ரீ முகம் கிடைத்திருக்கிறது. இதில் எல்லோரும் சுகமாக வாழப் பெரியவர்கள் அருளாசி வழங்கியிருக்கிறார்கள். இது ஒரு பெரும் பேறு.

கடவுளின் கருணையும், தமிழ் மக்களின் மகத்தான ஆதரவும் இந்நூலுக்கு இருக்கிறது என்ற நம்பிக்கையோடு, இந்து தர்மத்தின் பொன்னாரமாக வானதி பதிப்பகத்தின் சிறப்பு வெளியீடாக மகிழ்ச்சியோடு இதை வெளியிடுகிறேன். "அர்த்தமுள்ள இந்து மதம்" முதல் பகுதி இது. இரண்டாவது மூன்றாவது பகுதிகளும் வெளி வந்துள்ளன.

இந்நூலை, வானதி பதிப்பகத்தில் வெளியிட அனுமதியளித்த கவிஞர் கண்ணதாசன் அவர்களின் கருணை உள்ளத்துக்கு அன்பு கலந்த நன்றி. அவருடைய நூல்களைத் தொகுத்துத்தரும் திரு.இராம.கண்ணப்பன் அவர்களுக்கும் நன்றி. இந்நூலை நீங்கள் படிப்பதோடு மட்டுமல்லாமல், உங்கள் நண்பர்களுக்கெல்லாம் பரிசளித்து இன்பமடைய வேண்டுகிறேன். கவிஞருக்கு நல்வாழ்த்துக் கூற வேண்டுகிறேன்.
- ஏ.திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்.

### "முன்னுரை."

இந்து மதத்தின் தத்துவங்களில் எனக்கு நீண்ட கால ஈடுபாடு உண்டு. நான் நாத்திகனாக இருந்த காலத்தில்கூட, சில தத்துவங்களின் உள்ளர்த்தத்தை வியப்போடு நோக்கியிருக்கிறேன். அவற்றைப் பற்றியெல்லாம் பின்னால் நாம் எழுதப் போகிறோம் என்று கருதியதில்லை. கருதியிருந்தால், இன்னும் பல விஷயங்களைக் குறித்து வைத்திருப்பேன்.

காஞ்சிப் பெரியவர்களைப் போலவோ, வாரியார் சுவாமிகளைப் போலவோ ஆழமான தத்துவ அறிவு எனக்கில்லை. அனுபவ ரீதியான உண்மைகளையே பெரும்பாலும் இதில் கூறியிருக்கிறேன்.

ஓராண்டுக்காலம் தொடர்ச்சியாக இது 'தினமணி கதிரில்' வெளிவந்தபோது இதற்குக் கிடைத்த வரவேற்பு எனக்குப் பெரும் வியப்பைக் கொடுத்தது.

எந்தப்பக்கம் திரும்பினாலும், இது பற்றிய பேச்சாகவே இருந்தது. இது புத்தகமாக வரவேண்டுமென்றும் பலபேர் விரும்பினார்கள். வழக்கமாக எனது நூல்களை வெளியிடும் வானதி பதிப்பகம் இதையும் அழகாக வெளியிட்டிருக்கிறது.

இவ்வளவு குறைந்த விலையில் இவ்வளவு செம்மையாக இதனை வெளியிட்ட வானதி திருநாவுக்கரசு அவர்களுக்கும், வழக்கம் போல் இதனைத் தொகுத்து வைத்திருந்த தம்பி இராம.கண்ணப்பனுக்கும் என் நன்றி.

29.06.1973 விசாலாட்சி இல்லம் சென்னை - 17.
அன்பன் கண்ணதாசன்.

### "நோக்கம்."

என் இனிய நண்பர்களே,

இந்து மதத்திற்குப் புதிய பிரசாரங்கள் தேவையில்லை ஏற்கனவே உள்ள பிரசாரகர்கள், உபன்யாசகர்கள் யாரும் சக்தி குறைந்தவர்களல்லர். சொல்லப் போனால், அவர்களிடமிருந்து கற்றுக் கொண்ட விஷயங்களையே, நான் இப்போது எழுதப்போகிறேன்.

ஆகவே, 'புதிய பிரசாரகன் கிளம்பி இருக்கிறான்' என்ற முறையில், இந்தத் தொடர் கட்டுரையை யாரும் அணுகத் தேவையில்லை. நான் நாத்திகனாக இருந்தது, இரண்டு மூன்று ஆண்டுகளே. அதுவும், நாத்திகத்திற்கு ஒரு போலித்தனமான மரியாதை கிடைக்கத் தொடங்கிய இடைக்காலத்திலேயே! நான் எப்படி ஆத்திகனானேன்? கடவுளையும், புராணங்களையும் கேலி செய்வதற்காகக் கந்தபுராணம், பெரியபுராணம், கம்பனின் ராமகாதை, திருவாசகம், திருப்பாவை, திருவெம்பாவை, அதை உள்ளிட்ட நாலாயிர திவ்யப் பிரபந்தம், வில்லிபாரதம் அனைத்தையும் படிக்கத் தொடங்கினேன். அறிஞர் அண்ணா அவர்கள், கம்பனை விமரிசித்து, 'கம்பரசம்' எழுதியதற்குப் பின் அதன் எதிரொலியாகவே எனக்கு இந்த ஆசை தோன்றிற்று. படித்தேன்; பல பாடல்களை மனனம் செய்தேன். விளைவு?

கம்பனைப் படிக்கப் படிக்க நான் கம்பனுக்கு அடிமையானேன். புராணங்களிலுள்ள தத்துவங்களைப் படிக்கப் படிக்க நான் கடவுளுக்கு அடிமையானேன். நாத்திகவாதம் என்பது அரசியல் நோக்கம் கொண்டது என்பதையும், உள் மனத்தின் உண்மையான உணர்ச்சி அல்ல என்பதையும் உணர்ந்தேன்.

**தொகுத்தளித்தவர்:-**
**கவிச்சாரல்**
**கொள்ளிடம் காமராஜ்,**
**திருச்சிராப்பள்ளி- 621 216.**






## புன் முறுவல்

இதயத்தின் சன்னல் திறக்கும்
ஒரு சின்னப் புன்முறுவல்!

உதிக்கும் இதழ்களில்
உயிர் பெறும் நிலவு!

வார்த்தைகள் தோற்கும்
இடத்தில் வாழ்த்து சொல்லும்
மௌனம்!

மனக் கவலை தீர்க்கும்
மருந்தில்லா வைத்தியம்!

அந்நியரை நண்பராக்கும்
அன்பின் ஒற்றை பாலம்!

சிரிப்பாய் நீ
சிறகடிக்கட்டும் உலகம்!

புன்முறுவல் என்பது
வெறும் இதழ் அசைவு
மட்டும் அல்ல;

அது ஒரு மனிதனின்
அகத்தின் அழகை
வெளிப்படுத்தும் கண்ணாடி!

ஒரு புன்னகை
பகைகளைத் தீர்க்கும் வலிமை
கொண்டது!

நாம் புன்னகைக்கும்போது
மூளையில் மகிழ்ச்சியைத்
தூண்டும்!
ஹார்மோன்கள் சுரக்கின்றன !

இது மன அமைதிக்கும், உடல்
நலத்திற்கும் வித்திடுகிறது!

ஒருவரின் புன்முறுவல்,
எதிரில் இருப்பவர்கள்
கவலையை மறக்கச் செய்யும்!

மனித மனதில்
ஆழமான அமைதியை
ஏற்படுத்தும் கருவி!

மென்மையாகவும்
ஒருவருக்கு ஆறுதல்
அளிக்கவும் செய்கிறது!

புன்முறுவல் மனித வாழ்வின்
இருளை நீக்கும் ஒரு மெல்லிய
ஒளிக்கீற்று !

புன்முறுவல் என்பது எதையும்
எதிர்பார்க்காத ஒரு தர்மம்!

பூக்கள் செடிக்கு
அழகு சேர்க்கும் !



புன்முறுவல்
மனிதன் முகத்திற்கு
இளமையை
கொடுக்கும்!

**பெ.திருமுகம்**
மணமேல்குடி

## விழித்தெழுவாய் மனிதா நீதான்

மாக்கடலைக் காக்கிறது வானம் பெய்து
மலையருவி ஆறுகளாய் பருவம் தோறும்
பூக்காமல் காய்க்காமல் இருப்ப தில்லை
பூமியிலே தாவரங்கள் காலம் தோறும் !
ஆக்கங்கள் தாராமல் இருப்ப தில்லை
ஆநிரைகள் ஆடுகளும் கோழிப் புட்கள்
ஊக்கமுடன் இவைகளெல்லாம் இயங்கும் போது
உழைக்காமல் இருப்பதுவோ மனிதா நீதான் !

கீற்றுகளை கதிரனுப்பி முகத்தைத் தொட்டுக்
கீழ்வானம் பாரென்று சொன்ன போதும்
காற்றுவந்து உடல்தழுவி அசைத்த சைத்துக்
கண்விழித்துப் பாரென்று சொன்ன போதும்
நேற்றிரவு முடிந்ததெனக் கூரை யேறி
நெடுங்கழுத்துச் சேவலது சொன்ன போதும்
ஆற்றுதற்கே ஆயிரமாய்ப் பணியிருந்தும்
அசையாமல் உறங்குவதோ மனிதா நீதான் !



புட்களுமே இரைதேடி விடியற்காலை
புறப்பட்டுச் செல்கிறது சோம்பலின்றி
முட்புதர்கள் மண்டியுள்ள காட்டிற்குள்ளே
முனைப்புடனே விழித்துளது விலங்கெல்லாமே !
கொட்டிவளம் இயற்கைதாம் குவித்து வைத்துக்
கொள்ளென்றே உன்னிடத்துச் சொன்னபோதும்
வெட்டியாக இருப்பதுவோ மனிதா நீதான்
விழித்தெழுந்தால் அனைத்துமுன்றன் கைகளுக்குள் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

## பிரிவு

கோர்த்துக் கட்டிய
சொற்களின் தோரணங்கள்;
நினைவலையாய்
வந்தென்னை
கொல்லாமல் கொல்லும்!

கொடியில் அமரும்
சிறு பறவையாய் கணத்திற்கு
கணம் பறந்தோடும்;
மீளவும் வரும்!

நினைவுக்கு நான் நடுங்கி;
கனவுக்குள் ஒடுங்குகிறேன்!

கோடையிலும், வாடையிலும்,
மாரியிலும், இளவேனிலாய்
நின்றவள்; எப்போதும்
இருப்பாள் என்றே; நான்
நினைத்திருந்தேன்!

கூப்பிடா குரலுக்கு
ஏங்கியே நான் நிற்கையிலே;
உறங்கா இரவுகளில்
வருந்தி நான் நிற்கையிலே;

புலர்ந்த பொழுதில்
பூ மலரும்
நேரத்தில்
மனவாசல் திறந்து
மெதுவாய்
வருவதென்ன!



கோடையில் குளிர் மலராய்
வாடையில் கணப்பின்
வெப்பமாய் நின்றெதென்ன !

நித்திரையை
தொலைத்ததென்ன!
நிம்மதியை இழந்ததென்ன!
புன்சொல் சொல்லி
புண்பட்ட இதயத்தை
புலன் இருந்தும்
அறியாதிருந்தேனோ?
பொழுதுகளை தவறவிட்டது;
என் தவறென்று
புலம்புகிறேன்; இன்று நான்!

என் தலைவிதி என்றே
நானே வலிந்து எழுதிட்ட என்
எழுத்தை நீ வந்து அழித்து
விடு! என்னை நீ காத்து விடு!

பொத்தி வைத்த பெரு
நெருப்பில் கருகி நான்
நிற்கையில் குளிர் பார்வை
ஒன்றை நீ பரிசாய்
அளித்துப் போவாயா?

பேசாத நேசத்தை
புன்னகையில் மறைத்திட்டாய்!
சொல்லாதிருந்தாலும்
சத்தியமாய் சொல்லுகிறேன்
என் ஆசை உன்னோடு தான்!

**சசிகலா விஸ்வநாதன்**

---

மேதகு மே தினத்தின்
மேன்மைக்கோர்
சொல்லுண்டோ ?
உழைப்பார்க்கு ஓய்வில்லை!
ஓய்வென்றால் வயிற்க்கும்
ஓய்வாகிடுதே ?
ஓய்வாகும் நாட்களெல்லாம்
ஓரிரு நாட்களெனின்
வயிற்றுக்கும் ஓய்வெனலாம்:
விரதமெனலாம்
ஓடுகின்ற நாட்களுடன்
உழைப்பதற்கும் ஓடி ஓடி



உடைந்த
தொன்றும்
தேகமன்று
உடைந்தவன்
மனமென்றால்
உழைத்தவனின்
உழைப்புக்கு
அங்கீகாரம்
போவதெங்கே ?

**ஓம்குமார் P N**





ஒரு
பார்வைதான்
வீசிப்
போனாய்..
முளைப்பாரியாச்சு
மனசு..

**ரிஷபன்**

---

அவரவர் பாதையில்
ஏற்றமும் மாற்றமும்

உள்ளமது ஆயிரம் துயர்
கண்டாலும்

உண்மை வழியில்
புரிந்து நடப்போம்

உலகம் ஆராய்ந்து
சொன்னாலும் தளர்வின்றி

தேசமும் நேசமும்
சுவாசமாய் காண்போம்

ஒருவிரல் புரட்சி காலத்தில்
சமுதாயத்தில்


தலைநிமிர்ந்து நடக்கும்
தமிழக மக்கள்

நிம்மதி காணும்
உத்தமர்கள் தான்.

**தாராமதன்**

---

நான் என்ன சொன்னாலும்
என் வீட்டில் ஒப்புக்கொள்ள
மறுக்கிறார்கள். நான்
தற்கொலை செய்து
கொள்ளப் போகிறேன்
நீயாவது நிம்மதியாக இரு.....
இப்படிக் கடிதம் எழுதி
காதலனுக்கு அனுப்பி விட்டு
அவள் தற்கொலை செய்து
கொண்டாள். கடிதத்தைப்
பிரித்துப் படித்த காதலன்
நொறுங்கிப் போனான்.
அடிப்பாவி... நிம்மதியாக
இரு என்று எழுத உனக்கு
எப்படி மனம் வந்தது... நீ
இறந்ததைவிட நீ எழுதி
வைத்துள்ள கடிதத்தின்
அந்த வரிகள் தான்
என்னால் தாங்க முடியாத
வேதனையைத் தருகிறது.
நிம்மதியாக இருப்பதா?
நானா? நீ இல்லாமலா...
எப்படியடி உன்னால் இப்படி
எழுத முடிந்தது.. நம்
காதலுக்கு மரியாதை
இவ்வளவுதானா....
நீ இறந்த பிறகு நான்
உயிருடன் இருப்பேன்



என்று எப்படி
உன்னால்
கற்பனை
செய்ய
முடிந்தது என்று
நினைத்துக்
கொண்டிருக்கும்
போதே நினைவிழந்து
மெரினாவின் கடல்
பகுதிக்குள் மூழ்கிக்
கொண்டிருந்தான்.

**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.

---



## உலக கால்நடைகள் தினம்.!

மாடு மேய்க்கப் போகலாமடி.. பொம்பளே..!
மாடி மனை வாங்குவோமடி! ஆடு மாடு கோழி வளர்த்து
அதிபராக வலம் வந்து.. காசு பணம் பார்க்கலாமடி!

நன்றி உள்ள நாய்கள் தானடி.. பொம்பளே.. நமக்கு
இங்கு தோழன் தானடி..! பத்துக்குட்டி போடுகின்ற பன்றி
வளர்த்தாலும் நமக்கு பலமடங்கு லாபம் தானடி!

ஆடு வளர்த்து மேய்க்கலாமடி.. பொம்பளே..
அவைகள் நமக்கு தோழன் தானடி! காடு கழனி உழுது உதவும்
காளை மாட்டை ஏரில் நாம பூட்டலாமடி!

பால் கொடுக்கும் பசுவைப் பாரடி.. பொம்பளே..
காமதேனு தெய்வம் தானடி..! வண்டி ஓடும்..
பாரம் சுமக்கும் காளை மாடும் தோழன் தானடி!


கழுதை சுமக்கும் பாரம் பாரடி.. பொம்பளே.. கசடு சுமக்கும்
குணத்தைப் பாரடி..!குதிரையோடு கோழிகளும் வாத்தும்
நமக்கு தோழன் தானடி!

கால்நடைகள் ஜீவன் தானடி.. பொம்பளே..! காத்து வளர்க்க
வேண்டும் பாரடி! பாலமாகும் மனிதனுக்கு.. பாசத்தோடு
கால்நடைகள்.. வளப்பதற்கு ஓடி வாங்கடி.!

**வே.கல்யாண்குமார்.**

## தலைநிமிர வைக்கும் நம் தமிழ்!


உலகமே போற்றுகின்றது நம் தமிழ்!
உலகமே வழிமொழிகின்றது மூத்தமொழி தமிழ்!
பகைவர்களும் பாராட்டிடும் மொழி தமிழ்!
பண்பாட்டைப் பயிற்றுவிக்கும் மொழி தமிழ்!
உலகம் தோன்றியபோதே தோன்றியது தமிழ்!
உலகம் வியந்து பார்க்கும் சிறப்புமிகு தமிழ்!
தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா!
நாமக்கல் கவிஞரின் வரிகளுக்கு உயிர் வந்ததடா!
உலகமொழிகளின் தாய்மொழி நம் தமிழ்!
உலகமொழிகளுக்கு சொற்கள் தந்தது நம் தமிழ்!
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய
மூத்தமொழி முதல்மொழி நம் தமிழ்!
உலகில் முதல்மனிதன் உரைத்திட்ட மொழி நம் தமிழ்!
உலகில் மொழி ஆய்வாளர்கள் ஏற்றிட்ட மொழி நம் தமிழ்!
இலக்கண இலக்கியங்களின் களஞ்சியம் நம் தமிழ்!
எண்ணிலடங்கா சொற்களைப் பெற்ற மொழி நம் தமிழ்!
தொல்காப்பியத்திற்கு முன்பே இலக்கியங்கள் உள்ள தமிழ்!
தோன்றின் புகழோடு தோன்றிய மொழி நம் தமிழ்!
ஒப்பற்ற திருக்குறள் எழுதப்பட்ட மொழி நம் தமிழ்!
ஓங்கிய சங்க இலக்கியங்கள் உள்ள மொழி நம் தமிழ்!



பன்னாட்டு மொழியாக கோலோச்சி
வருவது நம் தமிழ்!
பன்னாட்டு அறிஞர்கள்
போற்றிப்புகழும் நம் தமிழ்!
எல்லாவளமும் நிறைத்திட்ட மொழி நம் தமிழ்!
எல்லா மொழிகளின் தாய்மொழியே நம் தமிழ்!

**கவிஞர் இரா. இரவி**

---



அதை நட்டு வைத்தது
யாரங்கு?
என்ன இருக்கும்
அதனுள்ளாய்?

பிக்ஷாப்பர் என்றார்கள்,
சரக்குப்பை என்கிறார்கள்,
துணிமணி மற்றும் பலசரக்கு
பை என்றார்கள்!

நடைபயிற்சி சென்றதொரு
மாலையில் ரயிலடியின் புற
நடைமேடையில் ஆங்காங்கே
பூப்பு கொண்டிருந்த
மனிதர்கள்!

இரு சக்கர
வாகனத்துணையுடனும்
மற்றும் தனித்தும்!

ரயிலிலிருந்து இறங்கி வரும்
உறவுகளை உடனழைத்துச்
சென்றார்கள்!

யாரோவின் வருகைக்காக
காத்திருந்தார்கள்!

ரயிலேற்றி விட
அவசரம் கொண்டு
வந்திருந்தார்கள்!

சிரித்தார்கள்,
பேசினார்கள்,
அளாவளாவிக்
கொண்டார்கள்!

கூட்டத்திலுன்னா
பெண்ணொருத்தி யாருடனோ
கைபேசியில் சண்டையிட்டாள்,
குறைபாடிக் கொண்டும்,
அழுது கொண்டும்
சுற்றியுள்ளவர்கள் பற்றி
பிரக்ஞையற்றுமாய் இருந்தாள்!

வாய் ஓயாது பேசிக்
கொண்டிருந்தது ரயில்
நேரமறிவித்த குரல்!

வந்து நின்ற ரயிலோரமாய்
தேநீர் விற்பவர்கள்!

நேரமறிவிக்கிற மிண்ணனு
கடிகாரம்!

நடைமேடை படிக்கட்டில்
முழங்கால் வலியுடன்
மேலேருகிற முதியவள்!


நகர்கிறது மேகங்கள்,
அர்த்தத்தின் அழுத்தத்தை
அவிழ்த்துச் செல்கிற
பருத்தடர்ந்த மரங்கள்!

வான் பரப்பின் இழைவில்
சிறகசைக்கிற ஒற்றைப்பறவை!

காலுரசிச்செல்கிற நாயின்
ஓட்டம்!

எதிரும் புதிருமாய்
நடைபயிற்சி
கொண்டிருந்தவர்கள்!

இன்னமும் தன் இருப்பு
மாறாது அமர்ந்திருக்கிற
யாரோ விட்டுச் சென்ற பை!



அன்றாடங்களின்
நகர்வுகளில் யாரோ
விட்டுச்சென்ற பைகள்
யாருக்காகவோ!

**விமலன்**

---

## பேசும் மௌனம்:


பேசுகின்ற பேச்சு எளிதில் புரிந்திடும்
பேசாத மௌனம் மனதைக் கொன்றுவிடும் !

கோபத்தில் கத்தினாலும் பின் சாந்தமாவாள்
கத்தாமல் மௌனமானால் எரிமலையாகிடுவாள் !

உரைத்த சொற்களுக்கு ஒரு பொருள் உண்டு
உரைக்காத சொற்களுக்கு ஓராயிரம் பொருள் உண்டு !
உதடுகள் உச்சரிக்காவிடினும் கண்கள் பேசும்
ஒரே ஒரு பார்வையில் சுருட்டி விடுவாள் !

வெளியில் மௌனமாகத் தோன்றினாலும்
வீட்டில் புயலாக மாறுவதும் உண்டு !

பேசாத மௌனமும் பேசும் பலவற்றை
பேசியதாகக் கருதி செயல்பட வேண்டும் !



பேசியபோது சொன்னவைகளை நினைத்து
பேசாதபோது நடைமுறைப் படுத்த வேண்டும் !

உன்னோடு "கா " என்று சொல்லிவிட்டால்
ஒரு வேலையும் ஓடாது நமக்கு !

ஊடலை வெளிப்படுத்தும் ஆயுதம் மௌனம்
கூடலுக்கு மௌனம் கலைப்பது அவசியம் !

பேசாவிட்டால் போகட்டும் என்று இருந்தால்
பேசிக் கொள்வோம் நமக்கு நாமே !

மகிழ்வான வாழ்விற்கு மௌனம் தேவையன்று
மனம் விட்டு பேசினால் ஊடல் ஒழியும் !

சில நேரங்களில் மட்டும் மௌனம் நன்மை தரும்
பல நேரங்களில் மௌனம் தீமையே தரும் !

அவள் கோபத்தில் கத்தினால் திருப்பி நாமும்
அவளுடன் கத்தாமல் மௌனம் காப்பது சிறப்பு !

**கவிஞர் இரா.இரவி!**

---



நீ ஊட்டி விடும்
தயிர் சாதம் கூட
பிரியாணி போல
பிடித்து தான் போகிறது!

மயிலே அரசு
உயில் எழுத வேண்டும்
இரயிலில் உன்னோடு
நான் மட்டுமே பயணிக்க!

ஓய்ந்த பொழுதில்
பாய்ந்தெல்லாம் விடாதே
சாய்ந்து சாவகாசமாய்
மேய்ந்த காதல்
கதைகளையெல்லாம்
தொய்வில்லாமல்
தனிமையில் பேசுவோம்
இம்சைகள் செய்தாலும்
அசை போட அந்த காதல்
இனிமையானது தான்!

ஆகச் சிறந்த கவிதைகள்
எல்லாம் எனக்கு எழுத
தெரியாது அவளை
நினைத்து கிறுக்க மட்டுமே
தெரியும் ஏனோ
சில நேரங்களில்
என் புலம்பல்கள் கூட
உங்கள் கருணையால்
அழகாய் தெரிந்து
தொலைகிறது!

என்ன நடந்தாலும் சரி
யார் என்ன
சொன்னாலும் சரி
ஏனோ அந்த காதல்
இப்போதும் கூட
அழகாய் தான்
தெரிகிறது!

நீங்கள் இடும் விருப்பக்
குறியீடுகளுக்காக எல்லாம்
விதைக்க வில்லை
என் எண்ணங்களை.
என்றோ ஒருநாள்
கை தவறியாவது
அவள் அலைபேசியில்
என் புலம்பல்களை
இந்த வலைத்தளத்தின்
வாயிலாக பார்த்து விட
மாட்டாளா என்ற
ஏக்கத்தில் தான் விதைத்து
கொண்டிருக்கிறேன்
அவள் பிச்சையிட்ட
கவிதைகளை!
நான் சரியா தவறா
என தெரியாது என்
கண்மூடித்தனமான காதலும்
பரிசுத்தமானது
இன்னும்,இன்னுமென
இப்பிறவி முழுதும்
உன்னை காதல் செய்ய
வேண்டுமடி!

ஆயிரம் பொய் சொல்லி
ஒரு கல்யாணம்
செய்லாம்ன்னு
பெரியவங்க சொல்வாங்க
இன்னும் எத்தனை பொய்கள்
சொல்ல வேண்டும்
உன்னை காதலியாய்
அடைவதற்கு!

வந்த பாதை மறந்து போச்சு
அந்த பார்வை பட்டதாலே!

அந்த சேராத காதல் மீது
தீராத ஒரு போதை
இருக்கத் தான் செய்கிறது!

பழகி தொலைக்காதே
பாசம் வைக்காதே
என்றோ ஒரு நாள்
எல்லா உறவுமே
விலகி தான் போகும்
வலிகளை தான்
உனக்கு பரிசளிக்கும்
அந்த அன்பில்
ஆபத்தும் இருக்கிறது
ஒருபோதும் அதற்கு
அடிமையாகி
தொலையாதே
சில நேரங்களில்
அந்த அன்பு வாழும்
போதே
நரக வாழ்க்கையை கூட
கொடுக்கலாம்!



**லி.நௌஷாத் கான்**

---

1. வாழும்போது ஆட்டம்
அதிகமாக இருந்தால்
சாகும்போது கூட்டம்
குறைவாகத்தான் இருக்கும்

2. டெலிபோன்
வந்தபோது வெளிநாட்டில்
உள்ளவர்களிடம் கூட பேச
முடிந்தது ஸ்மார்ட் போன்
வந்த பிறகு வீட்டில்
இருப்பவர்களிடம்
கூட பேச
நேரமில்லை

3. ஆண்
அறிவுபூர்வமாக
யோசிப்பான்
பெண் உணர்வுபூர்வமாக
யோசிப்பாள்

4. எல்லாம் புரிந்து கொண்டு
வாழ்பவர்கள் தான் புலம்பித்
தவிக்கிறார்கள் எதுவுமே
புரியாமல் வாழ்பவர்கள்
சந்தோஷமாகத்தான்
இருக்கிறார்கள்

5. மரம் போல வளருங்கள்
பறவைகள் தானாக வரும்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி


Happy Birthday
SRIVATSAN.A.S


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED:
FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home (Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com



எலாவூர் மிக அருகில்
சுண்ணாம்பு குளம்
Sqft ₹120/_
(மினிமம் 10000sqft)
Ph.9600660997


Seek Strive Succeed
Annai Violet Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
Key Features
BANK LOAN
UG & PG COURSES
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர் to செங்கல்பட்டு ரோடு
1 to 2 ஏக்கர்
தொடர்புக்கு:
Ph. 6384617773


துபாயை தலைமையிடமாகக் கொண்டு
தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள
உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட்
(Would Be Global Pvt Ltd)
ஆன்-லைன் வர்த்தக E-Commerce
நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக
பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.
பொது மேலாளர்:
7092069555 / 7092047555


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY - 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
Call/Whatsapp
94386 10756


WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு
• முகப்பேர்
• அம்பத்தூர்
• பட்ரவாக்கம்
• பெரம்பூர்
• மாதவரம்
• திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.


SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com



Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com


WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872


SMART PROMOTERS
BUSINESS VIDEOS
IN ALL INDIAN LANGUAGES
SUCCESS
GROWTH
MULTIPLE LANGUAGES
PROMOTE WITH US
PROMOTE YOUR BUSINESS THROUGH OUR CHANNEL
1. Promote your Business
2. In Multiple Languages
3. We Promote in Social Media
4. Find Innovation & New Techniques
5. With Less Budget
HIGHLY PROFESSIONAL & ATTRACTIVE CONTENT
ENGLISH TAMIL TELUGU HINDI ODIA BENGALI KANNADA
CALL NOW: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Low Cost Matrimony Website
MATRIMONY
WEBSITE
RS.15000
Call/Whatsapp - +91 97155 39521


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


அருள்தரும் தெய்வம்
விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
ஸ்ரீ அகத்தியர் சொன்ன ரகசிய மந்திரங்கள்
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!


WANTED
— MARKETING EXECUTIVES —
We are hiring Marketing Executives (Male/Female) for immediate openings.
Full-Time / Part-Time
Salary: ₹30,000 - ₹50,000
Open to all, including Retired / VRS candidates and Job Seekers.
Location: All Over Tamil Nadu
Contact: 7789941009


ADVERTISE WITH US
CONTACT US
9438610756



சிங்கபெருமாள்கோயில்
S.P கோயில். On. GST Road
2 ஏக்கர் விற்பனை
1 ஏக்கர் 25cr
25cr
25cr
வண்டலூர்
கேளம்பாக்கம் ரோடு
17 ஏக்கர் விற்பனை
1 acre 16 cr
Ph. 9566055082


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRESS
TV NEWS
பேப்பர்பாய்
8122664699


TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009



# பல்சுவை களஞ்சியம்




# மீம்ஸ்







# நல்பொன்மொழி தான் நம் பாக்கெட்டில் இருக்கும் பொன்தான்...

நல்லகாரியத்தைச் செய்ய நினைக்கிறவர் ஒருக்காலும் ஏமாறுவதில்லை தீய காரியங்களை செய்கிறவர்கள் திட்ட மிட்டுச்செய்தாலும் அவர்கள் ஏமாந்து விடுகிறார்கள்
_ லாபுரூயர்

ஒருஆட்டுக்கூட்டத்திற்கு சிங்கம் தலைமை வகிக் கலாம் ஆனால் சிங்கக் கூட்டத்திற்கு ஆடு தலைமை வகிக்கக் கூடாது
_ டானியல்டிஃபோ

கெட்டஉள்நோக்கத்தோடு கூறப்படும்ஓர்உண்மை ஆயிரம் பொய்களைவிட மோசமானதாகும்
_ சார்லஸ்டூபிபிளேக்

முதன் முதலாக நீங்கள் எதையாவது செய்யுங்கள் பின்னால் வருபவர்கள் அதை இன்னும் அழகாகச் செய்வார்கள்
_ பாபலோ பிக்காஸோ

நன்றியை எதிர் பார்க்கா திருக்கப் பழகிக் கொள் வோம் எப்போதாவது அது கிடைக்கும்போது எதிர்பாராத பரிசாக அது இன்பம் தரும்
_ டேல் கார்னிஜி

உற்சாகமாக இருப்பதற்கு ராஜ பாட்டை என்ன? நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு ஏற்கனவே உற்சாகமாக இருப்பது போல் பாவனை செய்து கொண்டு உற்சாகத்துடன பேசி உற்சாகமாகப்பழகுவது தான்
_ வில்லியம் ஜேம்ஸ்

குற்றமே இல்லாத பொருளை நீ காண வேண்டுமென்று விரும்புகிறாயா? அது நடவாத செயல் அப்படி ஒரு பொருள் இதுவரை இருந்தது மில்லைஇனிஇருக்கப் போவதுமில்லை
_அலெக்சாண்டர் போப்



உலகத்திலேயே மிகப் பெரிய மனிதன் யார்? ஒருவேர்க்கடலையைச் சாப்பிட்டு விட்டு அத்துடன் நிறுத்திக் கொள்ளும் மனோபலம் உள்ளவன்
_ பாலக்

முட்டாள் என்பவன் யார் தெரியுமா?தன் வியாதிக் காக டாக்டரிடம் போய் தன் சொத்துக்களுக்கு அவரையே வாரிசாக்கு கிறானே அவன்தான்
_ பெஞ்சமின்பிராங்க்ளின்

உரையாடல் என்பது ஒருவரையொருவர் புரிந்து கொள்ள உதவும் ஆனால் தனிமை என்பதே மேதைகளின் பள்ளிக்கூடமாக இருக்கிறது
_ கிப்பன்

# புன்னகை என்ன விலை!

நம் உள்ளத்து உணர்வுகளை 'பளிச்'சென வெளிக்காட்டுவது நம் முகம். அந்த முகம் எப்போதும் சிரித்துக் கொண்டே இருந்தால் எத்தனை அழகாக இருக்கும்!

ஒரு புன்னகை சிந்த விலையேதும் தேவையில்லை. ஆனால் அந்த ஒரு புன்னகை அவரை பெரிய கூட்டத்திலும் கூட நடுநாயகமாக்கும் தன்மையுடையது.

உடலில் 300 வகையான தசைகள், நாம் சிரிக்கும்போது அசைகின்றன. அதனால் நம் மனமும் தேகமும் சிரிக்கும்போது புத்துணர்ச்சியும் , ஆரோக்கியமும் பெறுவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன.
ஆய்வொன்றின் படி ஒரு நாளைக்கு சராசரி மனிதன் 15 தடவைகளும் குழந்தைகள் கிட்டத்தட்ட 400 தடவைகளும் சிரிக்கின்றோமாம்! அடேயப்பா! இதிலிருந்து மனிதனுடைய வயதிற்கேற்றவாறு சிரிப்பு குறைந்து கொண்டு போவதை அறிய முடிகிறது.
நாம் சிரிக்கும்போது 'என்டோர்பின்ஸ்' என்னும் திரவப்பொருள் நம் மூளையில் உருவாகி ஒருவகையான நம் உடலுக்குப் புத்துணர்ச்சி ஏற்படுகிறது.
'சிடுசிடு'வென்ற முகத்துடன் இருப்பவரை யார்தான் விரும்புவர்? சிரிப்பதற்கு கஞ்சப் படுபவர்கள் பல சந்தோஷங்களை வாழ்வில் இழந்தவர்களாவர். சிரிப்பதற்கு ஆகும் நேரம் சிறிது; ஆனால், அதன் பலனோ மிகப் பெரியது!

வாயால் சொல்லும்வரை காதல் புரிவதில்லை! அது போல் புன்னகை புரியும் வரை அதற்கு மதிப்பில்லை!
புன்னகையை விலைக்கோ, கடனுக்கோ வாங்க முடியாது. திருடவும் முடியாது!

ஒரு சின்னக் குழந்தையின் சிரிப்பு நம் கவலைகளை மறந்து அதனுடன் விளையாடத் தூண்டுவதை நம்மால் மறுக்க முடியுமா!
முதியவர்களின் சிரிப்போ அவர்களது வெற்றிகரமான வாழ்வின் பிரதிபலிப்பு!

மோனாலிசாவின் மயக்கும் சிரிப்பை மறக்க முடியுமா? ஃபெங்ஷுயி சிரிக்கும் புத்தரைப் பார்க்கும்போதே நம் மனதில் மகிழ்ச்சி ஏற்படுகிறதே! வாழ்க்கையை சிரித்துக் குதூகலித்துக் கடக்க வேண்டும் என்பதைச் சொல்வதைப் போல இவர் சிரித்துக் கொண்டே இருக்கிறாராம்! இவர் உருவம் வீட்டில் இருந்தால் வளமும், மகிழ்ச்சியும், செல்வமும் வீட்டில் பெருகும் என்பது ஒரு நம்பிக்கை!

மருத்துவர் மற்றும் நர்ஸுகளின் பரிவான புன்னகை எத்தனை பெரிய நோயாளியையும் சீக்கிரம் குணமடையச் செய்யும்!

காதலர்களுக்கிடையே, தம்பதிகளுக்கிடையே ஏற்படும் மன வேறுபாட்டை நிமிடத்தில் விலக்கி, உடைந்த இதயங்களை இணைப்பது அன்பான காதல் புன்னகையே!

வரவேற்பாளர்களின் புன்னகை இனிய வரவேற்பு!
விற்பனையாளார்களின் புன்னகை அவர்களின் வியாபார உத்தி!
சிரித்த முகத்துடன் இருப்பவர்களை உலகில் எவரும் விரும்புவர்! அதையே நம் புரட்சி தலைவர் திரு.எம்.ஜி.ஆர். 'சிரித்து வாழ வேண்டும். பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே' என்று பாடினார்!

நிறைவான மனதுடன், மகிழ்ச்சியாக வாழும் மனிதனால்தான் சிரித்த முகத்துடன் உலவ முடியும். அவர்களுக்கு வாழ்க்கையே ஒரு திருவிழா!

அவர்களோடு பேசுபவர்களுக்கும், பழகுபவர்களுக்கும் கூட அந்த மகிழ்ச்சி தொற்றிக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.



மனம் நிறைந்த மகிழ்ச்சியால் மலரும் புன்னகை எவரையும் வசப்படுத்தும்! சின்னப் புன்னகை பெரிய காரியங்களைக்கூட நிறைவேற்றும்!
நம் அன்றாட வாழ்க்கையில் பல பிரச்சினைகளை சந்திக்க வேண்டி யுள்ளது.நாம் எந்த விஷயத்தையும் எப்படி அணுகுகிறோமோ, அதன்படிதான் விளைவுகளும் இருக்கும். நம் முகத்தின் ஒரு சின்ன வளைவு, பலபிரச்சினை களை நேராக்கும் தன்மையுடையது.

பொய்யும் புன்னகையும் உடன் பிறந்தவை! பிடிக்காதபோது பொய்யாக புன்னகைக்கலாம்! மகிழ்ச்சியாக இருப்பதாக பொய்யாகப் புன்னகைத்தும் காட்டிக் கொள்ளலாம்!
நம் மனதில் கவலையும், துன்பமும் தோன்றும் போதெல்லாம் 'இதுவும் கடந்து போகும்' என்பதை நினைவில் கொண்டால் முத்தில் சுருக்கங்கள் நீங்கி புன்னகை தவழ்வதை உணரலாம்!

எந்த விஷயத்துக்கும் கோபப்படாமல், சிடுசிடுக்காமல், மலர்ந்த முகத்துடன் காணப்படுவது ஒரு சிறந்த கலை. அதற்கு நல்லெண்ணெங்கள், கடவுள் நம்பிக்கை, திருப்தியான மனநிலை ஆகியவை அவசியம்.

'நாம் ஒவ்வொரு முறை சிரிக்கும் போதும் நம் ஆயுள் கூடுவதாக'க் கூறப்படுவதால், இன்று சிரிப்பதற்குக் கூட சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன!

எந்த சூழ்நிலையிலும் யாரிடமும் மனம் திறந்து மகிழ்ச்சியாக சிரித்துப் பேசுங்கள். அனைவரும் உங்களை விரும்புவர். பிறரையும் சிரிக்க வைத்து நாமும் சிரித்து வாழ்வோம்!



## விடுகதை

| | |
|---|---|
| முதுகிலே சுமை தூக்கி முணு முணுக்காமல் அசைந்து வரும் அது என்ன? | நத்தை |
| ஊர் சுற்ற கூட வருவான் ஆனால் உள்ளே வரமாட்டன் அவன் யார்? | செருப்பு |
| உரச உரச குழைவான், பூச பூச மனப்பான் அவன் யார்? | சந்தனம் |
| தொப்பி போட்ட காவல் காரன், உரசி விட்டால் சாம்பல் ஆவான் அவன் யார்? | தீக்குச்சி |
| கரைந்து போகுது வெள்ளி தட்டு | தேய் பிறை |
| சிறு தூசி விழுந்ததும் குளமே கலங்கியது அது என்ன? | கண் |



# ஜோக்ஸ்

காதலன்: ஆபரேஷன்ல நான் இறந்துட்டா இந்த டாக்டரையே நீ கல்யாணம் பண்ணிக்கணும். எனக்காக செய்வியா?

காதலி: ஏன் இப்படி பேசறீங்க?
காதலன்: வேற எப்படி அந்த டாக்டர பழிவாங்கறது?

======================
நபர்: பஸ் ஸ்டாண்ட் போகணும். எவ்வளவு ஆகும்?

ஆட்டோ டிரைவர்: 20 ரூபா ஆகும்

நபர்: 5 ரூபாய்க்கு வரீங்களா?



ஆட்டோ டிரைவர்: 5 ரூபாய்க்கு யார் வருவாங்க?

நபர்: பின்னாடி உட்காருங்க. நான் உங்கள கூட்டிகிட்டு போறேன்.
======================
மனைவி: டாக்டர் ஒரு மாதம் நல்ல மலைப் பகுதியான இடத்துக்குப் போய் ஓய்வெடுக்க சொல்றார். நாம எங்க போகலாம்?

கணவன்: வேற டாக்டர்கிட்ட போகலாம்
======================

போலீஸ்: சாகறதுக்கு முன்னாடி கடைசி ஆசை ஏதாவது இருந்தா சொல்லு

கைதி: என்னை தலைகீழா தூக்குல போடணும்
======================

வங்கி மேலாளர்: நீங்க காருக்காக லோன் வாங்கியிருந்தீங்க. மாசம் தவணை கட்டாததால நாங்க கார் எடுத்துக்கிட்டு போகிறோம்.

நபர்: இப்படி நீங்க செய்வீங்கனு தெரிஞ்சிருந்தா என்னோட கல்யாணத்துக்கும் லோன் வாங்கியிருப்பேனே!
!======================

நீ திருட்டு ரயில் ஏறியா சென்னைக்கு வந்த ?

அது திருட்டு ரயிலா என்னன்ற விபரமெல்லாம் நீங்க ரயில்வே டிபார்ட்மெண்டைத்தான் சார் கேட்கணும்.

======================
கணவன் : ஏண்டி அப்படி என்ன தலைபோற அவசரம்னு ஆட்டோ பிடிச்சு ஆபீசுக்கே வந்திருக்கிறே?

மனைவி : நம்ம வீட்டு வேலைக்காரியைக் காணோம். சந்தேகமாப் போச்சு. நீங்களாவது ஆபீசில இருக்கீங்களான்னு பார்க்கத்தான் வந்தேன்!



# ஜோதிடம் அறிவோம்



## ஏகாதசி




அமாவாசையை அடுத்துவரும் ஏகாதசியை சுக்கில ஏகாதசி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் ஏகாதசியை கிருஷ்ண பட்ச ஏகாதசி என்றும் அழைக்கின்றனர்.

ஏகாதசி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

போட்டி போடும் குணம் கொண்டவர்கள்.
கல்வி வேள்விகளில் ஆர்வம் உடையவர்கள்.
குருமார்களின் மீது பற்று கொண்டவர்கள்.
மற்றவர்கள் மதிக்கும் பொறுப்புகளில் இருக்கக்கூடியவர்கள்.
எதிர்பாலின மக்களின் மீது ஈர்ப்பு உடையவர்கள்.
வித்தியாசமான செயல்களை செய்வதில் ஆர்வம் கொண்டவர்கள்.
நீதியுடன் வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.
சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன்னை மாற்றி கொள்ளக்கூடியவர்கள்.

## துவாதசி






அமாவாசை நாளையும், பூரணை (பௌர்ணமி) பனிரெண்டாவது திதி துவாதசி ஆகும். நாளையும் அடுத்து வரும்

அமாவாசையை அடுத்துவரும் துவாதசியை சுக்கில பட்ச துவாதசி என்றும், பூரணையை (பௌர்ணமி) அடுத்துவரும் துவாதசியை கிருஷ்ண பட்ச துவாதசி என்றும் அழைக்கின்றனர்.

துவாதசி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

சொத்துச்சேர்க்கை உடையவர்கள்.
நல்ல குணம் மற்றும் பண்புகளை கொண்டவர்கள்.
எதிர்ப்புகளை உடையவர்கள்.
வசீகரிக்கும் தோற்றம் கொண்டவர்கள்.
புதிரான அணுகுமுறைகளை உடையவர்கள்.
எதிர்பாலின மக்களின் மீது கீர்த்தி கொண்டவர்கள்.

## “சிவ மந்திரம்” கூறினால் மறுபிறவியை இல்லையா?



மனிதராக பிறந்தவர்கள் அனைவரும் ஏழு பிறவிகளை எடுப்பார்கள் என்றும், கர்மம் தீரும் வரை பிறப்பு என்பது நிகழும் என்றும் சாஸ்திரங்கள் கூறுகிறது.

ஆனால், ஒரு பிறவிலேயே நாம் படாதபாடு படுகிறோம். இக்காலத்தில் யாரிடமாவது உனக்கு இன்னொரு பிறவி வேண்டுமா என்று கேட்டால் போதும்டா சாமி..! ஆளவிடுங்க என்று தெரித்து ஓடும் சூழல்தான் இருக்கிறது.

அதனால், மீண்டும் எனக்கு மனிதனாக பிறக்கவே வேண்டாம்.. பிறவா வரம் வேண்டும் என்பவர்கள் தான் நம்மில் ஏராளம்.

இப்படி பிறவா நிலையை வேண்டுபவர்கள், எந்த பரிகாரத்தை செய்ய வேண்டும்? என்பதைத் தான் இந்த ஆன்மீகம் சார்ந்த பதிவின் மூலம் நாம் அறிந்து கொள்ள போகிறோம்.

முற்பிறவியில் செய்த பாவங்களுக்கான தண்டனைகளை அடுத்தடுத்த பிறவிகளில் தொடர்ந்து அனுபவித்து கொண்டே இருக்க வேண்டும். அந்த பிறவியிலும் பாவம் செய்தால், மீண்டும் பிறவி எடுக்க வேண்டும், இது தொடர்கதை ஆகும்..

எப்பிறவியில் பாவம் செய்யாமல், நேர்வழியில் பக்தி மார்க்கத்துடன் இணைந்து இருக்கிறானோ, அப்பிறவியில் அவனுடைய பிறவி முடிவடைகிறது.

இறைவனின் விழிகளில் இருந்து நம்மால் தப்பிக்க முடியாது. நான் என்ன தவறு செய்தேன்? எனக்கு ஏன் இந்த பிரச்சனை என்று கேட்க முடியுமா? அப்படி நீங்கள் கேட்பவராக இருந்தால், உங்கள் மனசாட்சிப்படி நீங்கள் நடப்பவராக இருந்தால் அடுத்த பிறவி உங்களுக்கு கிடையாது.

மறுபிறவி வேண்டாம் என்று நினைப்பவர்கள், 108 வில்வ இலைகளில், “ஓம் நமச்சிவாய” என்னும் ஆத்ம சக்தி வாய்ந்த சிவ மந்திரத்தை எழுதி, லிங்கத்திற்கு 108 முறை அர்ச்சனை செய்து வர வேண்டும்.

கண் குளிர சிவபெருமானை தரிசித்து, மனதார “இப்பிறவி போதும், இனி பிறவா நிலை வேண்டும்” என்று பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

48 பிரதோஷங்கள் காளை மாட்டிற்கு அருகம்புல் தானம் செய்பவர்களுக்கு, பிறவா நிலை வரும். இப்பரிகாரங்களை செய்து வந்தால், அப்பிறவியிலேயே அவர்களுக்கு மோட்சம் பக்தி மூலமாக உண்டாகி, மறுபிறவி என்பதே கிடையாது என்பது ஐதீகம்.

## பஞ்சாங்கம் பார்ப்பது எப்படி?

சில அடிப்படைத் தகவல்கள்:

ஆண்டுகளைக் நமது முன்னோர் சுழற்சி முறையில் (in rotation) அறுபது ஆண்டுகள் திரும்பத் திரும்ப வருவதாகக் கணக்கிட்டனர்.

வான் மண்டல தொகுதி அல்லது ராசி மண்டல தொகுதி ஒரு வட்டப் பாதையாக 360 பாகைகளைக் (Degrees) கொண்டுள்ளது.

நாம் முக்கியமானவையாக நம்பும 27 நட்சத்திரங்களும் இந்த பாதையில் உள்ளன.

இதன் வழியாகவே ஒன்பது க்ரஹங்களும் சஞ்சாரம் செய்கின்றன.

360 பாகைகளில் (degrees)

12 ராசிகள் அடங்கியுள்ளன.

எனவே ஒவ்வொரு ராசியும் 30 பாகைகளை (degrees) கொண்டுள்ளது.

சூரியன் வான் பாதையில் தினசரி 1 பாகை(degree) நகர்கிறது.

ஒருமுறை சுற்றிவர 365 நாள் 6 மணி நேரம் ஆகிறது.

குரு சுமார் ஒரு வருடத்தில் ஒரு ராசியைத் தாண்டும்.

சனி மாதத்துக்கு ஒருபாகை (degree) நகரும்.

எனவே குரு ஒரு தடவை வான வட்டத்தைச் சுற்றி வர 12வருடங்கள் ஆகின்றன.

சனி ஒரு தடவை வான வட்டத்தைச் சுற்றி வர 30வருடங்கள் ஆகின்றன.

சனியும் குருவும் சேர்ந்து அசுவதி நக்ஷத்திரத்தில் அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறை காணப்படுகிறது.

அதுவே பிரபவ வருடம்.

இதுவே முதல் வருடம்.

இதிலிருந்து 60 வருடங்கள் கணக்கிடப்படுகின்றன.



ஒவ்வொரு ஆண்டின் பெயரும் காரணப் பெயராக அமைந்துள்ளது.

ஆண்டுகள் 60

1.பிரபவ 2.விபவ 3.சுக்கில
4.ப்ரமோதூத, 5. ப்ரஜோத்பத்தி
6.ஆங்கிரஸ 7. ஸ்ரீமுக 8.பவ
9.யுவ,10.தாது, 11.ஈசுவர
12.வெகுதான்ய, 13.ப்ரமாதி
14.விக்கிரம,15.விஷு
16.சித்ரபானு,17.சுபானு
18.தாரண,19.பார்த்திப ,20.விய
21.ஸர்வஜித், 22.ஸர்வதாரி
23.விரோதி,24.விக்ருதி, 25.கர
26.நந்தன,27.விஜய, 28.ஜய
29.மன்மத, 30.துர்முகி,
31.ஹேவிளம்பி, 32.விளம்பி
33.விகாரி, 34.சார்வரி, 35.ப்லவ
36.சுபகிருது, 37.சோபக்கிருது
38.குரோதி, 39.விசுவாவசு
40.பராபவ, 41.ப்லவங்க,
42.கீலக, 43.சௌமிய
44.சாதாரண,45.விரோதிகிருது
46.பரிதாபி,47.ப்ரமாதீ,
48.ஆனந்த, 49.ராக்ஷஸ,50.நள
51.பிங்கள, 52.களயுக்தி,
53.சித்தார்த்தி,
54.ரௌத்ரி
55.துன்மதி,
56.துந்துபி
57.ருத்ரோத்காரி,58.ரக்தாக்ஷி
59.குரோதன, 60.அக்ஷய

தமிழ்மாதங்கள்

சூரியன் ஒரு ராசியைக் கடக்க எடுத்துக் கொள்ளும் 30 நாட்கள் ஒரு மாதம் என கணக்கிடப்பட்டுள்ளது.

சூரியன் எந்த ராசியில் என்று பிரவேசிக்கிறதோ அதுவே மாதத்தின் தொடக்க நாள். அந்த ராசியின் பெயரே அந்த மாதத்தின் பெயர்.

வீட்டில் பூஜைகள் செய்யும்போது ஸங்கல்பத்தில் நாம் சொல்வது மாதத்தின் இந்தப் பெயர்களையே..

நடைமுறையில் தமிழ் மாதங்களின் பெயர்கள்–

அந்த மாதத்தில் எந்த நட்சத்திரத்தன்று பௌர்ணமி திதி வருகிறதோ அந்த நட்சத்திரத்தின் பெயரையே கொண்டதாக அமைந்துள்ளது.

## திரயோதசி



அமாவாசை நாளையும், பூரணை (பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் பதிமூன்றாவது திதி திரயோதசி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் திரயோதசியை சுக்கில பட்ச திரயோதசி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் திரயோதசியை கிருஷ்ண பட்ச திரயோதசி என்றும் அழைக்கின்றனர்.

திரயோதசி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

வெள்ளை மனம் கொண்டவர்கள்.
நண்பர்கள் அதிகம் உடையவர்கள்.
உறவினர்களின் மீது அன்பு கொண்டவர்கள்.
கற்பனை வளம் கொண்டவர்கள்.
தற்பெருமை உடையவர்கள்.
சூழ்நிலைக்கு ஏற்ப தன்னை வடிவமைத்து கொள்ளக்கூடியவர்கள்.

## சதுர்த்தசி



அமாவாசை நாளையும், பூரணை (பௌர்ணமி) நாளையும் அடுத்து வரும் பதினான்காவது திதி சதுர்த்தசி ஆகும்.

அமாவாசையை அடுத்துவரும் சதுர்த்தசியை சுக்கில பட்ச சதுர்த்தசி என்றும், பூரணையை(பௌர்ணமி) அடுத்துவரும் சதுர்த்தசியை கிருஷ்ண பட்ச சதுர்த்தசி என்றும் அழைக்கின்றனர்.

சதுர்த்தசி திதியில் பிறந்தவர்களின் குணநலன்கள் :

எழில்மிகு தோற்றம் கொண்டவர்கள்.
முன்கோபம் கொள்ளும் குணம் உடையவர்கள்.
உடல் மற்றும் மனோபலம் கொண்டவர்கள்.
சண்டையிடுவதில் வல்லவர்கள்.
நினைத்ததை செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.
குரோத மனமுடையவர்கள்.
தனிக்கொள்கை பிடிப்பு கொண்டவர்கள்.

மாதங்களின் பெயர்கள்
நடைமுறை - ஸங்கல்பம்
===========
===========

| | | |
|---|---|---|
| சித்திரை | - | மேஷ மாசம் |
| வைகாசி | - | ரிஷப மாசம் |
| ஆனி. | - | மிதுன மாசம் |
| ஆடி. | - | கடக மாசம் |
| ஆவணி. | - | சிம்ம மாசம் |
| புரட்டாசி | - | கன்னி மாசம் |
| ஐப்பசி. | - | துலா மாசம் |
| கார்த்திகை | - | விருச்சிக மாசம் |
| மார்கழி. | - | தனுர் மாசம் |
| தை. | - | மகர மாசம் |
| மாசி. | - | கும்ப மாசம் |
| பங்குனி. | - | மீன மாசம் |

எந்த மாதத்தில் பௌர்ணமி, அமாவாஸ்யை இல்லையோ அந்த மாதத்துக்கு விஷமாதம் என்று பெயர்.

எந்த மாதத்தில் இரண்டு பௌர்ணமி, அல்லது இரண்டு அமாவாஸ்யை வருகிறதோ அதற்கு மலமாதம் என்று பெயர்.

விஷ மாதத்திலும், மல மாதத்திலும் சுபகார்யங்கள் செய்யக்கூடாது.

ஆனால் சித்திரை, வைகாசி, மாதங்களில் இவைகள் ஏற்பட்டால் அந்த இரண்டு மாதங்களுக்கும் இந்த தோஷம் கிடையாது.

### அயனங்கள் (Path)
---------------------------

ஒரு வருடம் இரண்டு அயனங்களாகப் (Half yearly paths) பிரிக்கப்பட்டுள்ளது.

சூரியன் மகரராசியில் பிரவேசிக்கும்போது உத்தராயனம் ஆரம்பம்.

சூரியன் கடக ராசியில் பிரவேசிக்கும் போது தட்சிணாயனம் ஆரம்பம்.

தைமாதம் முதல் ஆனி மாதம் வரை 6 மாதங்கள் உத்தராயன காலம்.

இக்காலகட்டத்தில் எல்லா நல்ல காரியங்களும் செய்யலாம்.

கும்பாபிஷேகம், கிரகப்பிரவேசம் போன்றவை இக்காலகட்டத்தில் செய்வது

### உத்தமம்.

ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை 6 மாதங்கள் தட்சிணாயன காலம்.

இக்காலகட்டத்தில் நல்ல காரியங்கள் தொடங்குவதை தவிர்க்க முடியுமானால் தவிர்ப்பது நல்லது.

ருதுக்கள் (Season s) - 6

ஒரு வருடம் 6 ருதுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

சித்திரை, வைகாசி - வஸந்த ருது
ஆனி, ஆடி, - க்ரீஷ்ம ருது
ஆவணி, புரட்டாசி - வர்ஷ ருது
ஐப்பசி, கார்த்திகை - சரத் ருது
மார்கழி, தை - ஹேமந்த ருது
மாசி, பங்குனி - சிசிர ருது

கிழமைகள் (days) - 7

ஒரு நாள் என்பது 60 நாழிகைகள் கொண்டது.

சூரிய உதயத்திலிருந்து மறுநாள் சூர்ய உதயம் வரை ஒரு நாள்.

சாயா கிரகங்கள் இரண்டு (ராகு, கேது) நீங்கலாக மீதமுள்ள ஏழு கிரகங்களின் ஏழு நாட்கள் கொண்ட கால அளவு ஒரு வாரம்.

ஒரு நாளைக்குரிய பெயராக வாஸரம் என்ற சொல் ஸங்கல்பத்தில் சொல்லப்படும்

### நடைமுறை - ஸங்கல்பம்
************* *************

| | | |
|---|---|---|
| ஞாயிறு. | - | பானு வாஸரம் |
| திங்கள். | - | இந்து வாஸரம் |
| செவ்வாய் | - | பௌம வாஸரம் |
| புதன். | - | ஸௌம்ய வாஸரம் |
| வியாழன் | - | குரு வாஸரம் |
| வெள்ளி | - | ப்ருகு வாஸரம் |
| சனி | - | ஸ்திர வாஸரம் |



### திதிகள் (Lunar day) - 15
****************************

சூரியன் இருக்கும் இடத்தில் இருநது 12 பாகைகள்(Degrees) சந்திரன் நடப்பினில் ஒரு திதியாகும்.

1. ப்ரதமை
2. த்விதியை
3. த்ருதியை
4. சதுர்த்தி
5. பஞ்சமி,
6. ஷஷ்டி
7. ஸப்தமி
8. அஷ்டமி
9. நவமி
10. தசமி
11. ஏகாதசி
12. துவாதசி
13. த்ரயோதசி
14. சதுர்த்தி
15. பூர்ணிமா (அல்லது) அமாவாஸ்யை.

ஒரு மாதம் இரண்டு பட்சங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

அமாவாஸ்யை அடுத்த பிரதமை முதல் பௌர்ணமி வரை சுக்லபட்சம்.

பௌர்ணமியை அடுத்து வரும் பிரமை முதல் அமாவாஸ்யை வரை கிருஷ்ணபட்சம்.

தமிழில் இதை வளர்பிறை என்றும் தேய்பிறை என்றும் கூறுஇவர்கள்.

திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்பவை பஞ்சாங்கத்தின் ஐந்து அங்கங்களாகும்.

இவற்றில் திதி, வாரம், (வாஸரம்) ஆகிய பற்றி மேலே கூறப்பட்டுள்து.

இனி மற்ற மூன்றை பற்றி அறிவோம்.

### நட்சத்திரங்கள் - 27

வான் வட்டப்பாதையில் உள்ள நட்சத்திரங்கள் இருபத்தேழும் பன்னிரண்டு ராசிகளுக்குப் பிரித்து வழங்கப்பட்டுள்ளன.

### நக்ஷத்திரங்கள் - 27 -
************************

| நடைமுறை | - | ஸங்கல்பம் |
|---|---|---|
| அஸ்வதி | - | அஸ்வினி |
| பரணி | - | அபபரணீ |
| கார்த்திகை | - | க்ருத்திகா |
| ரோகிணி. | - | ரோகிணீ |
| மிருகசீர்ஷம் | - | ம்ருகசிரோ |
| திருவாதிரை | - | ஆர்த்ரா |
| புனர்பூசம். | - | புனர்வஸு |
| பூசம். | - | புஷ்யம் |
| ஆயில்யம் | - | ஆஸ்லேஷா |
| மகம் | - | மகா |
| பூரம் | - | பூர்வபல்குனி |
| உத்திரம் | - | உத்ரபல்குனி |
| ஹஸ்தம் | - | ஹஸ்த |
| சித்திரை | - | சித்ரா |
| சுவாதி | - | ஸ்வாதீ |
| விசாகம் | - | விசாகா |
| அனுஷம் | - | அனுராதா |
| கேட்டை | - | ஜ்யேஷ்டா |
| மூலம் | - | மூலா |
| பூராடம் | - | பூர்வ ஆஷாடா |
| உத்திராடம் | - | உத்ர ஆஷாடா |
| திருவோணம் | - | ச்ரவண |
| அவிட்டம் | - | ஸ்ரவிஷ்டா |
| சதயம் | - | சதபிஷக் |
| பூரட்டாதி | - | பூர்வப்ரோஷ்டபதா |
| உத்திரட்டாதி | - | உத்ரப்ரோஷ்டபதா |
| ரேவதி | - | ரேவதி |

### ராசிகள் - 12

1. மேஷம் 2. ரிஷபம் 3. மிதுனம் 4. கடகம் 5. சிம்மம் 6. கன்னி
7. துலாம் 8. விருச்சிகம் 9. தனுசு
10. மகரம் 11. கும்பம் 12. மீனம்

மேலே சொன்ன நக்ஷத்திரங்கள் இருபத்தி ஏழும் ஒவ்வொரு ராசிக்கும் 21/4 நக்ஷத்திரம் விதம் பங்கிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நக்ஷத்திரத்துக்கும் நான்கு பாதங்கள் உண்டு.

ஆகவே, ஒவ்வொரு ராசியிலும் ஒன்பது பாதங்கள் அல்லது 2 1/4 நக்ஷத்திரங்கள் உண்டு.

### யோகங்கள் - 27

1. விஷ்கம்பம் 2. ப்ரீதி
3. ஆயுமான், 4.சௌபாக்யம்
5. சோபனம் 6. அதிகண்டம்
7.சுகர்மம், 8.த்ருதி, 9.சூலம்
10.கண்டம், 11.வ்ருத்தி,
12. துருவம்,13. வியாகாதம்
14.ஹர்ஷணம், 15.வஜ்ரம்
16.ஸித்தி ,17.வ்யதீபாதம்,
18.வரியான், 19.பரீகம்,
20.சிவம், 21.ஸித்தம்
22. ஸாத்தியம், 23.சுபம்
24.சுப்ரம், 25. ப்ராம்யம்
26.மாஹேந்த்ரம் 27.வைத்ருதி

கரணங்கள் - 11

1. பவம் - சிங்கம்
2. பாலவம் - புலி
3. கௌலவம் - பன்றி
4. தைதிலம் - கழுகு
5. கரம் - யானை
6. வணிஜை - எருது
7. பத்ரம் - கோழி
8. சகுனி - காக்கை
9. சதுஷ்பாதம் - நாய்
0. நாகவம் - பாம்பு
11. கிமுஸ்துக்னம் - புழு

### இராகு காலம்

ஒவ்வொரு கிழமையிலும் இராகு காலம் எப்போது என்பதனை நினைவில் வைத்துக் கொள்ள ஒரு வரிப்பாட்டு ஒன்று சொல்லுவார்கள்.

"தி"ருவிழா "ச"ந்தையில் "வெ"ளியில் "பு"குந்து "வி"ளையாட "செ"ல்வது "ஞா"யமா?"

| கிழமை | = | இராகு காலம் |
|---|---|---|
| ஞாயிறு. | = | 04.30 - 06.00 |
| திங்கள் | = | 07.30 - 09.00 |
| செவ்வாய் | = | 03.00 - 04.30 |
| புதன் | = | 12.00 - 01.30 |
| வியாழன் | = | 01.30 - 03.00 |
| வெள்ளி | = | 10.30 - 12.00 |
| சனி. | = | 09.00 - 10.30 |

### எமகண்டம்

இதேபோல எமகண்ட காலம் எப்போது என்பதனை அறிய ஒரு வரிப்பாட்டு உண்டு.

"வி"ழாவுக்கு "பு"திதாக "செ"ன்று "தி"ரும்பும் "ஞா"பகம் "ச"ற்றும் "வெ"றுக்காதே

| கிழமை - | எமகண்டம் : பகல் |
|---|---|
| ஞாயிறு : | 12.00 - 01.30 |
| திங்கள் : | 10.30 - 12.00 |
| செவ்வாய் : | 09.00 - 10.30 |
| புதன் : | 07.30 - 09.00 |
| வியாழன் : | 06.00 - 07.30 |
| வெள்ளி : | 03.00 - 04.30 |
| சனி : | 01.30 - 03.00 |

| கிழமை - | எமகண்டம் :இரவு |
|---|---|
| ஞாயிறு : | 06.00 - 07.30 |
| திங்கள் : | 03.00 - 04.30 |
| செவ்வாய் : | 01.30 - 03.00 |
| புதன் : | 12.00 - 01.30 |
| வியாழன் : | 10.30 - 12.00 |
| வெள்ளி : | 09.00 - 10.30 |
| சனி : | 07.30 - 09.00 |



திருப்புல்லாணி நேற்று மாலை ஹனுமந்த வாகனம்

## அருள்மிகு கங்காளநாதர் மரசிம்மாசனத்தில் திருவீதியுலா



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்சித்திரை திருவிழா-2026-25.04.2026 காலை-அருள்மிகு கங்காளநாதர் மரசிம்மாசனத்தில் திருவீதியுலா

தனிவாய் அமலனிடம் பிரியா தென்றுந் தங்கிய நீ பனிவாய் இமயப் பருப்பதராசன் தன் பாவையென நனிவாய் விறற் பஞ்சவன் பாவை யென்ன நணுகியதென் கனிவாய் மலர்ந்தருள் செய்வாய் தென்கூடற் கயற்கண்ணியே- கயற்கண்ணி மாலை சொக்கே நின் தாளே துணை

## 3ம் திருநாள் காலை ஹர தனுர் பங்கம்



மாம்பலம் ஸ்ரீ கோதண்டராமர் ஸன்னதி பராபவ வருட ப்ரம்மோத்ஸவம் 3ம் திருநாள் காலை ஹர தனுர் பங்கம் (சிவ தனுசு முறிப்பு) பல்லக்கு. 25.04.2026






ஸ்ரீ ஸ்தலசாயனா பெருமாள் பிரமோட்சவம் நாள் 2 காலை. யாளி வாகனம்

## ஸீதாவலோகனம்



மாம்பலம் ஸ்ரீ கோதண்டராமர் ஸன்னதி பராபவ வருட ப்ரம்மோத்ஸவம் 2ம் திருநாள் மாலை சந்திர பிரபை (ஸீதாவலோகனம்). 24.04.2026

## மாணவர்கள் நூலகத்தை பயன்படுத்த வேண்டும் உலக புத்தக தினவிழாவில் பேச்சு



**வந்தவாசி, ஏப் 26:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி கிளை நூலகம் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் சார்பில் உலக புத்தக தினவிழா சிறப்பு உரையரங்கம் நூலக வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்விற்கு மூன்றாம் நிலை நூலகர் சங்கர் தலைமை தாங்கினார்.

வந்தை வட்ட கோட்டை தமிழ்ச் சங்க துணை தலைவர் கவிஞர் முகமது அப்துல்லா, சமூக ஆர்வலர் பொன்னம்பலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக, ஓய்வுபெற்ற வட்டார கல்வி அலுவலர் புலவர் ந.பானு பங்கேற்று, புத்தக வாசிப்பின் அவசியம் குறித்தும், நூலகப் பயன்பாட்டின் அவசியம் குறித்தும் விளக்கினார்.

மேலும் புத்தகங்களை வாசிப்போம்; மனிதர்களை நேசிப்போம்என்றகொள்கையை அனைவரும் கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தி பேசினார். நிகழ்வில் ஓய்வுபெற்ற டிஇஓ உதவியாளர் ஜெயக்கண்ணு, சமூக ஆர்வலர் சித்திக் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

புத்தக வாசிப்பு குறித்த பேச்சு போட்டியில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இறுதியில் நூலக துப்புரவு பணியாளர் புண்ணியகோட்டி நன்றி கூறினார்.

**பா. சீனிவாசன்,வந்தவாசி.**

## இன்றைய காலத்தின் அவசியம் சத்குரு..!- கவிஞர் இசைக்கவி ரமணன் புகழாரம்



**புதுச்சேரி, ஏப்.26:** இன்றைய காலத்தின் அவசியம் சத்குரு என புதுச்சேரியில் நடைபெற்ற நூல் அறிமுக விழாவில் பேச்சாளர் இசைக்கவி ரமணன் புகழாரம் சூட்டினார்.

சத்குருவின் பார்வையில் கிருஷ்ணரின் பன்முகப் பரிமாணங்கள் விளக்கும் வகையில் உருவாகியிருக்கும் 'கிருஷ்ண லீலா' எனும் புதிய நூல் அறிமுக விழா நேற்று (ஏப்ரல் 25) புதுச்சேரி எஸ்.வி. படேல் சாலையில் உள்ள ஹோட்டல் ஸற்குருவில் நடைபெற்றது.

இவ்விழாவில் புதுச்சேரி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தலைவர் நடராஜன் புத்தகத்தை வெளியிட ஹோட்டல் ஸற்குருவின் நிர்வாக இயக்குனர் அமர்நாத் பெற்றுக் கொண்டார்.

பிரபல கவிஞர் இசைக்கவி ரமணன் மற்றும் பேச்சாளர் இந்திரா விஜயலட்சுமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று, நூல் குறித்த தங்களது கருத்துக்களைப் பகிர்ந்து சிறப்புரை ஆற்றினர்.

## மக்கள் எதிர்பார்த்த விடுதலை மே 4ம் தேதி கிடைக்கும்- த.வெ.க நிர்மல்குமார்



**சென்னை, ஏப்.26:** தமிழகத்தில் கடந்த 23ம் தேதி சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்றது. வாக்குப்பதிவு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெறுகிறது.

தமிழக வரலாற்றிலேயே இல்லாத வகையில் சுமார் 85 சதவீத வாக்குகள் பதிவாகி புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் திமுக கூட்டணி, அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணி, தவெக, நாம் தமிழர் கட்சி என 4 முனைப்போட்டி நடைபெற்றது.

இந்நிலையில், நடைபெற்ற தேர்தல் குறித்து தவெக இணைப் பொதுச் செயலாளர் நிர்மல்குமார் பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

கண்டிப்பாக ஒரு பெரிய மாற்றம் வரும்.

40 வருடங்களாக ஏமாற்றிய ஒரு கும்பலிடம் இருந்து விடுதலை கிடைக்க ஒவ்வொரு இடத்திலும் மக்கள் வாக்களித்துள்ளனர் அவர்கள் எதிர்பார்த்த விடுதலை மே 4ம் தேதி கிடைக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## விசிகவில் எஸ்.எஸ்.பாலாஜி, ஆளூர் ஷாநவாஸுக்கு முக்கியப் பொறுப்பு



**சென்னை, ஏப்.26:** தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்படாத நிலையில், எஸ்.எஸ்.பாலாஜி, ஆளூர் ஷாநவாஸுக்கு விசிகவில் முக்கிய பொறுப்பு வழங்கி திருமாவளவன் அறிவித்துள்ளார்.

இருவரும் விசிகவின் துணை பொதுச்செயலாளர்களாக இருந்த நிலையில், தற்போது ஆளூர் ஷாநவாஸை மாநில முதன்மைச் செயலாளராகவும், எஸ்.எஸ். பாலாஜியை பொருளாளராகவும் நியமனம் செய்து கட்சியின் தலைவர் திருமாவளவன் அறிவித்துள்ளார்.

நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவை தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணியில், விசிகவுக்கு 8 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில், விசிகவின் சிட்டிங் எம்எல்ஏ-க்களான ஆளூர் ஷாநவாஸ், எஸ்.எஸ்.பாலாஜி, பனையூர் பாபு உள்ளிட்டோருக்கு மீண்டும் சீட் கொடுக்கவில்லை.

சிட்டிங் எம்எல்ஏக்களுக்கு வாய்ப்பு வழங்கப்படாதது கட்சிக்குளேயும், வெளியேவும் பல விதமாக கருத்துகள் வெளிப்பட்டன. குறிப்பாக, ஆளூர் ஷாநவாஸ் திமுகவுடன் நேரடியாக பேசி சென்னையில் ஒரு தொகுதியில் போட்டியிட வாய்ப்பு அளிக்குமாறு கேட்டதாக விசிகவினரால் குற்றம்சாட்டப்பட்டது. இதனை, திருமாவளவனும் ஒரு நேர்காணலில் கூறி இருந்தார்.

அதுமட்டுமின்றி, ஆளூர் ஷாநவாஸ், எஸ்.எஸ்.பாலாஜி, பனையூர் பாபு உள்ளிட்டோர் வேட்பாளர்கள் அறிவிப்புக்கு பின் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அறிமுக கூட்டத்துக்கு அவர்கள் வரவில்லை என்பதால் அதுவும் பேசு பொருளானது.

ஆனால், அடுத்த சில நாட்களிலேயே எஸ்.எஸ். பாலாஜியும், ஆளூர் ஷாநவாஸும் விளக்கம் அளித்தனர்.

அதன் பின்னர். இருவரும் மும்முரமாக தேர்தல் பணிகளை மேற்கொள்ள தொடங்கினர். ஆளூர் ஷாநவாஸ் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டார். எஸ்.எஸ்.பாலாஜி தேர்தல் ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொண்டார். இந்நிலையில், விசிகவில் இவர்கள் இருவருக்கும் புதிய பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

## சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி அம்மன்



**கிருஷ்ணகிரி, ஏப்.26:** கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தில் நம் வாசவி அம்மன் பிறந்தநாளை முன்னிட்டு 1-ஆம் நாள், 2-ஆம் நாள் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், தங்க ஆபரணங்களால் அலங்கரித்து,வேத மந்திரங்கள் ஒலிக்க, ஆர்ய வைஸ்ய பெண்கள் அனைவரும் பக்தி பாடல்களை பாடி, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. தினமும் ஒவ்வொரு அலங்காரமும் செய்தனர். நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## காலபைரவருக்கு அஷ்டமியை முன்னிட்டு சிறப்பு அலங்காரம்!



**வேலூர், ஏப். 26:** வேலூர் மாவட்டம், காட்பாடி சித்தூர்- கடலூர் தேசிய நெடுஞ்சாலையில் ஸ்ரீசொர்ணமுகீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலய வளாகத்தில் ஸ்ரீகால பைரவர் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார். அஷ்டமியை முன்னிட்டு ஸ்ரீ கால பைரவருக்கு சிறப்பு அபிஷேகம் செய்து மலர் அலங்காரம் செய்யப்பட்டு பக்தர்கள் தரிசனம் செய்தனர். இந்த சிறப்பு பூஜையில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீகாலபைரவர் சிவபெருமானின் ஒரு அங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.


## வந்தவாசி கோட்டை ஸ்ரீபக்த ஆஞ்சநேயர் கோவில் மண்டல பூஜை நிறைவு விழா வைபவம்..!



**வந்தவாசி, ஏப் 26:** திருவண்ணாமலை மாவட்டம்வந்தவாசி கோட்டை ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் கோயில் கும்பாபிஷேகம் நிறைவுற்று 48 ஆவது நாள் மண்டல பூஜை நிறைவு விழா வைபவம் வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த வைபவத்தில் மூல மூர்த்திகள் மற்றும் உற்சவ மூர்த்திகளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. பிறகு யாகசாலை பூஜைகள் நடைபெற்றன. புஷ்பார்ச்சனை நடைபெற்று, மகா தீபாராதனை நடைபெற்றது. மேலும் மாணவ மாணவிகள் பங்கேற்ற கர்நாடக இசை கச்சேரி மற்றும் நாட்டியாஞ்சலி வைபவம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## காந்திநகர் தலைமையாசிரியர் பணி ஓய்வு விழா



போளூர் வட்டம் காந்தி நகர் தொடக்க பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி விஜயலட்சுமி பணி ஓய்வு பாராட்டு விழா தனியார் மண்டபத்தில் இன்று மாலை நடைபெற்றது. தலைமை போளூர் வட்டார கல்வி அலுவலர் திரு சிவகுமார். வரவேற்புரை அனிதா ஆசிரியர். இவ்விழாவில் டேவிட் ராஜன், திருவண்ணாமலை வட்டார கல்வி அலுவலர் சுந்தர், பி ஆர் சி மேற்பார்வையாளர் பாஸ்கரன், குப்பாஸ் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் உடன் பணிபுரிந்த ஆசிரியர்கள் , ஒய்வூதியர் சங்க நிர்வாகிகள் அபிபுல்லாகான், இராமலிங்கம், பன்னீர்செல்வம் விழாவில் கலந்து கொண்டார்கள். இறுதியாக ஏற்புரை விஜயலஷ்மி தலைமை ஆசிரியர்.

# சுற்றுலா: கோடையை குளு குளுவென்று இன்பமாய் அனுபவிக்க...

1. குன்னூர்

உதகை செல்வதற்கு முன்பாக சுமார் 20 கி. மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது குன்னூர். உதகையில் சில நாட்கள் தங்கியிருந்து வர விரும்புவோர், குன்னூரில் தங்க வாய்ப்பும் வசதியும் உள்ளது. செலவும் குறைவு. அழகும் அதிகம். மலைப் பிரதேசமான இங்கும் அழகு மிகுந்த இயற்கைக் காட்சிகள் ஏராளம். சிறுவர்கள் மகிழ்ந்து விளையாட பூங்காக்களும் உண்டு.

2. சிம்ஸ் பூங்கா

குன்னூரின் மேல்புறத்தில் உள்ளது சிம்ஸ் பூங்கா. தமிழக அரசின் தோட்டக்கலை பராமரிப்பில் உள்ள இப்பூங்கா, அழகிய புல்வெளிப் பாதை, மரம், செடிகள், மூலிகைச் செடிகள் என்று இயற்கை எழில் ததும்பக் காட்சியளிக்கிறது. மட்டுமல்லாமல் காய்கறித் தோட்டங்களும் உள்ளது கூடுதல் சிறப்பு.

3. லாஷ் நீர்வீழ்ச்சி

குன்னூரில் இருந்து 7 கி. மீட்டர் தொலைவில் உள்ளது லாஷ் நீர்வீழ்ச்சி. இந்த நீர்வீழ்ச்சி பாறைகள் நிறைந்து காட்சியளிக்கிறது, உயரிய மலைகளும், அடர்ந்த காடுகளும் இந்த நீர்வீழ்ச்சியின் அழகை மேலும் பன்மடங்கு அதிகரிக்கிறது. இயற்கையை ரசிக்கும் மனம் உள்ளவர்கள், இந்த இடத்தைப் பார்த்தால் 'சட்'டென்று திரும்ப மனமே வராது.

4. கோத்தகிரி

நீலகிரி மாவட்டத்தில் உதகைக்கு அடுத்ததாகக் குறிப்பிட்டுச் சொல்லப்படும்



மற்றொரு நகர் கோத்தகிரி, நிகி. மீட்டர் தொலைவில் உள்ளது. உதகையில் இருந்து இங்கு தேயிலைத் தோட்டங்கள் எங்குபார்த்தாலும் பரந்து விரிந்து கிடக்கிறது. காணக் கோடிக் கண்கள் வேண்டும். வனப் பிரதேசங்கள் கொள்ளை அழகு.

5. கொடநாடு

கோத்தகிரியில் இருந்து 18 கி. மீட்டர் தொலைவில் உள்ளது கொடநாடு. இங்குள்ள காட்சி முனை மிக அற்புதமான இடம். இங்கிருந்து பார்த்தால் நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களை இரண்டாகப் பிரித்துச் செல்லும் நதியின் பேரழகைப் பார்த்து ரசிக்க முடிகிறது. இங்கு தேயிலைத் தொழிற்சாலை ஒன்றுள்ளது.

6. ரங்கசாமி பீக் அன்ட் பில்லர்

ரங்கசாமி பீக் அன்ட் பில்லர் என்னும் கூம்பு வடிவில் அமைந்திருக்கும் இதன் உச்சியில் இருந்து பார்த்தால், மலைப் பிரதேசம் அனைத்தும் அற்புத அழகாகக் கண்களைக் குளிர்ச்சிப்படுத்தும். கோத்தகிரியில் இருந்து 20 கி. மீட்டர் தொலைவில் உள்ள இந்தப் பகுதியில்' பழங்குடியினரான இருளர்கள் அதிகளவில் வாழ்கின்றனர்

7. முக்குர்தி நேஷனல் பார்க்

உதகையில் இருந்து 40 கி. மீட்டர் தொலைவில் மலையின் உச்சியில் முக்குர்தி நேஷனல் பார்க் அமைந்துள்ளது. இங்கு ஆறுகளும், முக்குர்தி ஏரியும் உள்ளது. இதில் மீன்பிடித்து மகிழ்வது சிறப்புக்குரிய அம்சம். பிப்ரவரி முதல் மே மாதம் வரை இப்பகுதியில் சுற்றுலாச் செல்வதற்கு உகந்த காலமாகும்.

8. அருங்காட்சியகம்

1989ஆம் ஆண்டு உதகையில் திறக்கப்பட்டது அருங்காட்சியகம். உதகையில் இருந்து மைசூர் செல்லும் வழியில் உதகை நகரின் கிளப் சாலையில் அமைந்துள்ளது இந்த அருங்காட்சியகம். இங்கு வாழ்ந்த தோடர் என்னும் பழங்குடியின மக்கள் பயன்படுத்திய பல்வேறு வகையான பொருட்கள் இங்கு காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. பன்னிரெண்டு ஆண்டுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலர், கல் சிற்பங்கள், வெண்கல வேலைப்பாடுகள், பழைய நாணயங்கள் போன்றவைகளும் இங்கு உள்ளன.

9. தொட்டபெட்டா

உதகையில் இருந்து 8 கி. மீட்டர் தொலைவில் உள்ளது தொட்டபெட்டா. கடல் மட்டத்தில் இருந்து சுமார் 8640 அடி உயரத்தில் அமைந்துள்ள இம்மலையின் உச்சிவரை செல்வதற்கு நல்ல சாலை வசதிகள் உண்டு. இங்குள்ள கண்ணாடி அறையில் இருந்து மலையின் இயற்கைக் காட்சிகளைக் கண்டு ரசிக்கலாம்.

10. தவளை மலை

உதகையில் இருந்து 15 கி. மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது தவளை மலை பார்வை முனை என்ற இடம். இங்கிருந்து பார்த்தால் மலையொன்று தெரிகிறது. அந்த மலை தவளை வடிவில் காட்சியளிப்பதால் அந்த முனைக்கு இப்பெயர் வந்தது இங்கிருந்து முதுமலை விலங்குகள் சரணாலயத்தைப் பார்த்து மகிழ முடியும்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## ரூ.1,40,000 சம்பளத்தில் பொதுத்துறை நிறுவனத்தில் உதவி மேலாளர் வேலை

இந்திய அரசின் ரயில்வே அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் 'நவரத்னா' பொதுத்துறை நிறுவனமான ரைட்ஸ் நிறுவனத்தில் காலியாகவுள்ள உதவி மேலாளர் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியானவர்களிடம் இருந்து ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அறிவிப்பு எண்.: RG/08-10/26

பிரிவு: IT/Network & Security

சம்பளம்: மாதம் ரூ.40,000 -1,40,000

வயதுவரம்பு: 27.4.2026 தேதியின்படி 32-க்குள் இருக்க வேண்டும்.

தகுதி: பொறியியல் துறையில் Computer Engineering, Technology, Computer Science,Computer Applications,Information Technology, Electronics,Electronics & Telecommunications,Electronics & Communication,Electronics & Instrumentation பிரிவில் இளங்நிலை, முதுநிலைப் பட்டம் பெற்றிருப்பதுடன் 2 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயதுவரம்பு: உச்ச வயது வரம்பில் எஸ்சி, எஸ்டி பிரிவினர்களுக்கு 5 ஆண்டுகளும், ஓபிசி பிரிவினருக்கு 3 ஆண்டுகளும், மாற்றுத்திறனாளிகளுக்கு 10 ஆண்டுகளும் சலுகை வழங்கப்படும்.

விண்ணப்பக் கட்டணம்: பொது, இடபுள்யுஎஸ் மற்றும் ஓபிசி பிரிவினர்களுக்கு ரூ.600. எஸ்சி,எஸ்டி, முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத்திறனாளி பிரிவினர்களுக்கு ரூ.300. இதனை ஆன்லைன் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: https://frites.com என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 27.4.2026

# ஏப்ரல் மாதம் (2026) வார ராசிபலன்

**26.04.2026 முதல் 2.05.2026 வரை**

## மேஷம்

இந்த வாரம் சொந்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம். சின்ன விஷயங்களால் மன நிறைவை அடைவீர்கள். எதிர் பாலினத்தினரிடம் பழகும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். மருந்து, ரசாயனம் போன்ற தொழில்களில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான காரியங்களில் ஈடுபடும் போது அவசரப்படாமல் நிதானமாக செயல்படுவது காரிய வெற்றியை உண்டாக்கும்.

எளிதில் மற்றவர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்பட வாய்ப்பு உண்டு. குடும்பம் தொடர்பான கவலைகள் மறையும். குடும்ப செலவை சமாளிக்க பண வரத்து இருக்கும். மனதில் ஆன்மீக எண்ணங்கள் ஏற்படும். வாழ்க்கை துணை மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர், நண்பர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் கூடும். பெண்களுக்கு அடுத்தவர்கள் செயல்கள் உங்களது கோபத்தை தூண்டுவதாக இருக்கலாம்.

## ரிஷபம்

இந்த வாரம் அடுத்தவர் சொல்வதை நம்பும் முன் அதைப் பற்றி ஆலோசனை செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் ஒரே குறிக்கோளுடன் இருப்பதை விட்டு வாடிக்கையாளர் தேவை அறிந்து செயல்படுவது முன்னேற்றத்திற்கு உதவும். பண வரத்து அதிகரிக்கும். அரசாங்கத்தின் மூலம் உதவிகளைப் பெறுவீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் துணிச்சலாக வேலைகளை செய்து வெற்றி பெறுவார்கள். சக ஊழியர்கள் மேல் அதிகாரிகளால் நன்மையும் உண்டாகும். குடும்பத்தில் தம்பதிகள் இடையே இருந்த கருத்து வேற்றுமை குறைந்து நெருக்கம் அதிகரிக்கும். பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை.

பெண்களுக்கு அதிகம் பேசுவதை தவிர்த்து செயலில் வேகம் காட்டுவது நல்லது. கலைத்துறையினருக்கு தேவையான உதவிகள் கிடைக்கும். ஆசிரியர்கள், சக மாணவர்கள் மத்தியில் நன்மதிப்பு உண்டாகும்.

## மிதுனம்

இந்த வாரம் அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. மனதில் தைரியம் உண்டாகும். வீண் வாக்கு வாதங்களால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதூரியமான பேச்சின் மூலம் தங்களது வியாபாரத்தை லாபகரமாக செய்வார்கள். பங்குதாரர்களிடம் இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிக உழைப்பும் அதற்கு ஏற்ற பலனும் உண்டாகும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பணியிட மாற்றம் கிடைக்கும். குடும்பத்தில் கலகலப்பு உண்டாகும். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். பெண்களுக்கு மனதில் இருந்து வந்த சஞ்சலம் நீங்கும்.

கலைத்துறையினருக்கு மனதில் தெம்பு உண்டாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு வாக்கு வாதத்தை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். .

## கடகம்

இந்த வாரம் அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனமாக இருப்பது நல்லது. தைரியம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு வேகமாக இல்லாவிட்டாலும் நிதானமாக இருக்கும். பண வரத்து வரும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. நீண்ட நாட்களாக தொழிலில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதையும் ஆலோசித்து செய்வது நன்மை தரும்.

மேல் அதிகாரிகள் கூறுவதற்கு மாற்று கருத்துக்களை கூறாமல் இருப்பது நல்லது. சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். குடும்பத்தில் தம்பதிகள் ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் நிதானமாக பேசுவது குடும்ப அமைதியை தரும். நண்பர்கள், உறவினர்கள் விலகி செல்வது போல் இருக்கும். குழந்தைகளின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். பெண்களுக்கு மாற்று கருத்துக்களை மற்றவர்களிடம் கூறாமல் இருப்பது நன்மை தரும். .

## சிம்மம்

இந்த வாரம் குறிக்கோள் நிறைவேறும். சுணங்கிக் கிடந்த காரியங்கள் வேகம் பெறும். சமூகத்தில் அந்தஸ்து உண்டாகும். தொழில் வியாபாரத்தில் மாற்றம் செய்ய எண்ணுவீர்கள். சிலர் புதிய தொழில் தொடங்க முற்படுவார்கள். வாடிக்கையாளர்களின் தேவைகளை சமாளித்து விடுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் உண்டாகும்.

குறிக்கோளை அடைவது லட்சியமாக கொண்டு செயல்படுவீர்கள். புதிய தொடர்புகள் மூலம் லாபம் கிடைக்கும். குடும்பத்தில் இருந்து வந்த வாக்கு வாதங்கள் அகலும். வேலை நிமித்தமாக குடும்பத்தை விட்டு வெளியே தங்க நேரிடலாம். சுபச் செலவுகள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. உஷ்ணம் சம்பந்தமான நோய் உண்டாகலாம்.

பெண்களுக்கு எண்ணிய காரியம் கை கூடும். கலைத் துறையினருக்கு காரிய தாமதம் ஏற்பட்டாலும் சாதகமான பலன் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு பகை பாராட்டியவர்கள் பகையை மறந்து நட்பு கரம் நீட்டுவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் மதிப்பெண் பெற எண்ணுங்கள். அதற்கான முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்..

## கன்னி

இந்த வாரம் தொல்லைகள் தீரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். வீண் கவலைகள் ஏற்பட்டு நீங்கும். கோபத்தை கட்டுப்படுத்துவது நல்லது. பண வரத்து தாமதப்படும். வீண் ஆசைகள் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் வேகம் குறைந்தாலும் திருப்திகரமாக நடக்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் கவனமுடன் செயல்படுவது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களின் ஆலோசனையை கேட்டு செயல்படுவதை தவிர்ப்பது நல்லது. மேல் அதிகாரிகள் மூலம் நன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் குறையும். எதிர்பார்த்த காரியங்கள் நடக்கும். உறவினர், நண்பர்களுடன் இருந்த மன வருத்தம் நீங்கி நெருக்கம் ஏற்படும். பெண்களுக்கு மற்றவர்கள் ஆலோசனைகளை ஏற்கும் முன் அது பற்றி பரிசீலிப்பது நல்லது.

கலைத்துறையினருக்கு உயர் நிலையில் உள்ளவர்களுடன் மன வருத்தம் ஏற்படும்படியான சூழ்நிலை வரும். அரசியல்வாதிகளுக்கு விரும்பத்தகாத வாக்கு வாதங்கள் ஏற்படலாம். மாணவர்களுக்கு எதிலும் நல்லது கெட்டதை யோசித்து அதன் பின்பு அந்த காரியத்தில் ஈடுபடுவது நன்மை தரும். கல்வியில் கூடுதல் கவனம் தேவை.புதிய ஆர்டர் பிடிக்க அதிகம் அலைய வேண்டி இருக்கும்.

## துலாம்

இந்த வாரம் முயற்சிகளில் வெற்றி கிடைப்பதில் இருந்து வந்த தாமதம் நீங்கும். மனதில் தெளிவு உண்டாகும். ஆக்கப்பூர்வமாக எதையும் செய்யும் எண்ணம் தோன்றும். அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான கடிதப் போக்குவரத்தால் அனுகூலம் உண்டாகும். தொழில், வியாபாரம் விரிவுபடுத்துவது தொடர்பான திட்டங்கள் தோன்றும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயணங்களால் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். மேல் அதிகாரிகள் கூறுவதை மறுத்து பேசாமல் அனுசரித்து செல்வது நன்மையை தரும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் நீங்கும். தெளிவான முடிவுகள் மூலம் நன்மை உண்டாகும். குடும்ப வருமானம் அதிகரிக்கும். குடும்பத்திற்கு தேவையான வசதிகளைப் பெருக்குவீர்கள். பெண்களுக்கு மனதில் இருந்த குழப்பம் நீங்கி தெளிவு உண்டாகும்.

கலைத்துறையினருக்கு நெருக்க மானவர்களுடன் இனிமையாகப் பேசி பொழுதை கழிப்பீர்கள். அரசியல்வாதிகள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு பெறுவார்கள். வேதாந்த விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும்.

## விருச்சிகம்

இந்த வாரம் ராதியாதிபதி செவ்வாய் சஞ்சாரம் மனோ தைரியத்தை தரும். பண வரத்து திருப்திகரமாக இருக்கும். அந்நிய நபர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. எதிர்ப்புகள் நீங்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் அதிக உழைப்பின் மூலம் லாபம் கிடைக்க பெறுவார்கள். பொருளாதாரம் தொடர்பாக எடுக்கும் முயற்சிகள் சாதகமாக பலன் தரும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் கூடுதல் உழைப்பின் மூலம் செய்து முடிக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் நீங்கும். தம்பதிகள் இருவரும் எந்த ஒரு முடிவையும் நிதானமாக யோசித்து எடுப்பது நன்மை தரும். சகோதரர் வழியில் உதவியை எதிர்பார்க்கலாம். உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

பெண்களுக்கு எதிர்ப்புகள் நீங்கும். கலைத்துறையினருக்கு பாராட்டுகள் வரும். அரசியல்வாதிகளுக்கு நீண்ட நாளாக இருந்து வந்த பிரச்சனைகள் விலகும். மாணவர்களுக்கு கூடுதலாக நேரம் ஒதுக்கி பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும். தேவையான உதவிகள் கிடைக்கும். மேலிடத்தில் நற்பெயர் கிடைக்கும். கால்நடைகள் அபிவிருத்தி அடையும். புதிய நிலம் வாங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

## தனுசு

இந்த வாரம் திட்டமிட்டபடி செயலாற்றுவதில் கவனம் செலுத்துவீர்கள். வாகனங்களில் செல்லும் போதும் பயணங்களின் போதும் எச்சரிக்கை தேவை. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதுரியமான பேச்சினால் எதிலும் லாபம் காண்பார்கள். வர்த்தக திறமை அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையால் முன்னேற்றம் அடைவார்கள். இழுபறியாக இருந்த வேலையை துணிச்சலாக செய்து முடிப்பீர்கள்.

நீண்ட நாட்களாக வராமல் இருந்து வந்த பணம் கைக்கு வந்து சேரும். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் உண்டாகும். விருந்தினர் வருகை இருக்கும். குடும்ப பிரச்சனைகளில் சாதகமான முடிவே உண்டாகும். பெண்களுக்கு துணிச்சலாக எதிலும் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். கலைத்துறையினருக்கு பயணத்தால் அனுகூலம் உண்டு. அதிக ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். அரசியல்வாதிகளுக்கு உறுதியும், துணிவும் நிறைந்திருக்கும். மாணவர்களுக்கு திறமையால் முன்னேற்றம் உண்டாகும்.

## மகரம்

இந்த வாரம் திடீர் இடமாற்றம் ஏற்பட்டாலும் அதன் மூலம் சாதகம் உண்டாகலாம். வீண் செலவுகள் கவுரவ குறைச்சல் ஏற்படலாம். மிகவும் கவனம் தேவை. தாய் தந்தையின் உடல் நிலையிலும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில் வியாபாரத்தில் மெத்தன போக்கு காணப்பட்டாலும் குருவின் இருப்பால் தேவையான பண வரத்து இருக்கும். புதிய முயற்சிகளில் தாமதமான நிலை காணப்படும். நீண்ட நாட்களாக முடங்கிக் கிடந்த காரியங்கள் வேகம் பெறும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சல் காரியங்களில் இழுபறி என்ற நிலையை காண்பீர்கள். பேச்சை குறைத்து செயலில் ஈடுபடுவது நன்மையை தரும். சக ஊழியர்கள் ஆதரவுடன் எடுத்துக் கொண்ட காரியங்கள் சுமூகமாக முடியும். குடும்பத்தில் சுமூகமான நிலை காணப்படும். ஆனாலும் மனதில் குடும்பம் தொடர்பான கவலை, பிள்ளைகள் பற்றிய கவலை இருந்து வரும்.

வாக்கு வாதத்தை முற்றிலும் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு தொல்லைகள் குறையும். வீண் செலவுகள் உண்டாகலாம். கலைத்துறையினருக்கு உங்கள் கடமைகளைச் சரி வர செய்தால் நன்மைகள் அதிகமாக கிடைக்கும்.

## கும்பம்

இந்த வாரம் உங்கள் திறமையை கண்டு அடுத்தவர்கள் வியப்பார்கள். அலைச்சலை தவிர்ப்பதன் மூலம் களைப்பு ஏற்படாமல் தடுத்து கொள்ள முடியும். வேளை தவறி உணவு உண்ணாமல் பார்த்துக் கொள்வது நல்லது. பண வரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதுரியமாக செயல்பட்டு முன்னேற்றம் காண்பார்கள். ஆனால் வேலை செய்பவர்களிடம் கோபப்படாமல் தட்டி கொடுத்து வேலை வாங்குவது நன்மையை தரும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக செயல்பட்டு பாராட்டு பெறுவார்கள். ஆனால் கடுமையான பணியின் காரணமாக சோர்வு உண்டாகலாம். கவனம் தேவை. எடுத்து கொண்ட பணிகளில் இருந்து வந்த தொய்வு நீங்கும். குடும்ப விஷயங்களில் ஆர்வம் காண்பீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் கவனம் செல்லும். பிள்ளைகள் முன்னேற்றத்திற்காக பாடுபடுவீர்கள். உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

பெண்களுக்கு திடீர் என்று கோபம் உண்டாவதை தவிர்ப்பது நல்லது. கலைத்துறையினருக்கு லாபங்கள் பெருகும். தடைபட்ட புதிய கடன்கள் இனி ஏற்படாது.

## மீனம்

இந்த வாரம் ஆடை, அலங்கார பொருட்கள் வாங்கும் எண்ணம் தோன்றும். விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும் சூழ்நிலை ஏற்படும். மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். நீண்ட தூர தகவல்கள் நல்ல தகவல்களாக வரும். முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். திருப்திகரமான லாபம் கிடைக்கும். பங்குதாரர்களிடம் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக செயல்பட்டு உயர் அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கப் பெறுவார்கள். அத்துடன் பண வரத்தும் திருப்திகரமாக இருக்கும். கடினமான பணிகளை கூட எளிதாக முடிக்கும் ஆற்றல் வரும். சக ஊழியர்கள் மூலம் நீங்கள் எடுத்த காரியத்தை சாதித்துக் கொள்வீர்கள். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். குழந்தைகள் முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுவீர்கள். புதிய நண்பர்கள் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும்.

தந்தையின் உடல்நிலையில் கவனம் தேவை. சுபச் செலவுகள் ஏற்படும். பெண்களுக்கு நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் மன திருப்தியை தருவதாக இருக்கும்.

# டிசம்பரில் இருந்து சுங்கச் சாவடிகளில் இடையூறற்ற சேவை: நிதின் கட்கரி



**புதுடெல்லி, ஏப்.26:**

நாட்டில் உள்ள குறிப்பிட்ட சில சுங்கச்சாவடிகளில் டிசம்பா மாதத்தில் இருந்து இடையூறற்ற சேவைகள் அளிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சா நிதின் கட்கரி வெள்ளிக்கிழமை தெரிவித்தாா.

டில்லியில் நடைபெற்ற இரண்டாவது தளவாடங்கள் ஆற்றல் மாநாடு மற்றும் விருதுகள் 2026 நிகழ்ச்சியில் பங்கேற்று அவா மேலும் பேசியதாவது: தளவாடங்கள் செலவினத்தை குறைக்கசிறப்பான உள்கட்டமைப்பு வசதிகளை இந்தியா ஏற்படுத்த வேண்டும். அதற்கு ஏதுவாக நாட்டில் உள்ள குறிப்பிட்ட சில நெடுஞ்சாலைகளில் இயங்கும் சுங்கச்சாவடிகளில் டிசம்பா மாதம் முதல் இடையூறற்ற சேவைகள் வழங்க திட்டமிட்டுள்ளோம்.

அதன்படி தானியங்கி வாகனப் பலகை அங்கீகாரம் (ஏஎன்பிஆா்), செயற்கை நுண்ணறிவு பகுப்பாய்வு மற்றும் ஃபாஸ்டேக் ஆகிய தொழில்நுட்பங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு புதிய அமைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது.

இந்த அமைப்பானது உயா் தரத்திலான ஏஎன்பிஆா் கேமராக்கள் மற்றும் ஃபாஸ்டேக் குறியீடு மூலம் கட்டணத்தை வசூலிக்கும். வாகனங்கள் சுங்கச்சாவடிகளில் நிற்க வேண்டிய தேவை இருக்காது. புதிய அமைப்பின்கீழ் விதியை முறையாக பின்பற்றாத வாகன ஓட்டிகளுக்கு இணைய வழியில் நோட்டீஸ் அனுப்பப்படும். அபராதத்தைச் செலுத்த தவறுபவா்களின் ஃபாஸ்டேக் மற்றும் வாஹன் வலைதளத்தின் பிற சேவைகள் தற்காலிகமாக ரத்து செய்யப்படும். ஐஐடி அறிக்கைகளில் பாராட்டு: கடந்த 12 ஆண்டுகளாக கட்டமைக்கப்பட்ட அதிவிரைவுச் சாலைகள் மற்றும் பொருளாதார வழித்தடங்களால் இந்தியாவின் தளவாடங்கள் செலவினம் 16 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாக குறைந்துள்ளதாக ஐஐடி சென்னை, ஐஐடி கான்பூர் மற்றும் ஐஐடி பெங்களூரு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் 12 சதவீதமாகவும் சீனாவில் 8 முதல் 10 சதவீதமாகவும் உள்ளது. நம் நாட்டுக்குத் தேவையான 87 சதவீத கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்கிறோம். இதற்காக ரூ.22 லட்சம் கோடி செலவிடப்படுகிறது. அதிக எரிபொருள் பயன்பாட்டால் மாசுபாடும் அதிகரிக்கிறது.

இதற்கு மாற்றாக உயிரி-எரிபொருள், பசுமை ஹைட்ரஜன் போன்றவற்றின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். வேகமாக வளரும் இந்தியப் பொருளாதாரத்தை 5 டிரில்லியன் டாலா பொருளாதாரமாக உயா்த்துவதே பிரதமா நரேந்திர மோடியின் கனவு என்றாா.

## ஸ்ரைம் கார்னர்


### போக்சோ வழக்கில் வாலிபருக்கு 20 ஆண்டு சிறை

**தேனி, ஏப்.26:**

போக்சோ வழக்கில் வாலிபருக்கு தேனி நீதிமன்றம் 20 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. தேனி அல்லிநகரத்தைச் சேர்ந்தவர் ஆட்டோ ஓட்டுநர் செல்வம்(29). இவர் கடந்த 2020 ஆம் ஆண்டு 14வயது சிறுமியிடம் திருமணம் செய்வதாக ஆசை வார்த்தை கூறி நேரடியாகவும், மொபைல் மூலமும் பழகி வந்துள்ளார். தொடர்ந்து பாலியல் வன்முறையிலும் ஈடுபட்டுள்ளார். சிறுமியின் தரப்பினர் கண்டித்தபோது கொலை மிரட்டல் விடுத்துள்ளார். புகாரின் பேரில் தேனி காவல்துறையினர், செல்வத்தை போக்சோ சட்டத்தில் கைது செய்தனர். இது குறித்த வழக்கு தேனி போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்றது. அரசு தரப்பு வழக்கறிஞராக ரக்சிதா ஆஜரானார். விசாரணை முடிவடைந்த நிலையில் போக்சோ சிறப்பு நீதிமன்ற நீதிபதி பி.கணேசன், குற்றவாளி செல்வத்திற்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

### நடன கலைஞரிடம் பாலியல் அத்துமீறல் கல்லூரி மாணவர் கைது

**சென்னை, ஏப்.26:**



அடையாறு பகுதியில் வசித்து வரும் 33 வயதுடைய பெண் நடனக் கலைஞர் கிளாசிக் கல் டான்ஸ் வகுப்பு எடுத்து வருகிறார். இவர் நேற்று முன்தினம் காலை நடன வகுப்பு எடுப்பதற்காக இருசக்கர வாகனத்தில் சாஸ்திரி நகர் 1-வது குறுக்குத் தெரு வழியாக சென்று கொண்டிருந்தார்.

அப்போது, மற்றொரு இருசக்கர வாகனத்தில் பின் தொடர்ந்து வந்த இளைஞர் ஒருவர், நடன கலைஞரிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டு தப்பி உள்ளார்.

இதில் அதிர்ச்சியடைந்த நடன கலைஞர் இது தொடர்பாக அடையாறு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார். அதன்படி, பெண் வன்கொடுமை தடுப்பு சட்டம் உட்பட மேலும் சில பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில், பெண் நடன கலைஞரிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டு தப்பியது திருவான்மியூர் மருந்தீஸ்வரர் நகரைச் சேர்ந்த கணேஷ் (21) என்பது தெரிந்தது.

கல்லூரி மாணவரான அவரை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்து சிறையில் அடைத்தனர். அவரது இருசக்கர வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டது.

### கிரிக்கெட் விளையாடியபோது தகராறு: இளைஞர் கத்தியால் குத்திக் கொலை

**கிருஷ்ணகிரி, ஏப்.26:**

கிருஷ்ணகிரியில் கிரிக்கெட் விளையாட்டின் போது ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில் கத்தியால் குத்திக்கொலை செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. கிருஷ்ணகிரி பள்ளி மைதானத்தில் உள்ளூர் இளைஞர்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தபோது, ஒரு ரன் எடுப்பதில் இரு தரப்பினரிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. முதலில் சாதாரணமாகத் தொடங்கிய இந்த தகராறு, சிறிது நேரத்திலேயே கைகலப்பாக மாறியது.

இந்நிலையில் ஆத்திரமடைந்த இளைஞர் ஒருவர், தான் மறைத்து வைத்திருந்த சிறிய கத்தியால் ஆகாஷ் மார்பில் சரமாரியாகக் குத்தியுள்ளார். இதில் பலத்த காயமடைந்து ரத்த வெள்ளத்தில் சரிந்த ஆகாஷை அங்கிருந்தவர்கள் மீட்டு உடனடியாக அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். இருப்பினும், மருத்துவமனைக்குச் செல்லும் வழியிலேயே அவர் பரிதாபமாக உயிரிழந்ததாக மருத்துவர்கள் உறுதி செய்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞரின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கொலைச் சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த காவல்துறையினர், தலைமறைவாக இருந்த 4 இளைஞர்களை அதிரடியாகக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

## விளையாட்டு செய்திகள்

### குதிரையேற்றத்தில் இந்தியாவுக்கு வெள்ளி!




**புதுடெல்லி, ஏப்.26:**

ஜெர்மனியின் ஹேகன் நகரில் ஐரோப்பாவின் மிகவும் மதிப்புமிக்க சிடிஐ ஹேகன் சர்வதேச குதிரையேற்றப் போட்டி நடைபெற்றது.

இதில் இந்தியாவின் அனுஷ் அகர்வாலா மிகச்சிறந்த செயல்திறனை வெளிப்படுத்தினார். அவர், தனது 'புளோரியானா' குதிரையுடன் இணைந்து 70.94 சதவீத புள்ளிகளை பெற்று வெள்ளிப் பதக்கம் வென்றார்.

### துப்பாக்கி சுடுதலில் இந்தியாவுக்கு தங்கம்




**கெய்ரோ, ஏப்.26:**

எகிப்தின் கெய்ரோ நகரில் ஐஎஸ்எஸ்எஃப் ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் 10 மீட்டர் ஏர் ரைபிள் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் சாம்பவி கிஷிர்சாகர், திவ்யான்ஷு தேவாங்கன் ஜோடி 499.9 புள்ளிகளை குவித்து உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றது.

சீன தைபேயைச் சேர்ந்த சாய் சீ-யிங், சென் யூ-ஆன் ஜோடி 498.3 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கத்தையும், அதே நேரத்தில் பிரான்ஸைச் சேர்ந்த டிஃபென் போம்ஸ், காஸ்பர்ட் லெசியர் ஜோடி 434.4 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றது.

### ஸ்குவாஷ் கால் இறுதியில் அபய் சிங்

**புதுடெல்லி, ஏப்.26:**

சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் பிஎஸ்ஏ கோல்டு லெவல் ஸ்குவாஷ் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவு 2-வது சுற்றில் 24-வது இடத்தில் உள்ள இந்தியாவின் அபய் சிங், உலகத் தரவரிசையில் 13-வது இடத்தில் உள்ள எகிப்தின் அலி அபு எலெய்னெனை எதிர்த்து விளையாடினார். இதில் அபய் சிங் 12-10, 11-9 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று கால் இறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

# உக்ரைன் போரில் 10 இந்தியர்கள் உயிரிழப்பு: உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல்

**புதுடெல்லி, ஏப்.26:**



உக்ரைன் போரில் 10 இந்தியர்கள் உயிரிழந்து இருப்பதாகவும் பலர் விருப்பப்பட்டு சென்றதாகவும் உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்யாவில் வசிக்கும் திவ்யா தாக்கல் செய்த பொதுநல மனுவில் கூறப்பட்டுள்ளதாவது: 26 இந்தியர்கள் சுற்றுலா பயணிகளாகவும், படிக்கவும் ரஷ்யாவுக்கு கடந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபரில் சென்றனர். வேலைவாய்ப்பு வழங்குவதாக அழைக்கப்பட்ட அவர்களின் பாஸ்போர்ட், அடையாள ஆவணங்கள் பறிக்கப்பட்டு, மிரட்டி உக்ரைனுடனான போரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களை கண்டறிந்து தாயகம் அனுப்பி வைக்கும் நடவடிக்கையை எடுக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. இந்த பொதுநல மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு நேற்று விசாரித்தது.

அப்போது மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஐஸ்வர்யா பாட்டி தாக்கல் செய்த மனுவில் "26 நபர்களில் 10 பேர் உக்ரைன் உடனான போரில் உயிரிழந்து இருப்பதாகவும், உயிரிழந்தோரின் குடும்பங்களுடன் வெளியுறவுத்துறை அமைச்சகம் தொடர்பில் இருப்பதாகவும், உக்ரைன் உடனான போரில் பலர் விருப்பப்பட்டு சென்றிருப்பதாகவும், சில ஏஜெண்டுகள் தவறாக வழி நடத்தி இருக்க கூடிய சம்பவங்களும் இருப்பதாகவும், ரஷ்யாவுக்கு 215 இந்தியர்கள் சென்றிருப்பதாகவும்" தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை நிலை அறிக்கை தாக்கல் செய்ய வெளியுறவு அமைச்சகத்துக்கு உத்தரவிட்டு விசாரணையை உச்ச நீதிமன்றம் தள்ளி வைத்துள்ளது.

# 5 கிலோ சிலிண்டர் விற்பனை சீராகத் தொடர்கிறது: மத்திய பெட்ரோலிய அமைச்சகம் அறிவிப்பு

**புதுடெல்லி, ஏப்.26:**




ஐந்து கிலோ சிலிண்டர் விற்பனை சீராகத் தொடர்வதாக பெட்ரோலியத்துறை அமைச்சகம் நேற்று தெரிவித்தது.

ஈரான் போரால் ஏற்பட்டுள்ள பதற்றம் மற்றும் காஸ் சிலிண்டர் விநியோகம் குறித்து பெட்ரோலியத் துறை அமைச்சக அதிகாரிகள் நேற்று அளித்த பேட்டியில் கூறியதாவது: பெட்ரோல், டீசல் மற்றும் எல்பிஜி ஆகியவற்றின் இருப்பை உறுதி செய்ய மத்திய அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. வீட்டு உபயோகத்திற்கான எல்பிஜி விநியோகத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 1 முதல் 17.83 லட்சத்திற்கும் அதிகமான சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 5 கிலோ காஸ் சிலிண்டர் விற்பனை சீராகத் தொடர்கிறது.

17.83 லட்சத்திற்கும் அதிகமான 5 கிலோ சிலிண்டர்கள் கடந்த ஏப்ரல் 1 முதல் விற்பனை செய்யப்பட்டுள்ளன. நேற்று, நாடு முழுவதும் 81,000-க்கும் அதிகமான 5 கிலோ சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டன. அதனால், மக்கள் பீதியடைந்து பெட்ரோல், டீசல் மற்றும் எல்பிஜி ஆகியவற்றை வாங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

வதந்திகளை நம்ப வேண்டாம். சரியான தகவல்களுக்கு அதிகாரப்பூர்வ தகவல்களை மட்டுமே பார்க்க வேண்டும்.

எல்பிஜி நுகர்வோர் டிஜிட்டல் முன்பதிவு தளங்களைப் பயன்படுத்த வேண்டும். விநியோகஸ்தர்களை நேரில் சந்திப்பதைத் தவிர்க்க வேண்டும். எல்பிஜி விநியோக மையங்களில் எந்தவிதமான தட்டுப்பாடு, தட்டுப்பாடுகளும் பதிவாகவில்லை.

தொழில்துறை அடிப்படையில் ஆன்லைன் எல்பிஜி சிலிண்டர் முன்பதிவுகள் நேற்று 98 சதவீதம் அதிகரித்துள்ளன. பிஎன்ஜி மற்றும் மின்சாரம் அல்லது இன்டக்ஷன் அடுப்புகள் போன்ற மாற்று எரிபொருள் சாதனங்களைப் மக்கள் பயன்படுத்த வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில், அனைத்து மக்களும் தங்களின் அன்றாடப் பயன்பாட்டில் எரிசக்தியைச் சேமிக்கத் தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955 மற்றும் எல்பிஜி கட்டுப்பாட்டு ஆணை, 2000 ஆகியவற்றின் கீழ், விநியோகத்தைக் கண்காணிக்கவும், பதுக்கல் மற்றும் கள்ளச் சந்தைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் மாநில அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெட்ரோலிய அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வணிகச் செய்திகள்

### தங்கம் விலை பவுனுக்கு ரூ.800 உயர்ந்தது

**சென்னை, ஏப்.26:**



சென்னை: தங்கம் விலை (ஏப்.25) பவுனுக்கு ரூ.800 உயர்ந்துள்ளது. வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.5 உயர்ந்துள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம், சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பின் நிலை ஆகியவற்றால், தங்கம் விலை கடந்த சில நாட்களாகவே ஏற்ற இறக்கமாக இருக்கிறது.

அந்த வகையில், சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை சனிக்கிழமை கிராமுக்கு ரூ.100 உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,200-க்கும், பவுனுக்கு ரூ.800 உயர்ந்து ஒரு பவுன் ரூ.1,13,600-க்கும் விற்பனையாகிறது.

24 காரட் தங்கம் கிராமுக்கு ரூ.109 உயர்ந்து ஒரு கிராம் ரூ.15,491-க்கும், 18 காரட் தங்கம் கிராமுக்கு ரூ.90 உயர்ந்து ஒரு கிராம் ரூ.11,850-க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.5 உயர்ந்து ஒரு கிராம் ரூ.270-க்கும், கட்டி வெள்ளி கிலோ ரூ.2,70,000-க்கும் விற்பனையாகிறது.

# கேரளம்: புற ஊதா கதிர்வீச்சு அதிகரிப்பு! மக்கள் பாதுகாப்புடன் இருக்க அறிவுறுத்தல்!

**புதுடெல்லி, ஏப்.26:**

கேரளத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த ஓரிரு நாளாக சூரிய ஒளியில் புற ஊதா கதிர்வீச்சு அதிகரித்து காணப்படுவதால் மக்கள் பாதுகாப்புடன் இருக்க கேரள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் வெள்ளிக்கிழமை அறிவுறுத்தியது.

சூரிய ஒளியில் உள்ள புற ஊதா கதிர்கள், மனிதர்களின் தோல், கண்களை பாதிக்கும். பகல் நேரத்தில் அதிகம் காணப்படும் இக்கதிர்வீச்சு 0 முதல் 11 மற்றும் அதற்கும் மேற்பட்ட குறியீடுகளில் அளவிடப்படுகிறது.

இதுதொடர்பாக கேரள பேரிடர் மேலாண்மை ஆணையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை புற ஊதா கதிர்வீச்சு அதிகம் காணப்படுகிறது.

குறிப்பாக பத்தனம்திட்டா மாவட்டத்தில் உள்ள கோன்னி, ஆலப்புழை மாவட்டத்தில் செங்கன்னூர், கோட்டயம் மாவட்டத்தில் சங்கனாசேரி, இடுக்கி மாவட்டத்தில் மூணாறு ஆகிய பகுதிகளில் புற ஊதா கதிர்வீச்சின் குறியீடு 8-க்கு மேல் உள்ளது. எனவே அப்பகுதிகளில் ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்படுவதற்கான நிலை உருவாகியுள்ளது.

இதுதவிர மாநிலத்தின் 10 பகுதிகளில் புற ஊதா கதிர்வீச்சு குறியீடு 6 முதல் 7 வரை உள்ளதால் அங்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்படவுள்ளது.

இதன் காரணமாக பகல் நேரத்தில் பொதுமக்கள் வெளியில் வருவதை தவிர்த்து பாதுகாப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மீனவர்கள், நீர்ப் போக்குவரத்துப்பணியாளர்கள், இரு சக்கர வாகன ஓட்டிகள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் புற்றுநோய், தோல் நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளோர் கூடுதல் கவனமாக இருக்க வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. மாநிலத்தின் 14 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு மையங்கள் மூலம் புற ஊதா கதிர்வீச்சு குறியீடுகளின் தரவுகள் இணையத்தில் தொடர்ந்து பதிவேற்றம் செய்யப்படுகின்றன. அதில் தங்கள் பகுதியின் நிலவரத்தை பொதுமக்கள் தெரிந்துகொண்டு அதற்கேற்ப பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்' எனத் தெரிவிக்கப்பட்டது.

# ஆன்த்ரோபிக் 'மித்தோஸ்' ஏஐ-யால் அச்சுறுத்தல்: வங்கிகளுக்கு எச்சரிக்கை

புதுடெல்லி, ஏப்.26:

உலகம் முழுவதும் ஏஐ பயன்பாடு அதிகரித்து வருகிறது. முன்னணி டெக் நிறுவனங்கள் வெளியிடும் ஏஐ மாடல்கள் பிரமிக்க வைக்கும் வகையில் உள்ளன. அதேவேளையில் தகவல் தொழில்நுட்ப துறையில் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தும் விதமாகவும் உள்ளன. அந்த வகையில், தற்போது ஆன்த்ரோபிக் நிறுவனம் உருவாக்கியுள்ள ஏஐ மாடலான 'மித்தோஸ்' வங்கி துறைகளுக்கு ஆபத்தாக இருக்கும் என்ற அச்சம் எழுந்துள்ளது.




கணினி பாதுகாப்புத்துறையில் மிகத் திறனுடன் செயல்படும் இந்த 'மித்தோஸ்' ஏஐ மாடல், சைபர் குறைபாடுகளைக் கண்டறிந்து, தாக்குதல்களை சுயமாக மேற்கொள்ளும் அபாயம் கொண்டிருப்பதால், பாதுகாப்புக் கருதி பொதுப் பயன்பாட்டிற்கு வெளியிடப் போவதில்லை என ஆன்த்ரோபிக் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இருப்பினும், சமீபத்தில் அங்கீகரிக்கப்படாத சில நபர்கள் இந்த ஏஐ தொழில்நுட்பத்தை பயன்படுத்தியதாக வெளியான தகவல்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தின.

இதையடுத்து, பொதுத்துறை வங்கிகளின் தலைவர்கள், கணினி பாதுகாப்பு வல்லுநர்களுடன் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆலோசனை மேற்கொண்டார். அப்போது அவர், "தொழில்நுட்பச் சவாலை எதிர்கொள்ள வங்கிகள் மிகுந்த விழிப்புணர்வுடனும் தயார் நிலையுடனும் இருக்க வேண்டும்.

சைபர் பாதுகாப்புத்துறையில் தலைசிறந்த நிபுணர்களைப் பணியமர்த்தி, கண்காணிப்புப் பணிகளைத் தீவிரப்படுத்தவும், சந்தேகத்துக்கிடமான பணப் பரிமாற்றங்கள் குறித்து உடனுக்குடன் அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கவும் வேண்டும்" என்று அறிவுறுத்தினார்.

இந்த ஆலோசனையின் போது மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவும் உடன் இருந்தார்.

## ரூ.410 கோடி ஜிஎஸ்டி மோசடியில் ஈடுபட்டவர் கைது


பெங்களூரு, ஏப்.26:

போலி நிறுவனங்கள் மூலம் ஜிஎஸ்டி மோசடி நடைபெறுவதாக கர்நாடக வணிக வரித் துறையின் அமலாக்கப் பிரிவுக்கு புகார் வந்தது.

இதுகுறித்து அதிகாரிகள் நடத்திய விசாரணையில் முகமது தவுக்கீர், போலி ஷெல் நிறுவனங்கள் வாயிலாக உள்ளீட்டு வரி வரவு மூலம் கோடிக்கணக்கான ரூபாய் ஜிஎஸ்டி வரி ஏய்ப்பு செய்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து வணிக வரித்துறை அதிகாரிகள், இந்த மோசடி யில் ஈடுபட்ட முக்கிய நபரான முகமது தவுக்கீரை (42) கைது செய்தனர். ஆந்திராவை சேர்ந்த இவர் கர்நாடகா, தமிழ்நாடு, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் போலியான ஆவணங்கள், தவறான முகவரிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி போலி நிறுவனங்களை உருவாக்கி ஜிஎஸ்டி (GST) பதிவுகளைப் பெற்று மோசடி செய்துள்ளார். முகமது தவுக்கீரிடம் நடத்திய விசாரணையில், ரூ.410 கோடி அளவுக்கு மோசடிப் பரிவர்த்தனைகள் செய்தது தெரியவந்தது. இந்த மோசடியில் அவரது கூட்டாளி முகமது பாஷா என்பவரை போலீஸார் தேடி வருகின்றனர்.

## மதுபோதையில் பாம்பை பாக்கெட்டில் எடுத்து வந்த தொழிலாளியை பாம்பு கடித்தது



மலப்புரம், ஏப்.26:

அசாம் மாநிலத்தை சேர்ந்தவர் அமிதுல் இஸ்லாம் (வயது 28). தொழிலாளி. இவர் கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டத்தில் தங்கி வேலை செய்து வருகிறார். அவர், ஒரு பாம்பை தனது பேண்ட் பாக்கெட்டில் சுருட்டி வைத்துக் கொண்டு ஒதாயி பகுதியில் உள்ள டீக்க டைக்கு நடந்து சென்றார். பின்னர் அந்த கடையில் அமர்ந்து டீ குடித்து கொண்டிருந்தார். அப்போது அமிதுல் இஸ்லாம் அருகே இருந்த ஒருவரிடம், தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்த பாம்பை வெளியே எடுத்து காண்பித்தார்.

அந்த சமயத்தில் பாம்பு தொழிலாளியை பலமுறை கடித்தது. உடனே அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு மஞ்சேரி அரசு மருத்துவக்கல் லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தகவல் அறிந்த மலப்புரம் வனத்துறையினர் சம்பவ இடத்துக்கு வந்து, தொழிலாளியை கடித்த விஷமுள்ள கண்ணாடி விரியன் பாம்பை பிடித்து சென்றனர்.

விசாரணையில் அமிதுல் இஸ்லாம் மது போதையில் பாம்பை பேண்ட் பாக்கெட்டில் வைத்து கொண்டு வந்ததும், அதை விளையாட்டு தனமாக எடுத்து காண்பித்தபோது அவரை கடித்ததும் தெரியவந்தது.

## முதல்கட்ட தேர்தல் நடந்த 152 இடத்தில் 110 தொகுதிகளை பாஜக கைப்பற்றும்: அமித் ஷா

கொல்கத்தா, ஏப்.26:

மேற்கு வங்கத்தில் முதல் கட்ட தேர்தல் நடைபெற்ற 152 இடங்களில், 110 இடங்களில் பாஜக வெற்றி பெறும். மம்தா பதவியில் இருந்து இறங்குவார் என அமைச்சர் அமித் ஷா கூறியுள்ளார்.



மேற்கு வங்கத்தில் முதல் கட்ட தேர்தல் முடிந்த பின், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அளித்த பேட்டியில் கூறிய தாவது: பிரதமர் மோடி மற்றும் பாஜக மூத்த தலைவர்கள் பங்கேற்ற தேர்தல் பிரச்சார கூட்டங்களில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. முதல் கட்ட தேர்தலில் 110 இடங்களில் பாஜக வெற்றி பெறும். திரிணமூல் ஆட்சியை மக்கள் நிராகரித்ததை தேர்தல் முடிவுகள் காட்டும். இங்கு பாஜக ஆட்சிக்கு வந்தால், வெளிமாநிலத்தவரை பாஜக முதல்வராக்கும் என மம்தா பானர்ஜி வதந்தி பரப்புகிறார்.

அடுத்த முதல்வர் மேற்கு வங்கத்தில் பிறந்து, வங்க மொழியில் படித்தவராக இருப்பார். ஆனால், மம்தாவின் நெருங்கிய உறவினராக மட்டும் இருக்க மாட்டார். மம்தா முதல்வர் பதவியில் இருந்து இறங்க வேண்டும் என மேற்கு வங்க மக்கள் முடிவு செய்து விட்டனர். இங்கு பாஜக ஆட்சி அமைக்கும். மக்கள் இடையே அச்சம் விலகி நம்பிக்கை அதிகரித்து வருகிறது.

இங்கு முதல் கட்ட தேர்தலை அமைதியாக நடத்திய மத்திய போலீஸ் படையினருக்கும், தேர்தல் ஆணையத்துக்கும் நன்றி. இவ்வாறு அமித் ஷா கூறினார்.

## பிரதமர் மோடி கொடுத்த 10 ரூபாயை ரூ.1.11 லட்சத்துக்கு வாங்க பலர் ஆர்வம்

புதுடெல்லி, ஏப்.26:

மேற்கு வங்க தேர்தல் பிரச்சாரத்துக்காக பிரதமர் மோடி கடந்த வாரம் ஜார்கிராமுக்கு சென்றிருந்தார். காரில் சென்று கொண்டிருந்த போது வழியில் இருந்த ஒரு கடையைப் பார்த்து பிரதமர் அங்கு சென்றார்.



அந்தக் கடைக்குச் சென்ற பிரதமர் மோடி, மேற்கு வங்கத்தின் பிரபல சிற்றுண்டியான ஜால்முரியை (காரப்பொரி) வாங்கி விரும்பிச் சாப்பிட்டார். அவரது யதார்த்தமான செயல் பொதுமக்களை வியப்பில் ஆழ்த்தியது. இதையடுத்து ஜால்முரி சாப்பிடும் தனது புகைப்படங்களை எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டார். சாப்பிட்ட பின்னர் அந்தக் கடைக்காரருக்கு ரூ.10 கொடுத்தார்.

இந்நிலையில், பிரதமர் மோடி அந்தக் கடைக்காரருக்கு வழங்கிய 10 ரூபாயை வாங்க பலர் முயற்சிசெய்து வருவதாக சமூக வலைதளங்களில் செய்தி வெளியானது. அதாவது அரிய புகைப்படங்கள், வித்தியாசமான ரூபாய் நோட்டுகள், பிரபலங்கள் கையெழுத்திட்ட ரூபாய் நோட்டுகள் போன்றவற்றை சேகரித்து வைத்திருக்கும் சிலர் இந்த 10 ரூபாயைப் பெற முயற்சி செய்வதாக தெரிய வந்தது. மேலும் பிரதமர் மோடி வழங்கிய நோட்டுக்காக ரூ.1.11 லட்சம் தருவதாகவும் சமூக வலைதளவாசிகள் அதில் கூறியிருந்தனர்.

இந்நிலையில், அந்தக் கடையில் பிரதமர் மோடிக்கு ஜால்முரியைத் தந்த கடைக்காரர் உண்மையில் கடைக்காரர் அல்ல என்றும் கடைக்காரர் போல வேடமிட்டிருந்த பிரதமரின் எஸ்பிஜி (சிறப்புப் பாதுகாப்புப் பிரிவு) அதிகாரி என்றும் சமூக வலைதளங்களில் செய்திகள் வந்தன. இதை மத்திய அரசு மறுத்துவிட்டது.

அந்தக் கடைக்காரர் பெயர் விக்ரம் ஷா என்கிற தீபக்குமார் என்றும் அவர் பிஹாரைச் சேர்ந்தவர் என்றும் தெரிய வந்தது.

இந்நிலையில் யார் அந்த 10 ரூபாய் நோட்டுக்கு ரூ.1.11 லட்சம் தர முன்வந்தது என்றும், கடைக்காரர் போல வேடமிட்ட எஸ்பிஜி உயர் அதிகாரி போன்ற செய்திகளை வெளியிட்டது யார் என்றும் விசாரணை நடைபெற்று வருகிறது.

# செல்போன் செயலி பதிவிறக்கத்தில் தொடர்ந்து முதலிடத்தில் இந்தியா

புதுடெல்லி, ஏப்.26:

உலகளவில் செல்போன் செயலிகளை பதிவிறக்கம் செய்வதிலும், அவற்றை பயன்படுத்துவதிலும் இந்தியா முன்னிலையில் இருப்பதாக 'சென்சார் டவர் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், உலக அளவில், செல்போன் செயலி பதிவிறக்கத்தில் இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் இருக்கிறது. கடந்த ஆண்டு, ஆண்ட்ராய்டு மற்றும் ஐ.ஓ.எஸ். தளங்கள் கொண்ட செல்போன்களில் 2 ஆயிரத்து 550 கோடி பதிவிறக்கங்களை செய்துள்ளது. ஆனால், அமெரிக்காவில் 1,260 கோடி பதிவிறக்கங்கள் மட்டுமே



செய்யப்பட்டன. அதுபோல், தற்போதைய ஆண்டின் முதல் 3 மாதங்களில் இந்தியாவில் 620 கோடி பதிவிறக்கங்கள் செய்யப்பட்டுள்ளன. பதிவிறக்கம் மூலம் 30 கோடி டாலர் வருவாய் கிடைத்துள்ளது. இது, முந்தைய ஆண்டின் இதே 3 மாதங்களுடன் ஒப்பிடுகையில் 33 சதவீதம் அதிகம் ஆகும். இதில், விளையாட்டு அல்லாத செயலிகளின் பதிவிறக்கம் மூலம் கிடைத்த தொகை 20 கோடி டாலர் என்பது குறிப்பிடத்தக்கது. பயனர்களின் ரசனை மாறிவருவதை இது உணர்த்துகிறது. நடப்பாண்டின் மொத்த வருவாய் 125 கோடி டாலராக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, இந்திய அளவில் பதிவிறக்க வருவாய் அதிகரித்தபோதிலும் உலக அளவில் ஒப்பிட்டால், பதிவிறக்க எண்ணிக்கைக்கு ஏற்ப இந்தியாவின் வருவாய் இல்லை. அதிக வருவாய் ஈட்டும் முதல் 20 நாடுகள் பட்டியலில் கூட இந்தியா இடம்பெறவில்லை. கடந்த ஆண்டு, இந்தியாவை விட பாதிக்கும் குறைவான பதிவிறக்கங்களை செய்த போதிலும் அமெரிக்காவின் வருவாய் 6 ஆயிரம் கோடி டாலராக இருந்தது. இதற்கு காரணம், இந்தியாவில் பதிவிறக்க கட்டணம் குறைவாக இருப்பதுதான். ஒரு பதிவிறக்கத்துக்கு இந்தியாவுக்கு 0.03 டாலர் கிடைக்கிறது. ஆனால், தென்கிழக்கு ஆசியாவும், லத்தீன் அமெரிக்காவும் 0.20 டாலர் வசூலிக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயத்தில், இந்தியாவின் வருவாய் படிப்படியாக உயர்ந்து வருகிறது. கேளிக்கை செயலிகள், குறைந்த நேர வீடியோ செயலிகள் ஆகியவை அதிகமாக பதிவிறக்கம் செய்யப்படுகின்றன. அடுத்த இடத்தை ஏ.ஐ. செயலிகள், உணவு மற்றும் உணவு வினியோக சேவை செயலிகள் பிடித்துள்ளன.

இந்தியாவில் கூகுள்ஒன், பேஸ்புக், சாட்ஜிபிடி, யூடியூப் போன்ற சர்வதேச செயலிகள் அதிக வருவாய் ஈட்டுகின்றன. உள்நாட்டு செயலிகளில் ஜியோஹாட்ஸ்டார் அதிக வருவாய் ஈட்டுகிறது.

## யமுனையில் படகு சவாரி செய்து பாருங்கள்! மோடியைக் விமர்சனம் செய்த மம்தா!

கொல்கத்தா, ஏப்.26:

மேற்கு வங்கத்தில் நடைபெறும் பாஜக பிரசார பொதுக்கூட்டத்தில் பங்கேற்கச் சென்ற பிரதமர் நரேந்திர மோடி, நேற்று (ஏப்ரல் 24) அங்குள்ள கங்கையின் கிளை நதியான ஹூக்ளி நதியில் படகுசவாரி செய்தார்.



இதனைக் கேலியாக விமர்சித்த மேற்கு வங்க முதல்வர் மமதா பானர்ஜி, "கங்கை நதி தூய்மையாக இருப்பதால் பிரதமர் நன்றாக படகுசவாரி செய்கிறார். இதேபோல, அவர் யமுனை நதியில் படகுசவாரி செய்யமுடியுமா?" என்று கேள்வி எழுப்பினார்.

ஹௌரா பகுதியில் தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட மமதா பானர்ஜி அங்கு பேசுகையில், "இது தேர்தல் அரசியல். போட்டோஷாப்பிங். நீங்கள் கங்கையில் படகு சவாரி செய்தீர்கள். நல்லது. அதனை வரவேற்கிறோம். நானுமே கங்கைக்குச் செல்வேன்.

ஆனால், நான் உங்களுக்கு சவால் விடுக்கிறேன். நீங்கள் தில்லியின் யமுனை நதிக்குச் சென்று நீராடுவீர்களா? டில்லியின் யமுனை முற்றிலும் மாசுபட்டுள்ளது. டில்லியிலுள்ள யமுனை நதியை உங்களால் சரிவர பாதுகாக்க முடியவில்லை. ஆனால், எங்களின் கங்கைக்கு வந்து புகைப்படம் எடுக்கிறீர்கள்.

மேற்கு வங்கத்தின் கங்கையையும் தில்லியின் யமுனையையும் பிரதமர் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். நமது கங்கை சுத்தமானது. அதனால்தான், பிரதமர் படகு சவாரி செய்தார். இது அரசியல் ஆதாயத்திற்காக புகைப்படங்கள் எடுக்க ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு" என்று விமர்சித்தார்.

## பேடிஎம் பேமென்ட்ஸ் வங்கியின் உரிமம் ரத்து செய்தது ரிசர்வ் வங்கி.. என்ன காரணம்..?

மும்பை, ஏப்.26:

நொய்டாவை தலைமையிடமாக கொண்டு பேடிஎம் பேமென்ட்ஸ் வங்கி கடந்த 2017-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதற்காக அந்த ஆண்டு ரிசர்வ் வங்கியிடம் இருந்து உரிமம் பெற்று இருந்தது.

தற்போது இந்த வங்கியின் உரிமம் ரத்து செய்யப்பட்டு விட்டதாக ரிசர்வ் வங்கி நேற்று அறிவித்தது. இந்த வங்கி மற்றும் அதன் வாடிக்கையாளர்களின் நலன்களுக்குப் பாதகமான முறையில் வங்கி நடைமுறைகள் இருந்ததால் இந்த நடவடிக்கை எடுத்துள்ளதாக ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

அதில், 'வாடிக்கையாளர்களின் நலன்களுக்கும், பொதுநலனுக்கும் பாதகமாக பேடிஎம் பேமென்ட்ஸ் வங்கி நிர்வாகத்தின் பொதுவான தன்மை உள்ளது. இதனால் பேடிஎம் பேமென்ட்ஸ் வங்கி எந்த விதமான வங்கி நடவடிக்கைகளிலும் ஈடுபட தடை விதிக்கப்படுகிறது' என குறிப்பிடப்பட்டு இருந்தது. குறிப்பாக, வங்கியின் மேலாண்மை மற்றும் நிர்வாக முறை திருப்திகரமாக இல்லை என்றும், வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் விதிகளை இந்த வங்கி தொடர்ந்து மீறி வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வங்கியை தொடர்ந்து செயல்பட அனுமதிப்பது பொதுமக்களுக்கு எந்த நன்மையையும் தராது என்பதால், உரிமத்தை ரத்து செய்துள்ளதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

## மணிப்பூரில் தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் உயிரிழப்பு...

உக்ரூல், ஏப்.26:

மணிப்பூரின் உக்ருல் மாவட்டத்தின் இருவேறு இடங்களில் தீவிரவாதிகள் வெள்ளிக்கிழமை நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர்.

நாகா பழங்குடியினர் பெரும்பான்மையாக வாழும் உக்ருல் மாவட்டத்தின் முல்லம் கிராமத்தில் வெள்ளிக்கிழமை அதிகாலை இரு தீவிரவாத குழுக்கள் இடையே துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது. மேலும் சில வீடுகளுக்கும் தீவைக்கப்பட்டது. இந்த துப்பாக்கிச் சண்டையில் கிராமவாசிகள் இருவர் உயிரிழந்தனர்.

இதேபோல், மற்றொரு கிராமத்தில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 29 வயது இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். இவ்விரு சம்பவங்களுக்கும் நாகா பழங்குடியின அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

உக்ருல் மாவட்டத்தில் கடந்த ஏப்.18-இல் நாகா பழங்குடியினர் இருவர் கொல்லப்பட்டனர். இக்கொலைகளின் பின்னணியில் குகி பழங்குடியின தீவிரவாதிகள் உள்ளதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

தொடரும் வன்முறை: முன்னதாக, மைதேயி சமூகத்தினர் அதிகம் வாழும் விஷ்ணுபூரில் கடந்த ஏப்.7-ஆம் தேதி ஒரு வீட்டின் மீது குகி தீவிரவாதிகள் நடத்திய குண்டுவீச்சில் 2 குழந்தைகள் உயிரிழந்தனர்.


இந்த சம்பவத்தைக் கண்டித்து, பாதுகாப்புப் படை முகாமை போராட்டக்காரர்கள் சூறையாடினர். அப்போது, பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 4 பேர் உயிரிழந்தனர். மைதேயி சமூகத்தினர் பெரும்பான்மையாக உள்ள ஐந்து பள்ளத்தாக்கு மாவட்டங்களில் போராட்டம் தொடர்ந்து வருகிறது. மணிப்பூரில் மைதேயி சமூகத்தினர் மற்றும் குகி பழங்குடியினர் இடையே கடந்த 2023, மே மாதம் கலவரம் தொடங்கியதில் இருந்து இதுவரையிலான வன்முறைகளில் 260-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துவிட்டனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை விட்டு வெளியேறி, அரசின் நிவாரண முகாம்களில் தங்கியுள்ளனர்.

# போருக்குப் பிறகு முதன்முறையாக ஈரானில் விமான சேவை தொடக்கம்

**தெஹ்ரான், ஏப்.26:**

இரண்டு மாதங்களுக்கு முன்பு அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன் போர் தொடங்கிய பிறகு முதன்முறையாக, தெஹ்ரானின் இமாம் காமேனி சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஈரான் விமான சேவைகளை மீண்டும் தொடங்கியது.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் தற்சமயம் நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில், தெஹ்ரானில் இருந்து ஈரான் வர்த்தக ரீதியான விமான சேவைகளை மீண்டும் தொடங்கியுள்ளது. தெஹ்ரானில் இருந்து இஸ்தான்புல், ஓமனில் உள்ள மஸ்கட் மற்றும் சவுதி அரேபியாவில் உள்ள மதீனா ஆகிய இடங்களுக்கு விமானங்கள் புறப்பட்டதாக அரசு தொலைக்காட்சி செய்தி வெளியிட்டது. போர் நிறுத்தம் ஏற்பட்ட பின்னர், இந்த மாத தொடக்கத்தில் ஈரானின் வான்வெளி பகுதியளவு திறக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கைளெடுக்கப்பட்டுள்ளது.



பேச்சுவார்த்தைக்காக வெள்ளிக்கிழமை இரவு இஸ்லாமாபாத் சென்ற ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, பாகிஸ்தானின் உயர்மட்ட ராணுவ மற்றும் அரசியல் தலைவர்களுடன் இரண்டு சுற்று சந்திப்புகளை நடத்திய நிலையில் வர்த்தக விமான சேவைகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. சனிக்கிழமையன்று அமெரிக்கத் தூதர்கள் இஸ்லாமாபாத் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், ஈரான் தூதுக்குழு மூத்த தலைவர்களுடன் பேச்சுவார்த்தைதகளைத்தொடரும் என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஈரானுடனான போர்நிறுத்தப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்கும் முயற்சியாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ஸ்டீவ் விட்காஃப் மற்றும் ஜாரெட் குஷ்னர் ஆகியோரை பாகிஸ்தானுக்கு அனுப்புவார் என்று வெள்ளை மாளிகை உறுதிப்படுத்தியது. இருப்பினும், அராக்சி வந்தடைந்த சிறிது நேரத்திலேயே, அமெரிக்கப் பிரதிநிதிகளுடனான எந்தவொரு தொடர்பும் மறைமுகமாகவே இருக்கும் என்றும், பாகிஸ்தான் அதிகாரிகள் இரு தரப்பினருக்கும் இடையே செய்திகளைப் பரிமாறிக்கொள்வார்கள் என்றும் ஈரான் கூறியது. இந்த வார தொடக்கத்தில் ட்ரம்ப் போர்நிறுத்தத்தை காலவரையின்றி நீட்டிப்பதாக அறிவித்த பின்னர், அமெரிக்காவையும் ஈரானையும் மீண்டும் பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவர பாகிஸ்தான் முயன்று வருகிறது.

## ஈரானில் மற்றொரு இஸ்ரேலிய உளவாளிக்கு மரண தண்டனை நிறைவேற்றம்!

**தெஹ்ரான், ஏப்.26:**

ஈரானில், அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டதாக எர்ஃபான் கியானி எனும் நபர் கடந்த ஜனவரி மாதம் கைது செய்யப்பட்டார். இஸ்ரேலிய உளவாளிப் பிரிவான மொசாத் அமைப்புக்கு உதவியதாக, கியானியின் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த நிலையில், எர்ஃபான் கியானிக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை சனிக்கிழமை (ஏப். 25) காலை நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், அஷ்ஃபாஹன் நகரத்தில் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தியதாகவும் அவர் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, இஸ்ரேலின் மொசாத் அமைப்புக்காகச் செயல்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஏராளமான நபர்களுக்கு ஈரான் அரசு தொடர்ந்து மரண தண்டனை நிறைவேற்றி வருகின்றது. இத்துடன், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா உடனான போரைத் தொடர்ந்து ஈரான் அரசு தனது கண்காணிப்புகளைத் தீவிரப்படுத்தி வருகிறது.

மேலும், ஈரான் அரசுக்கு எதிரான போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு வருவதாக மனித உரிமை அமைப்புகள் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மதுரோவின் கடத்தலுக்குப் பிறகு! முதல்முறையாக வெனிசுவேலா சென்றார் கொலம்பியா அதிபர்!

**தெஹ்ரான், ஏப்.26:**

வெனிசுவேலா அதிபர் நிகோலஸ் மதுரோ மற்றும் அவரின் மனைவி ஆகியோர் கடந்த ஜனவரி மாதம் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் உத்தரவின்படி அமெரிக்க படைகளால் சிறைப்பிடிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டனர்.

இந்த நிலையில், கொலம்பியா அதிபர் குஸ்தாவோ பெட்ரோ கடந்த வெள்ளிக்கிழமை (ஏப். 24) அரசு முறைப் பயணமாக வெனிசுவேலா தலைநகர் காராகஸுக்குச் சென்றடைந்தார். அதிபர் மதுரோவின் கடத்தலுக்குப் பிறகு வெளிநாட்டு தலைவர் ஒருவர் வெனிசுவேலா வருவது இதுவே முதல்முறையாகும். இதனைத் தொடர்ந்து, வெனிசுவேலாவின் இடைக்கால அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸை நேரில் சந்தித்த அதிபர் பெட்ரோ, புலம்பெயர்வு, எல்லைப் பாதுகாப்பு, தொழிற்சாலை ஒத்துழைப்பு மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளில் இருநாடுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இத்துடன், வெனிசுவேலா எல்லையில் அமைந்துள்ள கொலம்பியாவின் கட்டும்போட் பகுதியில் நடைபெற்று வரும் ஆயுதக்குழுவினரின் தாக்குதல்கள் குறித்த உரையாடல்கள் இந்த நிகழ்வில் நடைபெற்றதாகக் கூறப்பட்டுள்ளது. முன்னதாக, அதிபர் பெட்ரோ மற்றும் ரோட்ரிக்ஸ் ஆகியோர் கடந்த மாதம் இருநாட்டு எல்லையில் சந்திக்கத் திட்டமிட்டிருந்த நிலையில், இறுதிநேரத்தில் அந்தச் சந்திப்பு அந்நாட்டு அரசுகளால் ரத்து செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## அமைதிப்பேச்சு! பாக். ராணுவத் தளபதியுடன் ஈரானிய வெளியுறவு அமைச்சர் சந்திப்பு!

**இஸ்லாமாபாத், ஏப்.26:**

பாகிஸ்தான் சென்றுள்ள ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி அந்நாட்டு ராணுவத் தலைமைத் தளபதி ஆசிம் முனீரை நேரில் சந்தித்து உரையாடியுள்ளார்.

பாகிஸ்தான் தலைமையில் நடைபெறும் அமெரிக்கா உடனான 2 ஆம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்க, ஈரானிய வெளியுறவு அமைச்சர் அராக்சி தலைமையிலானபிரதிநிதிக்குழுவினர்கடந்தவெள்ளிக்கிழமை (ஏப். 24) மாலை இஸ்லாமாபாத் சென்றடைந்தார். இந்த நிலையில், இஸ்லாமாபாதில் பாகிஸ்தான் ராணுவத் தலைமைத் தளபதி ஆசிம் முனீருடன் ஈரானிய அதிகாரிகள் முக்கிய உரையாடல்களை மேற்கொண்டதாக, சனிக்கிழமை காலை ஈரான் தூதரகம் தெரிவித்துள்ளது. இந்த நிகழ்வில், ஈரானிய வெளியுறவு செய்தித்தொடர்பாளர் இஸ்மாயில் பகாயி மற்றும் தூதர் ரெசா அமிரி மொக்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். இருப்பினும், இந்த உரையாடல் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. முன்னதாக, அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் மருமகனும் அவர் நிர்வாகத்தின் மூத்த அதிகாரியுமான ஜாரட் குஷ்னர் தலைமையிலான குழுவினர் இன்று பாகிஸ்தான் செல்லவுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. மேலும், தோல்வியடைந்த முதற்கட்ட அமைதிப்பேச்சுக்குத் தலைமைத் தாங்கிய அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ், 2 ஆம் கட்ட பேச்சுவார்த்தையில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## விவிலிய காலத்து பழங்குடியின வம்சாவளியைச் சேர்ந்த மணிப்பூர் யூதர்களுக்கு இஸ்ரேலில் வரவேற்பு

**டெல்அவிவ், ஏப்.26:**

மணிப்பூரில் வசித்து வந்த விவிலிய காலத்து இஸ்ரேலின் பழங்குடியின வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படும் 250-க்கும் மேற்பட்ட இந்தியர்கள், வியாழக்கிழமை இஸ்ரேல் சென்றடைந்தனர்.



இந்தியாவில் இருந்து அவர்களை இஸ்ரேலில் குடியமர்த்துவதற்காக அந்நாட்டு அரசு மேற்கொண்டு வரும் சிறப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக அவர்கள் நேற்றுமுன்தினம் டெல் அவிவ் விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இஸ்ரேலிய தேசியக் கொடியின் நிறங்களான நீலம் மற்றும் வெள்ளை நிற பலூன்களால் அமைக்கப்பட்ட வளைவின் கீழ் வந்திறங்கிய அவர்களை, அங்கிருந்தவர்கள் பாரம்பரிய யூதப் பாடல்களைப் பாடி உற்சாகமாக வரவேற்றனர்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் இருந்து சுமார் 4,600 "பெனே மெனாஷே' சமூகத்தினரை இஸ்ரேலுக்கு அழைத்து வர அந்நாட்டு அரசு கடந்த நவம்பரில் முடிவெடுத்தது. அதன் பிறகு இஸ்ரேல் வந்தடைந்த முதல் குழுவினர் இவர்கள்தான்" என்பது குறிப்பிடத்தக்கது. கி.மு. 720-ல் அசிரியன் படையெடுப்பாளர்களால் நாடு கடத்தப்பட்ட இஸ்ரேலின் 10 பழங்குடி இனங்களில் ஒன்றான 'மெனாஷே' வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் இவர்கள்.

சுமார் 20 ஆண்டுகளாக இஸ்ரேலில் வசித்து வரும் தாகன் சோலட் என்பவர், சகோதரராக கருதும் தனது நண்பரை வரவேற்க விமான நிலையம் வந்திருந்தார். அவர் கூறுகையில், "மணிப்பூரில் நாங்கள் அண்டை வீட்டார். எங்கள் கிராமத்தில் இருந்த ஒரு சில யூதக் குடும்பங்களில் எங்களது குடும்பங்களும் அடங்கும். ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு எனது நண்பரை இன்று பார்க்கிறேன். இந்தியாவில் இருந்த போது எனது மகனை அவர் தனது கைகளிலேயே சுமந்து வளர்த்தார்" என நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

## ஈரான் உடனான அமைதிப் பேச்சு தோல்வி அடைந்தால் ஹார்முஸ் ஜலசந்தியை தாக்க அமெரிக்கா திட்டம்

**வாஷிங்டன், ஏப்.26:**

ஈரான் உடனான அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தால் ஹார்முஸ் ஜலசந்தியில் தாக்குதல் நடத்த அமெரிக்க ராணுவம் திட்டமிட்டு உள்ளது.

கடந்த பிப்ரவரி 28-ம் தேதி முதல் அமெரிக்கா, ஈரான் இடையே போர் நடைபெற்று வந்தது. கடந்த 8-ம் தேதி இருதரப்பு இடையே போர் நிறுத்தம் அமல் செய்யப்பட்டது. இந்த இரு வார போர் நிறுத்தம் கடந்த 23-ம் தேதியுடன் நிறைவடைந்தது. அன்றைய தினம் காலவரையின்றி போர் நிறுத்தத்தை நீட்டிப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்தார்.

போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் ராணுவம் மூடியுள்ளது. இதேபோல இந்த ஜலசந்தியின் இருபுறமும் அமெரிக்க போர்க்கப்பல்கள் நிறுத்தப்பட்டு உள்ளன. இந்த சூழலில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில், "காலம் கடந்து சென்று கொண்டிருக்கிறது. ஈரான் தரப்பு விரைந்து முடிவு எடுக்க வேண்டும்" என்று எச்சரித்துள்ளார்.

ஈரான் உச்ச தலைவர் மோஜ் தபா காமேனி நேற்று வெளியிட்ட அறிக்கையில், "ஈரான் தேசப்பற்றாளர்களின் ஒற்றுமையால் எதிரிகளின் கூட்டணியில் விரிசல் ஏற்பட்டு இருக்கிறது. ஈரான் மக்களின் மனதில் அச்சத்தை விதைக்க எதிரி நாடு முயற்சி செய்கிறது. இதற்கு இடம் கொடுக்கக் கூடாது" என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே அமெரிக்கா, ஈரான் இடையே அமைதி ஒப்பந்தத்தை இறுதி செய்ய பாகிஸ்தான், துருக்கி, எகிப்து உள்ளிட்ட நாடுகள் தீவிர முயற்சி செய்து வருகின்றன. இதுதொடர்பாக அமெரிக்க ராணுவ வட்டாரங்கள் கூறியதாவது: சீனாவில் இருந்து ஈரானுக்கு ஆயுதங்கள், வெடிபொருட்கள் கொண்டு செல்வதை தடுக்க ஹார்முஸ் ஜலசந்தி பகுதியை முழுமையாக முடக்கி உள்ளோம்.

ஈரானின் சரக்கு கப்பல்களை அடுத்தடுத்து கைப்பற்றி வருகிறோம். இதனால் ராணுவ, பொருளாதார ரீதியிலான நெருக்கடியை சமாளிக்க முடியாமல் அமைதி ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திடும் என்று எதிர்பார்க்கிறோம். ஒருவேளை அமைதி பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தால் ஹார்முஸ் ஜலசந்தியில் மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படும். தற்போது 19 போர்க்கப்பல்கள் மத்திய கிழக்கில் முகாமிட்டு உள்ளன.

## பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி சீனா பயணம்

**இஸ்லாமாபாத், ஏப்.26:**

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி, அரசு முறை சுற்றுப்பயணமாக இன்று சீனா செல்கிறார். இந்த பயணத்தின்போது பாகிஸ்தான்-சீனா இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்தும், இரு நாடுகளுக்கு இடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பு குறித்து சீன அரசுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார் என பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இன்றைய தினம் பாகிஸ்தான் செல்லும் ஆசிப் அலி சர்தாரி, வரும் 27-ந்தேதி வரை சங்ஷா, ஹுனான் ஆகிய மாகாணங்களுக்கும், தொடர்ந்து 28-ந்தேதி முதல் மே 1-ந்தேதிவரை சன்யா, ஹைனான் ஆகிய மாகாணங்களுக்கும் செல்ல உள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்-சீனாவும் இடையே தூதரக உறவுகள் நிறுவப்பட்டதன் 75வது ஆண்டு நிறைவு விழா தற்போது கொண்டாடப்பட்டு வரும் நிலையில், பாகிஸ்தான் ஜனாதிபதியின் இந்த பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. அதே சமயம், ஈரான்-அமெரிக்கா இடையே 2-ம் கட்ட பேச்சுவார்த்தைகள் பாகிஸ்தானில் நடைபெற வாய்ப்புள்ளதாக கூறப்படும் நிலையில், தற்போது இந்த பயணத்தை பாகிஸ்தான் அதிபர் மேற்கொண்டிருப்பது சர்வதேச அளவில் கவனம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பொருளாதார நெருக்கடி: உக்ரைனுக்கு ரூ.10 லட்சம் கோடி நிதி உதவி

**கீவ், ஏப்.26:**

ரஷியாவுடன் கடந்த 4 ஆண்டுகளுக்கும் மேலாகக் கடும் போர் புரிந்து வரும் உக்ரைன் நாடு, முன்னெப்போதும் இல்லாத வகையில் கடுமையான நிதிய நெருக்கடியில் சிக்கித் தவித்து வரு கிறது. போருக்காகத் தன் கஜானாவைக் காலி செய்துள்ள உக்ரைனுக்கு. புதிய உயிர் கொடுக் கும் வகையில் சுமார் ரூ.10 லட்சம் கோடி (90 பில்லியன் யூரோ) நிதியுதவி வழங்க ஐரோப்பிய யூனியன் அதிகாரப்பூர்வமாக ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நிதியுதவிக்கு முட்டுக்கட்டை போட்டு வந்த ஹங்கேரி பிரதமர் விக்டர் ஓர்பன், சமீபத்திய தேர்தலில் தோல்வியைத் தழுவினார். இதையடுத்து அங்கு அமைந்த புதிய அரசு, இந்த திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்ததால் பல மாதங்களாக முடங்கிக் கிடந்த நிதி சிக்கல் தற்போது முடிவுக்கு வந்துள்ளது.

இந்த நிதியுதவி குறித்து உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி கூறுகையில் "இந்த நிதி எங்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய நிம்மதி. இருப்பினும், இது முழுமையானது அல்ல. எங்களின் ஆயுதத் தொழிற்சாலைகளின் முழுத் திறனில் 60 சதவீதத்தை மட்டுமே இந்த நிதியால் பயன்படுத்த முடியும். மின்சாரக் கட்டமைப்பைச் சீரமைக்க இன்னும் கூடுதல் நிதி தேவைப்படுகிறது." என உருக்கமாக தெரிவித்துள்ளார்.

ஜூன் மாதத்துக்குள் இந்த நிதி கிடைக்காவிட்டால் அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கக் கூட முடியாத நிலை ஏற்பட்டிருக்கும். தற்போது இந்த நிதி உக்ரைனுக்குப் புதிய நம்பிக்கையை அளித்துள்ளதாகவும் பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

## ஜப்பானில் பயங்கர காட்டுத்தீ; பாதுகாப்பு கருதி 2,500 பேர் வெளியேற்றம்



**டோக்கியோ, ஏப்.26:**

ஜப்பானின் இவாதே மாகாணத்தில் உள்ள வனப்பகுதியில் பயங்கர காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. இந்த தீயானது வனப்பகுதிக்கு அருகில் உள்ள ஓட்சுச்சி(OTSUCHI) நகரை நோக்கி வேகமாக பரவி வருவதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, அப்பகுதியில் வசிக்கும் 2,500-க்கும் மேற்பட்ட மக்களை வெளியேற்ற நகர நிர்வாகம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை தொடங்கிய இந்த தீயை கட்டுக்குள் கொண்டு வருவதற்காக தீயணைப்பு வீரர்கள் இரவு, பகலாக முயன்று வருகின்றனர்.

இந்த காட்டுத்தீயால் இதுவரை 2,700 ஏக்கருக்கு மேற்பட்ட வனப்பகுதி எரிந்து நாசமானதாகவும், 8 கட்டிடங்கள் சேதமடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. தொடர்ந்து தரை மற்றும் வான்வழி மூலம் தீயை அணைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

## ஈரான் போர் தாக்கம்: அமெரிக்காவின் ஆயுத கையிருப்பு கணிசமாகக் குறைந்தது!

**வாஷிங்டன், ஏப்.26:**

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் கடந்த மார்ச் 28-ம் தேதி தாக்குதலை தொடங்கின. இந்த போர் 38 நாட்கள் நடைபெற்றது. அதன் பின் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் 2 வார கால சண்டை நிறுத்த ஒப்பந்தம் அறிவித்தார்.



இந்நிலையில் அமெரிக்க ராணுவம் கூறியதாவது: ஈரானில் மொத்தம் 13,000-க்கும் மேற்பட்ட இலக்குகளைத் தாக்கினோம். ஈரான் போரில் 1,000-க்கும் மேற்பட்ட டொமஹாக் ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டன. இது அமெரிக்க ராணுவம் ஒவ்வொரு ஆண்டும் வாங்கும் எண்ணிக்கையை விட 10 மடங்கும் அதிகம். ஒரு டொமஹாக் ஏவுகணையின் விலை 3.6 மில்லியன் டாலர்.

இவை தொலைதூர இலக்குகளைத் தாக்கும் திறன் படைத்தவை. ஈரான் போரில் 1,000-க்கும் மேற்பட்ட டொமஹாக் ஏவுகணை பயன்படுத்தப்பட்டதால், அமெரிக்காவின் டொமஹாக் ஏவுகணையின் கையிருப்பு 3,000-மாக குறைந்துள்ளது. இதேபோல், எதிரி விமானங்கள் மற்றும் ஏவுகணைகளை நடுவானில் இடைமறித்து அழிக்க 1,200 பேட்ரியாட் ஏவுகணைகளை ஈரான் போரில் அமெரிக்கா பயன்படுத்தியது.

இதன் விலை 4 மில்லியன் டாலருக்கு மேலாகும். கடந்தாண்டில் 600 பேட்ரியாட் ஏவுகணைகளை மட்டுமே அமெரிக்கா உற்பத்தி செய்தது. மேலும், வானில் இருந்து தரை இலக்குகளை தாக்கும் 1,100 (ஜாஸ்மர்) ஏவுகணைகளையும் அமெரிக்க ராணுவம் ஈரான் போரில் பயன்படுத்தியது. இதன் காரணமாக இந்த வகை ஏவுகணைகள் அமெரிக்க ராணுவத்தில் தற்போது 1,500 மட்டுமே இருப்பில் உள்ளது. இது 600 மைல் தூரமுள்ள இலக்குகளைத் தாக்கும்.

இதன் விலை 1.1 மில்லியன் டாலர். 1,000-க்கும் மேற்பட்ட ஏடிஏசிஎம்எஸ் என்ற தரை இலக்குகளைத் தாக்கும் ஏவுகணைகளையும் ஈரான் போரில் அமெரிக்கா பயன்படுத்தியது. இவ்வாறு அமெரிக்க ராணுவம் கூறியுள்ளது. ஈரான் போர் காரணமாக ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்களில் ஆயுத கையிருப்பு குறைந்துள்ளது.

ஈரானின் விலை குறைந்த ட்ரோன் தாக்குதலை சமாளிக்க, அமெரிக்கா அதிக விலையுள்ள பேட்ரியாட் ரக ஏவுகணைகளைப் பயன்படுத்தியது.

காலியான ஆயுதங்களை மீண்டும் வாங்க கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என அமெரிக்க நாடாளுமன்றத்தில் பென்டகன் கோரிக்கை விடுத்துள்ளது. இதற்கு வெகு நாட்களாகும் எனத் தெரிகிறது.

# வாக்கு எண்ணும் மையங்களில் தினமும் 2 முறை சென்று ஆய்வு நடத்த வேண்டும்: தேர்தல் ஆணையம் உத்தரவு




# தமிழ்நாடு, மேற்கு வங்கத்தில் எங்கும் மறு வாக்குப்பதிவு இல்லை: தேர்தல் அதிகாரிகள்

# மதுரை சித்திரை திருவிழாவிற்கான பணிகள் மும்முரம்

# ஆன்த்ரோபிக் ‘மித்தோஸ்’ ஏஐ-யால் அச்சுறுத்தல்: வங்கிகளுக்கு எச்சரிக்கை

# கம்பம் பட்டாசு ஆலையில் விபத்து: 2 தொழிலாளர்கள் உயிரிழப்பு

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com
Tamilnaduepaper

சென்னை
26.04.2026 ஞாயிற்றுக்கிழமை
இலவச இ–பேப்பர்